# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 32 | சுடர் 31 | கதிர் 314 | வள்ளுவர் ஆண்டு 2047 | புரட்டாதி 19, புதன்கிழமை 05.10.2016


## டில்லியில் ரணில்



புதுடில்லி, ஒக்.5
மூன்று நாள் பயணமாக பிரதமர் ரணில் விக்கிரம சிங்க நேற்று புதுடில் லியைச் சென்றடைந்தார். நியூசிலாந்தில் இருந்து புதுடில்லி விமான நிலையத்தைச் சென்றடைந்த பிரதமர் ரணில் >> 06ஆம் பக்கம்

## வரவிருக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முன்னரைவிடவும் மோசமாக இருக்கக்கூடும்

### அச்சம் வெளியிட்டார் சுமந்திரன் எம்.பி.

கொழும்பு, ஒக். 5
பயங்கரவாதத் தடைச் சட்டத்துக் குப் பதிலாகக் கொண்டுவரவிருக் கும் சட்டமானது முன்னரைவிட மோசமானதாக இருக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப் பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
நாடாளுமன்றில் நேற்று நடை பெற்ற குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக்கோவை (திருத்த) சட்ட வரைவு மற்றும் சட்ட ஆணைக் குழு திருத்தச் சட்டவரைவு தொடர் பான விவா >> 06ஆம் பக்கம்

## சிகரெட் விலை 7 ரூபாதான் அதிகரித்தது

கொழும்பு, ஒக். 5
சிகரெட் ஒன்றுக்கு 7 ரூபாவால் விலை அதி கரிக்கப்பட்டதாக நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்க >> 27ஆம் பக்கம்

## சபைக்குத் தெரியாமல் லண்டனில் ஒப்பந்தம்

### முதலமைச்சர் விக்னேஸ்வரன் 18ஆம் திகதி கைச்சாத்திடுகிறார்
### ஆட்சி, சுகாதாரம், கல்வி, வர்த்தக அறிவைப் பகிர்ந்துகொள்ள

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 5
வடக்கு மாகாண சபைக்கு அறிவிக்காமல் - அதன் அனுமதி பெறாமல் - யாழ்ப்பா ணத்துக்கும் லண்டனில் உள்ள கிங்ஸ் டன் நகர சபைக்கும் இடையில் எதிர்வரும் 18ஆம் திகதி ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட உள்ளார் வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.
இந்த ஒப்பந்தம் குறித்து வடக்கு மாகாண சபைக்குத் தெரிவிக்கப்படவோ விளக்கம் அளிக்கப்படவோ இல்லை என்று தெரிவித்தார் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம்.
இங்கிலாந்தின் தலைநகர் >> 27ஆம் பக்கம்

## கொழும்புக்குக் கடத்தவிருந்த 102 கிலோ கஞ்சா சிக்கியது

### ஒருவர் கைது



வவுனியா, ஒக். 5
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு கடத்தவிருந்த ஒன்ற ரைக் கோடி பெறுமதி யான 102 கிலோ கேரள கஞ்சா வவுனி யாவில் வைத்து கைப் பற்றப்பட்டது. சம்பவத் துடன் தொடர் புடைய வர் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டதாக வவுனி யாப் பொலிஸார் தெரிவித்தனர்.
வவுனியா - மன்னார் சந்தியில் நேற்று அதிகாலை மேற்கொள் ளப்பட்ட வீதிச்சோதனை நடவடிக் கையிலேயே கஞ்சா மீட்கப்பட்ட தாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
வன்னிப் பிரதிப் பொலிஸ்மா அதி பர் தேசபந்து தென்னக்கோனின் பணிப்பில் வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சோம ரத்தின >> 27ஆம் பக்கம்

## விக்கியின் ஊர்வலம் குறித்து விரைவில் ரணில் அறிக்கை

கொழும்பு, ஒக். 5
யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற ஊர்வலம் தொடர்பி லும், வடக்கு மாகாண முதலமைச் சர் வெளியிட்ட அறிவிப்புகள் சம் பந்தமாகவும் அரசின் உத்தியோக பூர்வ நிலைப்பாட்டை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விரைவில் வெளியிடுவார் என்று சபை முதல் வரும் அமைச்சருமான லக்ஸ் மன் கிரியெல்ல தெரிவித்தார்.
நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடி யது. நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புக் >> 29ஆம் பக்கம்

### தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேறு

## மாகாணத்தின் முதலிடம் வவுனியா மாவட்டத்துக்கு

### யாழ். மாவட்டத்தில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை முதலிடம்



அபிசிகன்

யாழ்ப்பாணம், ஒக். 5
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வவுனியா இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் கோகுலதாசன் அபிசிகன் 195 புள்ளிகள் பெற்று வடக்கு மாகாணத்தில் முதலாமிடத்தைப் பெற்றார்.
கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றிரவு வெளியாகின.
அதன்படி, யாழ்.மாவட்டத்தில் >> 28ஆம் பக்கம்



ஜெஜனி

## தெற்கில் காட்டப்படுவதுபோல் விக்னேஸ்வரன் கூறவேயில்லை

### நாடாளுமன்றத்தில் நேற்று அதனை நியாயப்படுத்தினார் சம்பந்தன்

கொழும்பு, ஒக். 5
வடக்கு மாகாண முதல மைச்சர் க.வி.விக்னேஸ் வரன், யாழ்ப்பாண ஊர் வலத்தில் கூறியதாக மகிந்த அணியினர் முன்வைக்கும் கருத்துக்களைத் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் தலை வரும் எதிர்க்கட்சித் தலை வருமான இரா.சம்பந்தன் நேற்று நிராகரித்தார். ஊர் வலத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் கூறினார் என்ற சர்ச்சைகளுக்குக் காரணம் காட்டப்படும் விட யங்கள், அவரால் கூறப்பட் டிருக்கவில்லை என்றும் சம்பந்தன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் நடத்தப் பட்ட ஊர்வலத்தில் பௌத்த சாசனத்துக்கும் அரசமைப் புக்கும் முரணான வகை யில் விக்னேஸ்வரன் கருத் துக்களை >> 29ஆம் பக்கம்

## உட்கட்சிப் பூசலின் உச்சமே விக்கி நடத்திய ஊர்வலம்

### இப்படிச் சொல்கிறார் அவரது சம்பந்தியான வாசுதேவ எம்.பி.



கொழும்பு, ஒக். 5
தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் உட்கட்சிப் பூசலின் வெளிப்பாடே முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமை யில் யாழ்ப்பாணத்தில் நடை பெற்ற ஊர்வலம் என்று மகிந்த ஆதரவு அணி நாடாளு மன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.
உதயனுக்கு வழங்கிய சிறப் புச் செவ்வியிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட் டார்.
நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ >> 27ஆம் பக்கம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யூனியன்குளம் காட்டுக்குள் ஆணின் உருக்குலைந்த சடலம்

## விறகு வெட்டச் சென்றோர் கண்டு கிளி. பொலிஸாருக்குத் தகவல்

கிளிநொச்சி, ஒக்.5

கிளிநொச்சி, யூனியன்குளம் காட்டுக்குள் உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது என கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

மக்கள் குடியிருப்பில் இருந்து பல கிலோமீற்றர் தூரத்தில் சடலம் காணப்பட்டது. விறகு வெட்டச் சென்றவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் சடலம் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவருக்கு சுமார் 65 வயது இருக்கலாம். சடலத்துக்கு அருகே காணப்பட்ட பொருள்களைப் பார்க்கும்போது உயிரிழந்தவர் மனநலம் பாதிக்கப்பட்டவராக இருக்கலாம் எனச் சந்தேகிக்கின்றோம். மேலதிக விசாரணைகள் நடத்தப்படும். கிளிநொச்சி குற்றத் தடயவியல் பொலிஸாருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது- என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ற-4,21,35)

# துணுக்காய், பாண்டியன்குளத்தில் மணல் அகழ்வு உடனடியாக நிறுத்தம்

## முல்லை. மாவட்டச் செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 5

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் மற்றும் பாண்டியன்குளம் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இடம்பெறும் கிரவல் மற்றும் ஆற்று மணல் அகழ்வை உடனே நிறுத்துமாறு நேற்றைய தினம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற சுற்றுச் சூழல் கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டது.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் உள்ளூர் கனிய வளங்கள் அதிகமாக அகழ்வுகள் இடம்பெறுவதனால், அதனைத். தடுக்க வேண்டும் என்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அந்தத் தீர்மானம் தொடர்பில் நேற்றைய கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது. இதன் பிரகாரம் துணுக்காய் மற்றும் பாண்டியன்குளம் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இடம்பெறும் கனிய வளங்களான கிரவல் மற்றும் ஆற்று மணல் அகழ்வு உடனடியாக முற்றாக நிறுத்தப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு நிறுத்தப்படும் கனிய வளங்கள் அகழ்வை தேவைகள் ஏற்படின் சுற்றுச் சூழல் ஆய்வுகளின் பின்னர் பாதிப்புக்கள் ஏதும் இல்லாதிருப்பின், அவை தொடர்பில் ஆராய்ந்து முடிவெடுக்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்தின் ஊடாக வெளி மாவட்டங்களுக்கு விநியோகிப்பதற்கோ அல்லது உள்ளூர் பயன்பாட்டுக்கோ என்று இல்லாமல் சகல தேவைகளுக்கும் அகழ்வது தடை செய்யப்படுகிறது- என்றார்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் தலைமையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் சகல பிரதேச செயலாளர்கள், வன வளத் திணைக்களம், சுற்றுச் சூழல் திணைக்களம், கனிய வளத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் பல கட்டுமானங்களுக்கு முல்லைத்தீவிலிருந்தே யாழ்ப்பாணத்துக்கு அதிகளவான மணல் ஏற்றிவரப்படுகின்றது. (வ- 101)



வடக்கு மாகாண சபை பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதனின் பூதவுடலுக்கு தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா நேற்று அஞ்சலி செலுத்தினார். (ற-21,ரி7)

# அறுவர் கைது

மோதல் சம்பவத்தில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்படும் 6 பேரை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் மன்று நேற்று உத்தரவிட்டது.

நாவற்குழி மகா வித்தியாலயத்துக்கு அருகில் இரு பகுதியினருக்கு இடையில் கடந்த 29ஆம் திகதி மோதல் இடம்பெற்றது. அது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. இவர்களை எதிர் வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (வ-9)



சுவிற்ஸர்லாந்தைச் சேர்ந்த குழு நேற்று கிளிநொச்சிக்குப் பயணம் மேற்கொண்டது. அறிவியல் நகரில் இயங்கும் ஜேர்மன் ரெக் நிறுவனத்தை அந்தக் குழு பார்வையிட்டது. அங்குள்ள மாணவர்களுடன் கலந்துரையாடியது. ஜேர்மன் ரெக் நிறுவனம் இந்த ஆண்டு ஜனாதிபதியால் திறக்கப்பட்டது. (ற-4,ரி3,34)

# நெளுக்குளம் கலைமகள் ம.வி. முதல்வர் விடுதியால் குழப்பம்

## எதிர்ப்புத் தெரிவித்து பழைய மாணவர்கள் ஆர்ப்பாட்டம்



வவுனியா, ஒக்.5

வவுனியா, நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்படும் பாடசாலை முதல்வர் விடுதிக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாடசாலையின் பழைய மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். நேற்றுக் காலை பாடசாலை முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

பாடசாலை மைதானத்துக்குள் விடுதி அமைக்கப்படுகின்றது. இதனால் மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படும். மைதானத்தின் இட வசதி குறைந்துவிடும் - என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பழைய மாணவர்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தை அடுத்து நெளுக்குளம் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து ஆர்ப்பாட்டத்தைத் தடுத்தனர். பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபருடன் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

அதில் கட்டடம் அமைத்த பின்னர் இனி ஒன்றும் செய்ய முடியாது என்று பாடசாலைத் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

கட்டடத்துக்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவித்தோம். கட்டடத்தைக் கட்டி முடித்தால் அகற்ற முடியாது என்றும் தெரிவித்திருந்தோம். பாடசாலை மைதானம் தற்போது சிறியதாகவே உள்ளது. அதில் விடுதியையும் அமைத்தால் எதிர்காலத்தில் மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாதுபோய்விடும். விடுதியை மைதானத்தில் அமைக்க வேண்டாம் - என்று பழைய மாணவர்கள் வலியுறுத்தினர்.

இதுகுறித்து வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் திரு. எம். பி. நட்ராஜ் தெரிவித்ததாவது:

மைதானத்துக்குள் அதிபர் விடுதி அமைக்கப்பட[illegible] விடுதி அமைப்பதால் [illegible]னத்துக்கோ மாணவர்களின் விளையாட்டுக்கோ எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. எதிர்காலத்தில் இவ்வாறான கட்டடங்கள் அமைக்கப்படமாட்டாது என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. குறித்த கட்டடம் அமைக்கப்பட்டு ஒரு கட்டத்தை அடைந்துள்ளது. அதை மாணவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். அதைத் தடுத்து நிறுத்த முடியாது. அவ்வாறு நிறுத்தும் பட்சத்தில் பாடசாலைக்கு கிடைக்க வேண்டிய வளங்கள் எதிர் காலத்தில் கிடைக்காமலும் போகலாம். இவற்றைக் கருத்திற்கொண்டு கட்டடத்தை அமைப்பதற்கு மாணவர்கள் பூரண [illegible] என்று [illegible] கோரப்பட்டது - என்றார். (ற-21)

# இந்திய மீனவர்கள் ஐவர் நெடுந்தீவுக் கடலில் கைது



யாழ்ப்பாணம், ஒக்.5

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் ஐவர் நேற்று அதிகாலை கடற்படையால் கைது செய்யப்பட்டனர். நெடுந்தீவுக் கடற்பரப்பில் மீன்பிடித்தபோது அவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களின் இழுவைப் படகும் கைப்பற்றப்பட்டது.

கைதானவர்கள் இந்தியாவின் ஜெகதாப்பட்டினத்தைச் சேர்ந்தவர்கள் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் காங்கேசன் துறைக்குக் கொண்டு செல்லப்பட்டு. சோதனைகளின் பின்னர் யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

குறித்த ஐவரும் நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர் வரும் 17ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ற-4,101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி உறுதி கைமாற்றல் குறித்த கலந்துரையாடல் சனியன்று யாழ். நூலகத்தில்

யாழ்ப்பாணம், ஒக். 5

காணிக் கைமாற்றத்தின்போதான உறுதி முடிப்பின் பெறுமதி நடைமுறை மற்றும் உறுதிக்கைமாற்றத்தின் போது கைக் கொள்ளும் வழிமுறைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக யாழ்.மாவட்டத்தில் உள்ள சட்டத்தரணிகள் மற்றும் நொத்தாரிஸ்களுக்கான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண முதன்மைச் செயலாளர் அ.பத்திநாதன் தலைமையில் யாழ். பொது நூலகத்தில் எதிர்வரும் சனிக்கிழமை மு.ப. 9 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் இடம்பெறுகிறது.

யாழ்ப்பாணக் குடா நாட்டில் தற்போது உறுதி முடிப்புச் சட்டத்தரணிகளாக சுமார் 150 பேரும், நொத்தாரிசாக 30 பேரும் கடமையாற்றுகின்றனர்.

இந்தக் கலந்துரையாடலில் முதன்மைச் செயலாளருடன் வடக்கு மாகாண இறைவரித் திணைக்களம், வடக்கு மாகாண பதிவாளர் திணைக்களம் மற்றும் வங்கியாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-101)

## கதவு உடைத்து நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஒக்.5

கோண்டாவில் கிழக்கு செபஸ்ரியார் வீதியில் உள்ள வீடு ஒன்றின் பின்பக்க கதவு உடைக்கப்பட்டு நகைகள் மற்றும் பெறுமதியான அலைபேசிகளை திருடப்பட்டன. இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்துள்ளது.

திருடப்பட்ட பொருள்களின் பெறுமதி 2 இலட்சத்து 14 ஆயிரத்து 500 ரூபா என்று வீட்டு உரிமையாளர் தனது முறைப்பாட்டில் தெரிவித்தார். சம்பவம் இடம்பெற்றதினம் பகல், வீட்டில் இருந்த அனைவரும்வெளியில்சென்றிருந்தனர். வழக்குப் பதிவு செய்துள்ள கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ற-5,107)


**அறைகள் வாடகைக்கு**

கொட்டடி, சீனிவாசகம் லேன், இல.72 இல் சகல வசதிகளும் கொண்ட அறைகள் வாடகைக்கு உண்டு. (தனித்தனி அறைகளாக மட்டும் கொடுக்கப்படும்)

(பார்வையிடும் நேரம் 9-4 மணிவரை)

**தொடர்பு: 077 3736630**

**Personal Class**

உயிரியல், இரசாயனவியல் } A/L
கணிதம், விஞ்ஞானம் } O/L

37 வருட Pastpapers & Theory கற்பிக்கப்படும்.

**TP.No : 075 6295662**



**பாராட்டி வாழ்த்துகிறோம்**

2016.10.05 ஆம் திகதியாகிய இன்று கொழும்பு தாமரைத்தடாக அரங்கியல் மண்டபத்தில் அதிமேதகு ஜனாதிபதியிடம் "குருபிரதீபா பிரபா" கௌரவ விருது பெறும்

திருமதி

**ஜெயதேவி ஸ்ரீஸ்கந்தராஜா**

(அதிபர் BA.B.G.D.E (MERIT)

அவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பதவி உயர்வுகளை பெற்று சேவையாற்ற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாரந்தனை, ஊர்காவற்றுறை. — உறவினர்கள்.

**சரவணா ரெக்ஸ்**

**நல்லூர்**

(வேறு கிளைகள் இல்லை)

October - 6 ஆம் திகதி ஆசிரியர் தினத்தை முன்னிட்டு இம்மாதம் 4ஆம் 5ஆம் 6ஆம் 7ஆம் 8ஆம் ஆகிய தினங்களில் Office Wear சாறிகள் புத்தம் புதிய தெரிவுகள் மலிவு விற்பனைக்கு.



**சரவணா ரெக்ஸ்**

526, 529 பருத்தித்துறை வீதி, நல்லூர் (சிவன் கோயில் அருகில்) யாழ்ப்பாணம்,

**விசேட பொதுக் கூட்டம்**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்**

**காலம் :** 16.10.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி

**இடம் :** சபாலிங்கம் கேட்போர் கூடம், யாழ். இந்துக் கல்லூரி

கலந்துரையாடவுள்ள விடயங்கள்:
1) யாப்பு சீர்திருத்தம் (2ஆம் வாசிப்பு)
2) நீதிசார் குழுவின் அறிக்கை
3) பிறவிடயங்கள்

(யாப்பின் நகலை எமது இணையத்தில் பார்வையிடலாம்)

த.சிவரூபன்
செயலாளர்

**கிறிஸ்தவ இறையியல் கல்லூரி மருதனார்மடம்**

தனது நூலகத்திற்கான நூலகர் பதவி வெற்றிடத்திற்கு பொருத்தமான ஒருவரை தேடுகிறது. விண்ணப்பதாரி நூலக விஞ்ஞானத்தில் டிப்ளோமா பட்டம் பெற்றவராயிருப்பது அவசியமாகும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். நேரில்/தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

அருட்திரு.ம.யூட் சுதர்சன்,
அதிபர்,
அலுவலக தொலைபேசி இல: 021 3213210
principalcts@gmail.com

**வீடு வாடகைக்குத் தேவை**

சிறிய குடும்பம் ஒன்றிற்கு யாழ் நகரை அண்டிய பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.

**தொடர்பு - 077 2975395**

**தொடர்மாடி குடியிருப்புக்கள் & வீடுகள்**
**சகலவித தளபாடங்களுடன் தளிருட்டப்பட்டவை**

குறுகியகால வாடகைக்கு மற்றும் மேற்பட்ட வீடுகள்



- கொள்ளுப்பிட்டி
- வெள்ளவத்தை
- தெஹிவளை
- பம்பலப்பிட்டி

24/7 Security
Air Condition
Fully Furnished

1, 2, 3 படுக்கையறைகளுடன்

info@colomboapartments.lk
HOTLINE 011 480 1818 / 077 354 0632 / 077 633 2580
www.colomboapartments.lk

**பாரிராஜ் பல்பொருள் அங்காடியில்....**

யாழ் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கான செப்டெம்பர், ஒக்டோபர் மாத பண பவுச்சர்களுக்கான உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றது.

மேலும் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு அன்பளிப்புப் பொருள்கள் விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.

**இல.344, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 221 7252**

**விற்பனைக்குண்டு**

**மோட்டார் சைக்கிள்கள்**

1. Bajaj Pulsar 135 - NPBDJ -XXXX
2. Bajaj Pulsar 150 As - NPBDF - XXXX
3. Bajaj Pulsar 150 - NPBBZ - XXXX
4. Bajaj Pulsar 150 - NPBCS - XXXX
5. TVS XL Super HD - NPBCD - XXXX

தொடர்புகளுக்கு - மேனகாந்
**077 060 8074, 077 364 4409**

**Trade Finance & Investments PLC**
No.233, Stanley Road, Jaffna
021 221 9997, 021 222 1898

**கெற்பேலி சம்பாவெளி (பழைய) ஸ்ரீசெம்பவள பிள்ளையார் ஆலய மகா சங்காபிஷேகம்**

எதிர்வரும் 07.10.2016 வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு 1008 கலச சங்காபிஷேகம்

பிரதம குரு

பிரம்மஸ்ரீ தியாக.உமாசுதக் குருக்கள்
ஈழத்துச் சிதம்பரம் காரைநகர்

ஆலய குரு

(பிரம்மஸ்ரீ, செ.விக்னேஸ்வரமூர்த்தி சர்மா)
மீசாலை

மாலை 5.30 மணிக்கு பூந்தண்டிகையில் விநாயகர் வெளி வீதி வலம் வந்து அருள் பாலிப்பார்.

விசேட நிகழ்வு

இரவு 7.30 மணிக்கு இசைக் கச்சேரி

உருத்திரமூர்த்தி லவன் குழுவினர்
எம்.சண்முகராகவன் குழுவினர்
என்.பிரசாத் குழுவினர்

நாதஸ்வர இளவரசன் கே.பி.குமரன் குழுவினரின் நாத சங்கமம்

தொடர்ந்து ஆர்.வி.வாசனின் 'சாரங்கா' குழுவினர் இணைந்து வழங்கும் 'இன்னிசை கானங்கள்' இடம்பெறும்

கெற்பேலி
மிருசுவில்

சம்பாவெளி ( பழைய ) ஸ்ரீ செம்பவள பிள்ளையார் ஆலயம்

**அகவை 60 இல் எம் வாழ்த்துக்கள்**



**சின்னப்பு குமாரசாமி**

( ஊர்காவற்றுறை பிரதேச சபை சித்த ஆயுள் வேத மருந்துக்கலவையாளர்)

அவர்கள் 60 அகவையில் சேவை பூர்த்தி செய்வதனை இட்டு சகல செல்வங்களையும் பெற்று நீடூழிவாழ்க வென நாகம்பாளின் ஆசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

Congratulation

மல்லிகை, காரைநகர். — குடும்பத்தினர். மனைவி, பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மத்திய வங்கி

**கிளிநொச்சி மற்றும் திருகோணமலையிலுள்ள பிரதேச அலுவலகங்களுக்காக ஓட்டுநர்களுடன் சேர்த்து மோட்டார் வாகனங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளுதல்**

திருகோணமலையிலும் கிளிநொச்சியிலுமுள்ள இலங்கை மத்திய வங்கியின் ஒவ்வொரு பிரதேச அலுவலகங்களுக்கும் மோட்டார் வாகனங்களை ஓட்டுநர்களுடன் சேர்த்து வாடகைக்கு வழங்க ஆர்வமுடைய விலைக்குறிப்பீட்டாளர்களிடமிருந்து இத்தால் விலைக்கோரல்கள் கோரப்படுகின்றன.

**எதிர்பார்க்கப்படும் வாகனங்களின் விவரம்:**
பெயரளவு அல்லது உயர்ந்த 2500 சி.சி எந்திர இயலாற்றலைக் கொண்டதும் 01.09.2016 ஆம் நாளன்று 05 ஆண்டு பழமையினை விஞ்சாதது மான டபிள் கப்ஸ் வாகனம்

விலைக்கோரல்கள் 3000 கி.மீற்றர்களுக்கான மாதாந்த வாடகையினையும் மேலதிக கி.மீற்றர்களுக்கான வீதத்தினையும் ஓட்டுநர்களின் கோரல்களையும் (மேலதிக நேரம், வாழ்க்கைப்படி போன்றவை) உள்ளடக்குதல் வேண்டும்.

விலைக்குறிப்பீட்டு ஆவணங்களின் முழுமையான தொகுதியை வழமையான வேலைநாள்களில் முற்பகல் 10.00 மணியிலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை தொடர்பான பிரதேச அலுவலகங்களில் அல்லது வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கி கொழும்பு 01 இல் பெற்றுக்கொள்ள முடியும்.

விலைக்கோரல்கள் ஒன்றில் 2016 ஒக்ரோபர் 19 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்குப் பிந்தாமல் **பணிப்பாளர் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, கொழும்பு - 01** என்ற முகவரியினை அடையும் விதத்தில் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும் அல்லது 2016 ஒக்ரோபர் 19 ஆம் நாள் பிற்பகல் 2.30 மணிக்குப் பிந்தாமல் இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்தின் தரை மாடியிலுள்ள அஞ்சல் அறையில் வைக்கப்பட்டிருக்கும் விலைக்கோரல் பெட்டிக்குள் போடப்படுதல் வேண்டும்.

விலைக்கோரல்கள் மூடப்படும் நேரத்தின் பின்னர் உடனடியாக மத்திய வங்கியின் தரை மாடியில் விலைக்குறிப்பீட்டாளர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

உங்களுக்கு மேலதிகதி தகவல்கள் தேவைப்படுமாயின் 011 247 7346 ஊடாக மூத்த உதவிப் பணிப்பாளர்/ வசதிகள் முகாமைத்துவத் திணைக்களத்தினை தொடர்புகொள்ள முடியும்.

**பணிப்பாளர்,**
**வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம்.** (கே.180) (13.18)

## வாடகைக்கு

யாழ். மத்தியில் 3 மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு.

**076 575 5267**

## தவறிவிட்டது

இராசதுரை தேவராசா ஆகிய எனது மோட்டார் சைக்கிள் புதிவுப்புத்தகம் சாரதி அனுமதிப்பத்திரம் காப்புறுதி. வரி ஆகியவை அடங்கிய "கவர்" ஒன்று திருநெல்வேலியிலிருந்து இராசபாதையூடாக கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரிக்குசெல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். (C.26498) (14,17,18)

**076 999 8374/ 077 833 6317**

## விஷேட பல் வைத்திய சேவை

- **பல் முக சீராக்கல்** (Consultant Orthodontist)
- **முக சத்திரசிகிச்சை** (Consultant Facio Maxillary Surgeon)

**மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்**

- **மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)**
- **ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்**
- **நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல்** (Crown & Bridges, Implants)
- **வேர்முறை சிகிச்சை** (Root Canal Filling)
- **நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்**
- **பற்களை வெண்மையாக்குதல்** (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

## தேவை

விற்பனை உதவியாளர் தேவை: வான் வியாபரத்திற்கு வானில் சென்று விற்பனை செய்வதற்கு.

**தொடர்பு - 075 9789226**

## வேலையாள்கள் தேவை

நெல்லியடியில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் புடைவைக் கடைக்கு பெண் பிள்ளைகள் உடன் தேவை.

**தொடர்பு: 077 620 2080**

## கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

புறொயிலர் கோழிக்குஞ்சுகள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். மற்றும் ஊர்க்கோழி, வான் கோழி, கினிக் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு உள்ளன.

**தொடர்பு: 076 3488 645**

## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார் ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்

**S.N குமாரசாமி**


கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித் தடையா. குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா? குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத்தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

**காலை 9 மணி முதல் மாலை 3.00 மணிவரை**

நாதன் இன்
394 1/1, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.(வெலிங்டன் சந்தி)
072 681 6681, 076 557 5394

# மரண அறிவித்தல்

## பெரியதம்பி சின்னத்துரை (மாப்பாணி)



நட்டாங்கண்டல்,
மாங்குளம்.

**தோற்றம்**
**14.07.1933**

**மறைவு**
**04.10.2016**

நட்டாங்கண்டலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பெரிய தம்பி சின்னத்துரை (மாப்பாணி) நேற்று (04.10.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி - தங்கமுத்து தம்பதியரின் அன்புப்புதல்வனும் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக்கணவரும் விஜயகுமார், விஜய லட்சுமி, செல்வமலர், மதுபாலமலர், ஜெயக்குமார், ஜீவகுமார், நித்தியலட்சுமி ஆகியோரின் அன்புத்தந்தையும் நாகமுத்து காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, தங்கம்மா, இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.10.2016) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நட்டாங்கண்டல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அவைரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 1235674, 077 0385252**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு தொழிற்சங்கங்களின் பதிவுக்கு எதிரணி முயற்சி

கொழும்பு, ஒக்.5

புதிய அரசியல் கட்சியொன்றை ஸ்தாபிப்பதற்கு முன் இரு புதிய தொழிற்சங்கங்களைப் பதிவு செய்துகொள்வதற்கான அவசர முயற்சிகளில் பொது எதிரணியினர் ஈடுபட்டு வருவதாகத் தெரிய வருகின்றது.

அரச சேவையாளர் தொழிற் சங்கச் சம்மேளனத்தையும், அரச கூட்டுத்தாபன மற்றும் தனியார் துறை ஊழியர்கள் அங்கத்துவம் வகிக்கும் மற்றுமொரு சம்மேளனத்தையும் ஸ்தாபிக்கும் பணிகள் இப்போது மும்முரமாக நடந்து வருவதாகவும் விரைவில் அவை பதிவு செய்யப்படும் எனவும் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

புதிய அரசியல் கட்சியொன்றை ஆரம்பிப்பதற்கான திட்டத்தின் முன்னோடியாகக் கிராம மட்டத்தில் பொதுமக்களின் கருத்துகளைத் திரட்டும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருப் பதகாகவும், புதிய கட்சிக்கு அங்கீகாரம் வழங்கும் வகையில்பொதுமக்களின்கையெழுத்துகளும் பெறப்பட்டு வருவதாகவும், குறைந்த பட்சம் ஆறு இலட்சம் பேரின் சம்மதம் பெற்றுக் கொள்ளப்பட்ட பின் புதிய கட்சி அங்குரார்ப்பணம் செய்யப்படும் எனவும் தெரிவித்த அவர், புதிய கட்சிக்கான பெயர் மற்றும் சின்னம் பற்றிய ஆலோசனைகள் பொதுமக்களிடமிருந்து வரவேற்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

(கு)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்





எமது கல்லூரியில்
ஆசிரியர்களாகக் கடமை
யாற்றுகின்ற
அருட்சகோதரி
ஜெயசீலி சிங்கராஜா
செல்வி லக்சுமி
பிரபாசரவணமுத்து
ஆகியோர் கல்வி அமைச்சினால் நடத்தப்படுகின்ற
“குரு பிரதீபா பிரபா”
விருதினை இன்று 05.10.2016 கொழும்பு தாமரைத் தடாக
அரங்கியல் மண்டபத்தில் பெற உள்ளனர்.
இவர்களைக் கல்லூரி நலன்புரிசங்கம் சார்பில் வாழ்த்துகின்றோம்.
ஆசிரியர் நலன்புரிசங்கம்
கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்றைய தினம் கொழும்பு
தாமரைத்தடாக அரங்கியல்
மண்டபத்தில்
அதிமேதகு கௌரவ ஜனாதிபதி
அவர்களிடம்
“குரு பிரதீபா பிரபா”
விருதினைப் பெறும் எமது
பாடசாலையின் விஞ்ஞானபாட
ஆசிரியர்
திரு.ஆறுமுகம் பொன்வாசன்
அவர்களுக்கு எமது
வாழ்த்துக்களையும்
பாராட்டுக்களையும் தெரிவித்துக்
கொள்கின்றோம்.
ஆசிரியர் கழகம்
யா/நீர்வேலி றோ.க.த.க
பாடசாலை



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (05.10.2016)
அதிமேதகு ஜனாதிபதி
தலைமையில்
நடைபெறும்குருபிரதீபா
பிரபா தேசிய
கௌரவிப்பு விழாவில்
“பிரதீபா பிரபா”
விருது பெறும்
எமது பாடசாலை
ஆசிரியர்
திருமதி.பிறேமாவதி தியாகலிங்கம்
(Pri.Trained, B.Ed)
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச்சமூகம்
யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (05.10.2016) புதன்கிழமை கொழும்பு
தாமரைத் தடாக அரங்கில் அதிமேதகு
ஜனாதிபதி மைத்திரிபால ஸ்ரீசேன அவர்களிடமிருந்து
“குரு பிரதீபா பிரபா ” அதிபர் கௌரவிப்புப் பெறும்
எமது கல்லூரியின் அதிபர்
திரு.சண்முகநாதன் வேலழகன் -
SLPS - 1, B.Ed, MATE (International)
அவர்களையும்



ஆசிரிய கௌரவிப்புப் பெறும்
எமது ஆசிரியை
திருமதி துளசி நவரத்தினராசா -
SLTS -1, Sp.TRD (MATHEMATICS),
B.A, PGDE அவர்களையும்
கல்லூரிச் சமூகம் சார்பாகப் பாராட்டி
வாழ்த்துவதில்
அகமகிழ்வடைகின்றோம்.
நலன்புரி கழகம்
யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது சமாச உறுப்பினரும், சுதுமலை
வடக்கைச் சேர்ந்தவருமான
“ கலாபூஷணம் ”
திரு.இராஜகுலசேகரம்
குமாரகுலசிங்கம் JP
அவர்கள் அண்மையில் கலைஞர்
களுக்கான கௌரவிப்பு நிகழ்வின்போது
இந்து கலாசார அமைச்சர்
உயர்திரு. D.M. சுவாமிநாதன்
அவர்களினால் கலாபூஷணம் விருது
வழங்கி கௌரவிக்கப்பட்டமைக்காகப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:-
முதியோர் சங்கங்களின் சமாசம்,
வலி.தென்மேற்கு, சண்டிலிப்பாய்
(J/8004)(11.16)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியின்
ஆசிரியை
திருமதி ஸ்ரீஸ்வரி புஸ்பராசா
(பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி)
அவர்கள் இவ்வாண்டுக்கான
நல்லாசிரியர் விருதாகிய
“ பிரதீபா பிரபா” விருதினைப்
பெற்றமையைப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்
ஆசிரியர் சேவையாளர் சங்கம்
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று கொழும்பு 'தாமரைத் தடாக'
அரங்கியல் மண்டபத்தில் நடைபெறும்
கௌரவிப்பு விழாவிலே
"குரு பிரதீபா பிரபா"
கௌரவம் பெறும் யா/ கந்தரோடை
ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
ஆரம்பப் பிரிவு
உப அதிபராக விளங்கும்
செல்வி வைத்தீசுவரக்
குருக்கள் சாவித்திரி
அவர்களுக்கு எமது பாராட்டுக்களையும்
வாழ்த்துக்களையும் தெரிவித்துக்
கொள்கின்றோம்.
குடும்பத்தினர்.
கந்தரோடை, சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வித்தியா படுகொலை வழக்கு சட்டமா அதிபர் ஆராய்கிறார்

யாழ்ப்பாணம், ஒக். 5

புங்குடுதீவு மாணவியின் கூட்டுவன் புணர்வின் பின்னரான கொலை வழக்கு மிகவிரைவில் யாழ்.மேல் நீதிமன்றுக்கு மாற்றப்படும். அது பற்றிய ஆலோசனை ஒன்று சட்டமா அதிபர் திணைக்களத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது.

புங்குடுதீவு மாணவி வித்தியா கடந்த வருடம் மே மாதம் 13ஆம் திகதி கடத்தப்பட்டுக் கூட்டு வன் புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்டார். இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போதே நீதிவான் மேற்கண்டவாறு அறிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை 12 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அது தொடர்பான வழக்கு விசாரணை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் நடைபெற்று வருகின்றது.

இந்த வழக்கில் தொடர்புடையவர்களாகக் குற்றஞ்சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 12 சந்தேகநபர்களும் மன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். பாதிக்கப்பட்ட மாணவியின் பெற்றோர் சார்பில்மன்றில்முன்னிலையான சட்டத்தரணி ஏ.ரஞ்சித்குமார் வழக்கின் தற்போதைய நிலைமை தொடர்பில் கேட்டார். அதற்குப் பதிலளித்த நீதிவான் வழக்கு விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டு உள்ளன. சட்ட மா அதிபர் திணைக்களத்தால் விரைவில் குற்றப்பகிர்வுப் பத்திரம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்வதற்கான உத்தேச நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தார்.

இந்த வழக்கு எதிர்வரும் 18ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. சந்தேகநபர்களில் 9 பேரையும் 3 மாதங்களுக்கு விளக்கமறியலில் வைக்க யாழ்.மேல்நீதிமன்று ஏற்கனவே உத்தரவிட்டுள்ள நிலையில் ஏனைய 3 சந்தேக நபர்களுக்கும் விளக்கமறியல் அடத்த தவணை வரை நீடிக்கப்பட்டது. (வ-4,37)

## வரவிருக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

த்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலான சட்ட வரைவொன்றைத் தயாரிக்குமாறு அரசுசட்ட ஆணைக் குழுவுக்குப் பரிந்துரைத்திருந்தது. இதற்கமைய ஆணைக்குழு முன்னிலையில் நான் கருத்துக்களைப் பகிர்ந்திருந்தேன். இந்த வரைபு தயாரிக்கப்பட்டபோதும் நான் அதனைக் காணவில்லை. இவ்வாறு தயாரிக்கப்பட்ட வரைவு தற்போது குப்பைத் தொட்டிக்குள் சென்றிருக்கும் என்று நம்புகின்றேன்.

இவ்வாறான நிலையில் பாதுகாப்புடன் தொடர்புபட்ட நபர்களைக் கொண்ட குழுவொன்று தற்போது மற்றுமொரு வரைவைத் தயாரித்துள்ளது. தயாரிக்கப்பட்டுள்ள இந்த வரைவானது நீக்கப்படவுள்ள சட்டத்தை விட மோசமானதாக இருக்கும் என்ற தகவல் கிடைத்துள்ளது.

தடுத்துவைத்தல், வாக்குமூலம் பெறுவதை மறைத்தல் உள்ளிட்ட மோசமான விடயங்கள் மாற்றப்படாது புதிய சட்டத்திலும் காணப்படும் எனக் கூறப்படுகின்றது. எனக்குக் கிடைத்த தகவல் உண்மையாயின் புதிதாகக் கொண்டு வரப்படக்கூடிய சட்டமானது தற்போது இருப்பதைவிட மோசமானதாக இருக்கும்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் உள்ள சில விடயங்களை நீக்குவதாக அரசு பன்னாட்டுக்கு உறுதிமொழி அளித்தது. இவ்வாறான நிலையில் சில விடயங்களை நீக்குவதாகக் கூறிவிட்டு, அதனை வேறொரு பெயரில் கொண்டுவருவது அரசுக்குக் கெடுதியான பிரதி விளைவையே கொண்டுவரும் என்று சுமந்திரன் எச்சரித்தார். (வ-4,5)

## டில்லியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்கவை, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா விமான நிலையத்தில் வரவேற்றார்.

அத்துடன் புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதுவர் சித்ராங்கனி வகீஸ்வரா மற்றும் தூதரக அதிகாரிகளும் பிரதமரை வரவேற்பதற்காக விமான நிலையம் சென்றிருந்தனர். (வ-5)


## வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர் சதாசிவம்
தவலிங்கம்



பிறப்பு
29.01.1951
இறப்பு
05.09.2016

கடந்த 05.09.2016
திங்கட்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவரின்

ஆத்மசாந்திக் கிரியைகள் இன்று (05.10.2016) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கந்தசுவாமி கோயிலடி,
நீர்வேலி தெற்கு
குடும்பத்தினர்.
077 917 6037



## கண்ணீர் அஞ்சலி



நடராஜா
துரைசிங்கம்

கடந்த 01.10.2016 சனிக்கிழமை இறைபதமடைந்த நடராஜா துரைசிங்கம் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சகோதரி - விஜயமலர்(பத்து), மைத்துனர்- சோ. பாலசுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற விரிவுரையாளர், கல்வித்திணைக்களம் MOH யாழ். மாநகர சபை), பா. அசோக்(கனடா), பா. அஜித் (கனடா), பா. அஜந்(சாரதி பிரதிப்பிரதம செயலாளர் அலுவலகம்- நீதி), பா. அருண்(கனடா), பா. அகிவ் (கனடா)

"விஜிஅகம்"
புலவனார் வீதி, கல்வியங்காடு.



## மரண அறிவித்தல்



பிறப்பு
03.12.1947
இறப்பு
01.10.2016

### நடராஜா துரைசிங்கம்

யாழ்ப்பாணம், கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நடராஜா துரைசிங்கம் 01.10.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா- பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மகாதேவா - நேசரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், ரஞ்சிதமலரின் பாசமிகு கணவரும், டனிஷா (கனடா), பிரசன்னா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரஞ்சித் (கனடா), கீர்த்திகா (கனடா) ஆகி யோரின் பாசமிகு மாமனாரும், தங்கராசா (DR.FRCP RTD LONDON), விஜயமலர் (பத்து) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பத்மாவதி (லண்டன்), பாலசுப்பிரமணியம், யோகமலர் (கனடா), செல்வரட்ணம் (கனடா), புஸ்பராசா (கனடா), விஜயராஜன் (கனடா), ஞானமலர் (கனடா) ஆகியோரின் மைத்துனரும், நிதுஷா (கனடா), பிரணிக்கா (கனடா), ஶ்ரீநிதா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2016) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

"[illegible]"
G.P.S.வீதி,
கல்வியங்காடு.

தகவல்: மனைவி,மகள்,
மகன்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளைப் பிரித்தது போன்றே கூட்டமைப்பையும் சிதைக்கச் சதி

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஒக். 5
பலமாக இருந்த தமிழீழ விடுதலைப் புலிகளில் இருந்து கருணாவைப் பிரித்ததைப் போன்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்பையும் சிதைக்க தென்னிலங்கை சக்திகள் முயற்சிக்கின்றன.
இவ்வாறு குற்றஞ்சாட்டினார் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.
கிளிநொச்சி திருநகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் உரையாற்றினார்.
அவர் தெரிவித்ததாவது:
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் ரீதியான செயற்பாடுகளை விடுதலைப் புலிகளின் ஆலோசனைகளோடு மேற்கொண்டது. இன்று எமது பலம் மௌனிக்கப்பட்டுள்ளது. சிறுபான்மை மக்களின் வாக்குகள் செல்வாக்குச் செலுத்தது. தென்னிலங்கை ஆட்சி பீடத்தை சிறுபான்மை மக்களால் அசைக்க முடியாது எனவும் கொழும்பு கருதியது. கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது தமிழ் மக்கள் வழங்கிய வாக்குகளால் அந்த நிலைப்பாடு தகர்க்கப்பட்டது. சிங்கள மக்கள் வழங்கிய வாக்குகளைவிட தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு வழங்கிய வாக்குகளால் புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டார். சிறுபான்மை இனத்தினுடைய பலத்தை தென்னிலங்கை புரிந்துகொண்டது.
ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என் பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு. அரசுக்கு சில சமயங்களில் ஆதரவும், வேண்டிய தருணங்களில் எதிர்ப்பையும் வெளியிடுகின்றோம். அதற்காகவே நாம் வெளியிலிருந்து ஆதரவு தெரிவிக்கின்றோம். பலமாக இருந்த விடுதலைப் புலிகளின் தளபதி ஒருவரை பிரித்தது போன்று இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமாக இருக்கக்கூடாது என்பதற்காக சில முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. இன்று பல்வேறு விமர்சனங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தொடர்ந்தும் மக்களின் நலன் சார்ந்தே செயற்படுகின்றது - என்றார்.
நிகழ்வில் பொன்காந்தன் தலைமையுரையாற்றினார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சிதைப்பதற்காக மகிந்த ராஜபக்சவால் அன்று பல்வேறு நடிகர்களும், குழுக்களும் உருவாக்கப்பட்டன. இன்றும் அவ்வாறு உருவாக்கப்பட்ட குழுக்களின் எச்சங்கள் செயற்பட்டு வருகின்றன. விடுதலை புலிகளின் காலத்தில் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இன்று அவர்களின் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் மக்களின் நலன் சார்ந்து செயற்பட்டு வருகின்றது. - என்றார். (ந-5,21,ரி3,34)



சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் விழிப்புணர்வுப் பேரணி நடத்தப்பட்டது. மாவட்டத்தில் அதிகரிக்கும் மதுபோதை, புகையிலைப் பாவனையை ஒழிக்கும் நோக்கில் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது. இளைஞர் நட்புறவு நிறுவனமும் நகமா நிறுவனமும் இணைந்து இதை ஏற்பாடு செய்தன. கிளிநொச்சி பழைய மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக ஆரம்பித்த பேரணி பதாகைகள் தாங்கியவாறு புதிய மாவட்டச் செயலகத்தை அடைந்தது. மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகத்திடம் மனுக் கையளிக்கப்பட்டது. கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்களுக்கு போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வளிக்கப்பட்டது. (ந-21,35)

# பொலிஸாருக்கு அரச மதுபானம் விற்றவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 5
சிவில் உடையில் சென்ற பொலிஸாருக்கு 180 மில்லி லீற்றர் அரச மதுபானப் போத்தலை 500 ரூபாவுக்கு விற்பனை செய்த ஒருவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டார் என அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.
சந்தேக நபரிடம் இருந்து மேலும் 3 போத்தல் அரச மதுபானம் மீட்கப்பட்டது என்றும் பொலிஸார் கூறினர். கைதான சந்தேக நபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார்.
குறித்த நபருக்கு எதிரான வழக்கு நாளை வியாழக்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் இடம்பெறும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ந-5,107)



# பழமைமிக்க பாலை மரத்தை தறித்தார் என ஒருவர் கைது

கிளிநொச்சி, ஒக்.5
70 ஆண்டுகள் பழமை மிக்க - அரச காணியில் நின்ற பாலை மரத்தை அனுமதியின்றித் தறித்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
இவ்வாறு தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.
தருமபுரம் பொலிஸாரால் கண்டாவளை, மயில்வாகனபுரம் என்பவற்றில் நேற்று விசேட தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. அதன்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.
பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தாவது:
குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கில் பொலிஸார் விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். மயில்வாகனபுரத்தில் உள்ள அரச காணி ஒன்றில் நின்ற 70 ஆண்டுகள் பழமை மிக்க பாலை மரம் அனுமதி இன்றி தறிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.
கண்டாவளையில் அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்ற டிராக்டர் ஒன்றும் கைப்பற்றப்பட்டது. அதன் சாரதி கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவர்கள் விசாரணையின் பின்னர் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவர். கண்டாவளையில் துண்டாடப்பட்ட நிலையில் காட்டு மரங்கள் காணப்படுகின்றன. அவை தொடர்பிலும் விசாரணை நடத்தப்படும் - என்றார். (ந-21,ரி3)

# கசிப்புக் கொண்டு சென்றவர் பொலிஸைக் கண்டதும் ஓட்டம்

## 40 போத்தல் கசிப்பும், மோ. சைக்கிளும் மாட்டின

யாழ்ப்பாணம், ஒக்.5
கிளிநொச்சியில் விற்பனைக்காக எடுத்துச் செல்லப்பட்ட 40 போத்தல் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது. கசிப்பை எடுத்து வந்தவர் தனது மோட்டார் சைக்கிளை விட்டுவிட்டு தப்பித்துச் சென்றுள்ளார்.
இவ்வாறு கிளிநொச்சி ஊழல் தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு கிளிநொச்சி – பரந்தன், சிவபுரத்தில் நடந்துள்ளது.
கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பாலித்த ஆர். சிறிவர்தனவின் வழிகாட்டலின் கீழ் உப பொலிஸ் பரிசோதகர் தர்சன தலைமையில் சென்ற குழுவினர் சோதனையில் ஈடுபட்டனர்.
பரந்தன சிவபுரம் பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது 40 போத்தல் கசிப்பு மோட்டார் சைக்கிளில் வைத்து விற்பனைக்காக எடுத்து வரப்பட்டது. பொலிஸாரின் சோதனை நடவடிக்கையை அறிந்த சந்தேக நபர் மோட்டார் சைக்கிளையும், கசிப்பையும் விட்டுவிட்டு தப்பித்துச் சென்றுள்ளார். கசிப்பும், மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளன. விசாரணைகள் நடைபெறுகின்றன. தப்பிச் சென்றவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன - என்று ஊழல் தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர். (ந-21,ரி3)

# போதையில் சாரத்தியம்: ரூ.30 ஆயிரம் தண்டம்

யாழ்ப்பாணம், ஒக். 5
மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைதான நான்கு சாரதிகளுக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார் ஊர்காவற்றுறை நீதிவான் ஏ.எம்.எம்.றியால். குறித்த நால்வரையும் 100 மணித்தியாலங்கள் சமுதாய சீர்திருத்த கட்டளைக்கு உட்படுத்துமாறும் மாவட்ட சமுதாய சீர்திருத்த அதிகாரி கந்தசாமி மயூரனுக்கு கட்டளையிட்டார்.
நெடுந்தீவு மற்றும் மண்கும்பானைச் சேர்ந்த மூவருக்கு தலா 7 ஆயிரமும், கண்டி நாவலப்பிட்டியைச் சேர்ந்த ஒருவருக்கு 9 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (ந-5,107)

### காக்கைதீவுச் சந்தையில்

# அனுமதியின்றி அறவிட்ட வரி நீதிமன்ற உத்தரவால் நிறுத்தம்

வலி.தென்மேற்கு, ஒக்.5
காக்கைதீவுச் சந்தையில் பிரதேச சபையின் அனுமதியின்றி வியாபாரிகளிடம் அறவிடப்பட்ட வரி நீதிமன்ற உத்தரவின்படி நிறுத்தப்பட்டது.
காக்கைதீவு இறங்குதுறையில் சுறுமண்டபத்துக்கு அருகில் பிரதேச சபையின் அனுமதியின்றி சுகாதார விதிமுறைகளுக்கு முரணாக அமைக்கப்பட்ட கட்டத்தில் வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகளிடம் ஒரு சிலரால் வரி அறிவிடப்பட்டது. பிரதேச சபையின் அனுமதி இன்றி வரி அறவிடுவது தொடர்பில் பிரதேச செயலாளரிடம் சுட்டிக்காட்டப்பட்டது. அதுது அவர் மல்லாகம் நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு சென் றார்.
சம்பந்தப்பட்டவர்களை கடந்த திங்கட்கிழமை நீதிமன்றுக்கு அழைத்து விசாரணை நடத்தப்பட்டது. விசாரணையின் பின்னர் அதனை நிறுத்துமாறு நீதிவான் எச்சரிக்கை செய்தார். (ந-115)

# தீ விபத்தால் பாதிக்கப்பட்ட கிளி. வர்த்தகர்களுக்கு உதவி

## பிரான்ஸ் வாழ் தமிழர்கள் வழங்கினர்



கிளிநொச்சி, ஒக்.5
கிளிநொச்சி பொதுச் சந்தையில் அண்மையில் ஏற்பட்ட தீ விபத்தால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு பிரான்ஸ், பரிஸ் நகரைச் சேர்ந்த ஈழத் தமிழ் வர்த்தகர்கள் நிதி உதவி வழங்கினர்.
நேற்றுமுன்தினம் கிளிநொச்சி சந்தைக் கட்டடத்தில் நிதி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.
கடந்த மாதம் 16 ஆம் திகதி இரவு ஏற்பட்ட தீ விபத்தால் பொதுச் சந்தையில் இருந்த 114 வர்த்தக நிலையங்கள் முற்றாக நாசமாகின. 222 மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய பொருள்கள் தீயில் எரிந்து நாசமாகின.
தீ விபத்தால் பாதிக்கப்பட்ட 32 வர்த்தகர்களுக்கு பரிஸ் தமிழர்கள் உதவி வழங்கினர். ஒவ்வொரு வர்த்தகர்களுக்கும் அவர்கள் தலா 10 ஆயிரம் ரூபா வழங்கினர்.
வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளையின் கோரிக்கைக்கு அமைய இந்த நிதியுதவி வழங்கப்பட்டது.
அதேவேளை, தீ விபத்தால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களின் பிள்ளைகளுக்கு நேற்று கிளிநொச்சி மாவட்ட மருத்துவ, பொறியியல் பீட மாணவர்களால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ந-21,35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சந்தை கேள்வியை எதிர்கொள்ள பனை உற்பத்திகள் போதாது

## பனை அபிவிருத்திச் சபையின் முகாமையாளர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக.5

பனைசார் உற்பத்திகளுக்கு உள்ளூரிலும், வெளி நாடுகளிலும் பலத்த கேள்வியுண்டு. ஆயினும் உற்பத்தி போதாதுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் பனை அபிவிருத்திச் சபை யின் முகாமையாளர் லோகநாதன்.

பனை அபிவிருத்திச் சபையில் நேற்று செய்தி யாளர் சந்திப்பு நடத்தப்பட்டது. அதில் அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பனம் கூடைகள் தற்போது சபையின் கற்பகம் விற்பனை நிலையங்களின் ஊடாக 350 ரூபா வுக்கு கொள்வனவு செய்யப்பட்டு 600 ரூபாவுக் விற்பனை செய்யப்படுகின்றது. இந்தக் கூடைகள் வெளிநாடுகளில் 900 ரூபாவுக்கும் கிடையாது. அதற்கான கேள்வி உள்ள தொகையில் உற்பத்தி இல்லை.

பனம்பழம் ஒன்று 5 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படுகின்றது. பனைகளைப் பொறுத்த மட் டில் அதன் அனைத்துப் பொருள்களும் உக்கும் தன்மை கொண்டது. இலங்கையின் வடக்கில் உள்ள பனைகள் தொடர்பில் 83ஆம் ஆண்டுக் குப் பின்பு கணக்கெடுப்பு இடம்பெறவில்லை. 83ஆம் ஆண்டு 32 லட்சம் பனைகள் இருந்தன- என்றார்.

வடக்கில் 2 லட்சம் பனை விதை நடுகை தொடர் பில் அறிவிக்கப்பட்டிருந்தது. அது நீண்டகால மாகியும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அது தொடர்பில் முகாமையாளர் கருத்துத் தெரிவித்தார். நாடாளுமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக் கப்பட்டுள்ளது. வடக்கில் பல தேவைகளுக்கும் அபிவிருத்திக்கும் என பனைகள் தறிக்கப்படு கின்றன. பனை தறிக்க முடியாது என்று வர்த்த மானி அறிவித்தல் மட்டுமே உள்ள போதும், அதற் கான சட்டம் கிடையாது. அது பின்னடைவுகளுக்கு ஓர் காரணம்- என்றார். (ந-5,10)

## ஒன்று கூடல்

யாழ்ப்பாணம், ஒக்.5

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் சைவ வித்தியாவிருத்திச் சங்க சான்றோர் சு.இராசரத்தினத் தின் கல்விப்பணி பற்றியதான அறிவோர் ஒன்று கூடல் இன்று மாலை 6 மணிக்கு நடைபெறும். கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையில் கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப் பிள்ளை மண்டபத்தில் ஒன்று கூடல் நடைபெறவுள்ளது என சங்க பொது செயலாளர் தெரி வித்தார். (ந)

## ஆசிரியர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக.5

அச்செழு சைவப்பிரகாச வித்தி யாலயத்தில் ஆசிரியர் தின நிகழ்வு நாளை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

வித்தியாலய அதிபரின் தலை மையில் நடைபெறவுள்ள நிகழ் வுக்கு தலைமை விருந்தினராக முன்னாள் அதிபர் கே.ஆர். இராஜசேகரமும், சிறப்பு விருந் தினராக முன்னாள் பிரதி அதி பர் அ.பத்மநாதனும், கௌரவ விருந்தினராக வித்தியாலய செயலாளர் கு.ஜெகதீஸ்வரனும் கலந்துகொள்ள உள்ளனர் என விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ந)

## பொதுக் கிணறு அமைப்பதற்கு நிதி உதவி

முல்லைத்தீவு, ஒக்.5

முல்லைத்தீவு மாவட்ட துணுக் காய் பிரதேச செயலகத்துக் குட்பட்ட - குடிதண்ணீர் தட்டுப் பாடு நிலவும் கிராமங்களில் பொதுக்கிணறுகளை அமைக்க மீள்குடியேற்ற அமைச்சு முன்வந்துள்ளது.

தென்னியங்குளம், அமைதிபுரம், அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டியகுளம், தேறாங் கண்டல், ஐயங்கன்குளம் ஆகிய கிராமங்களில் குடி தண் ணீர் தேவையை முழுமை செய் யக்கூடிய வகையில் மீள்குடி யேற்ற அமைச்சின் நிதியுத வியில் கிணறுகள் அமைக்கப் படுகின்றன என்று தெரிவிக்கப் பட்டது. (ந-ரி7)

## தேசிய வாசிப்பு மாத ஆரம்ப விழா

யாழ்ப்பாணம், ஒக்.5

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் தேசிய வாசிப்பு மாதம் ஆரம்ப விழா நாளை மறுதினம் காலை 9.30 மணிக்கு வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

கல்வி இராஜாங்க அமைச்சர் வி.இராதாகிருஷ்ணன் தலை மையில் நடைபெற உள்ள நிகழ்வில், கடந்த ஆண்டு வாசிப்பு மாத செயற்றிட்டங்களை மிகச் சிறப்பாக செயற்படுத்திய 30 பொதுநூலகங்கள், பாடசாலை நூலகங்களுக்கு விருதுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும். வசதி குறைந்த நான்கு நூல கங்களுக்கு மரத் தளபாட உப கரணங்களும், 10 நூலகங் களுக்கு பத்து லட்சம் பெறுமதி யான நூல்களும் வழங்கப்பட உள்ளன என தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபைத் தலைவர் தெரிவித்தார். (ந)



## சட்டவிரோத மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் இருவர் கைது

முல்லைத்தீவு, ஒக்.5

முள்ளியவளை பொலிஸ் நிலைய பிரிவுக்குட்பட்ட பொன் னகர் பகுதியில் சட்டவிரோதமான முறையில் டிராக்டரில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரி யாலயம் தெரிவித்தது.

முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து, முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் வழிநடத்தலின் கீழ் முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் கரு ணாரத்தினம் ஜெசிந்தன் தலை மையிலான அணியே நேற்று முன்தினம் மாலை 5.30 மணி யளவில் சந்தேகநபர்களைக் கைது செய்தது. இரு டிராக் டர்களும் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர்கள் இருவரும், சான்றுப் பொருள்களுடன் மேலதிக விசாரணைக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்காகவும் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட் டனர் என்றும் தெரிவிக்கப் பட்டது. (ந-ரி7)

## இறுதிக்கிரியைகளில் ஊடுருவிய இந்தியப் பழக்கம்

### சாவகச்சேரியில் வித்தியாசமான நிகழ்வு

தென்மராட்சி, ஒக்.5

இறுதிக் கிரியைகளில் காலம் கால மாகக் கடைப்பிடிக்கப்பட்ட தமிழர் பாரம்பரிய நடைமுறை கள் மாற்றப்பட்டு, இந்தியாவின் தமிழ் நாட்டில் இடம்பெறும் இறுதிக்கிரியைகள் போன்று இறு திக் கிரியைகள் சாவகச்சேரி இந்து மயானத்தில் நேற்று நடத்தப்பட்டன.

மீசாலைப் பகுதியைச் சேர்ந்த ஒருவரின் இறுதிக் கிரியையின் போது தமிழ் நாட்டில் இடம்பெறு வது போன்று தீப்பந்தம் மூலம் கொள்ளியிட்டார் இறந்தவரின் மகன்.

தமிழர் வழக்கப்படி வீட்டில் இறு திக் கிரியைகள் முடிந்த பின்னர் குருக்களால் சட்டியில் வைத் துக் கொடுக்கப்படும் சந்தனக் கட்டை மயானம் வரை கொண்டு வரப்படும். இறந்தவரின் முகத் தைப் பாராது சந்தனக் கட்டையை செருகிக் கொள்ளியிட்டு வீழ்ந்து வணங்கிச் செல்வது வழமை.

நேற்று நடைபெற்ற இறுதிக் கிரி யைகளில் சந்தனக் கட்டை கொண்டு வரப்படவில்லை. பதி லாக பந்தம் கொண்டுவரப்பட் டது. இறந்தவரின் முகத்தைப் பார்த்தவண்ணம் பந்தம் மூலம் கொள்ளி வைக்கப் பட்டது.

சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி மயானத்தைப் பொறுத்தவரை யில் இந்த நிகழ்வு முதன்முறை என்று கூறப்பட்டது. இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் அது வித்தி யாசமாகக் காணப்பட்டது என்று கூறப்பட்டது. (ந-9)

## ரூபா 8 மில்லியன் செலவில் தாழ்வுப்பாடு வீதி சீரமைப்பு

மன்னார், ஒக்.5

மன்னார் - தாழ்வுப்பாடு செல்லும் பிரதான வீதியில், வைத்திய சாலைச் சந்தியில் இருந்து தாழ்வுப்பாடு வரையான பிரதான போக்கு வரத்து வீதி 8 மில்லியன் ரூபா செலவில் சீரமைக்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமான இந்த வீதி, 2016ஆம் ஆண்டுக்கான மாகாண நிதி ஒதுக்கீட்டில் வடக்கு வீதி அபிவிருத்தி அமைச்சால் வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் சீரமைக்கப்பட்டது. (ந-21)

## வழிகாட்டல் வகுப்புக்கள்

முகாமைத்துவ உதவியாளர் சேவையின் சகல தரங்களுக்கு மான வினைத்திறன் காண் பரீட் சைக்குரிய இலவச வழிகாட்டல் வகுப்புக்கள் நல்லூர் பிரதேசசெய லகத்தில் நடை பெறுகின்றன.

நாளை மறுதினம் பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ள நிதிப்பிரமா ணம் தொடர்பான வகுப்புக்கு, திருகோணமலையில் இருந்து ஓய்வு நிலை உதவிக் கணக்காய் வாளர் நாயகம் த.பாலசுப்பிர மணியம் வளவாளராக கலந்து கொள்வார். தொடர்ந்து பிரதி சனி, ஞாயிறு ஆகிய தினங்கள் வகுப்புகள் நடைபெறும் என் றும், சகல முகாமைத்துவ உதவியாளர்களையும் அதில் கலந்து கொள்ளுமாறு மத்திய மற்றும் மாகாண அரச முகா மைத்துவ உதவியாளர் சங்கத் தின் செயலாளர் திருமதி க.விஜய லதா கேட்டுள்ளார். (ந)

## அதிகார இழுபறிகள் தீர்ந்தாலே மாகாண அபிவிருத்தி சாத்தியம்

### கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஒக். 5

கொழும்பு மற்றும் மாகாண அரசுகளுக்கு இடையிலான அதிகார இழுபறி தீர்க்கப் பட்டாலே மாகாண சபைகளால் முழுமை யான அபிவிருத்தியை முன்னெடுக்க முடியும்.

இவ்வாறு கிழக்கு மாகாண கல்வி அமைச் சர் எஸ்.தண்டாயுதபாணி தெரிவித்தார்.

கிழக்கு மாகாண பாலர் பாடசாலை தலை மைக் காரியாலயம் , மாவட்ட அலுவலகம் என்பவற்றின் திறப்பு விழா மட்டக்களப்பு நகரில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. அதில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு மாகாண கல்வி அமைச்சர் உரையாற்றினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதி காரங்களை கொழும்பு அரசு விட்டுக் கொடுக்காமல் இன்னமும் தன்வசமே வைத் துள்ளது. ஒருவிதமான கருமங்களையும் மாகாண சபையால் முடித்துக் கொள்ள இயலவில்லை.

இது ஒரு ஏமாற்றுப் போல எண்ணத் தோன்று கின்றது. முன்னாள் பொருளாதார அபி விருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவால் வாழ் வெழுச்சி சட்டம் அவசர அவசரமாகக் கொண்டு வரப்பட்டது. அந்த சட்டத்துக்கு மாகாண சபைகள் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று கூறப்பட்ட போது, அப்போது எதிர்க் கட்சியில் வரிசையில் அமர்ந்திருந்த நாம் சட்ட வரைவை நிறைவேற்றுவதற்கு ஆதரவளித்தோம்.

வாழ்வெழுச்சி திட்டம் கிராமிய பொருளா தாரத்தை உயர்த்தும் என்று கூறியிருந்த போதும் அந்தச் சட்டம் சந்தை மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி உள்ளிட்ட அதி காரங்களை மட்டுமல்லாது மாகாண அதி காரங்களையும் பறித்த சட்டமாகும்.

மாகாண சபைகளுக்கு கொழும்பு அரசால் வழங்கப்பட்டுள்ள அரைகுறையான அதி காரங்களையும் அது பறித்தெடுத்துள்ளது- என்றார். (ந-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின் தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், ஒக்.5

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரையும் கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உடுப்பிட்டி வி.சி, நாச்சிமார் கோயிலடி, இலந்தைக்காடு, கொற்றாவத்தை, பொலிகண்டிஆலடி, நெடியகாடு, வல்வெட்டித்துறை, வெள்ள றோட், உடுப்பிட்டி மகளிர், உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோயிலடி, கம்பர்மலை பாரதிதாசன், பழைய பொலிஸ் நிலையம், உடுப்பிட்டி வாசிகசாலை, பொக்கணைச்சந்தி, கெருடாவில், தொண்டமானாறு, மயிலியந்தனை, சிதம்பரா, வடக்கு அல்லாரை, வெள்ளம் போக்கட்டி, பாலாவி, கெற்பேலி, அச்செழு ஆகிய இடங்களில் மின் தடைப்படும்.

வவுனியாவில் பெரியார்குளம் (பூந்தோட்டம்), குட்செட் வீதி, தோணிக்கல் சிவன் கோயில் பிரதேசம், மடுக்கந்த பிரதேசம் ஆகிய இடங்களில் மின் தடைப்படும்.

மன்னாரில் அரிப்பு, சவேரியார் குளம், CECB ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்படும். (ற-ரி)

# பாவிக்க முடியாத நிலையில் பாடசாலைக் கழிப்பறைகள்

## நேரடியாகக் கண்ட முதலமைச்சர் கடிதம் என வடக்கு கல்வி அமைச்சர் கவலை

வவுனியா, ஒக். 5

பாடசாலைகளில் உள்ள கழிப்பறைகள் சுகாதாரமற்ற நிலையில் காணப்படுகின்றன. பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட வடக்கு முதலமைச்சர் அந்தப் பாடசாலையில் உள்ள கழிப்பறையைப்பயன்படுத்தமுடியாமல் அருகில் உள்ள வீடு ஒன்றின் கழிப்பறையைப் பயன்படுத்தினார். அந்தளவுக்குப் பாடசாலைகளில்உள்ளகழிப்பறைகள்காணப்படுகின்றன.

இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்தார்.

வவுனியா மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற வடமாகாண கல்விக் கண்காட்சியின் இறுதி நாள் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் வடக்கு மாகாணக்கல்விஅமைச்சர்உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:

முதலமைச்சரிடம் இருந்து எனக்குக் கடிதம் வந்தது. அதில் "பாடசாலைகளிலுள்ள கழிப்பறைகளை சுத்தமாகவும் பயன்படுத்தக் கூடியவாறும் வைத்திருக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தார். சில பாடசாலைகளுக்குச்



சென்றபோது அங்கு கழிப்பறைகள் சுத்தமின்றியும் பாவிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

வடமாகாண முதலமைச்சர் பாடசாலையின் நிகழ்வு ஒன்றுக்குச் சென்றிருந்தார். அவருக்கு கழிப்பறையைப் பாவிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. ஆனால் பாடசாலையிலுள்ள கழிப்பறைகளைப் பாவிக்க முடியாது என்றும், அவை சுத்த மின்றியும் பயன்படுத்த முடியாமலும் காணப்பட்டதால் பாடசாலைக்கு அருகிலுள்ள வீட்டுக்கு செல்ல வேண்டிய தேவை முதலமைச்சருக்கு ஏற்பட்டது.

இந்த சம்பவம் எனக்கு மிகவும் கவலையளிக்கின்றது. உங்களுடைய இந்தப் பாடசாலையும் எவ்வாறு இருக்கின்றதோ எனக்குத்தெரியவில்லை. அதையும் ஒரு முறை பார்த்து விட்டுத்தான் போக வேண்டியுள்ளது. பல பாடசாலைகளிலே தண்ணீர் வசதி இன்மை காரணமாகவும் மாணவர்கள் அதைப் பயன்படுத்திவிட்டு தண்ணீர் இன்றி அப்படியே விட்டுவிட்டு வரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தண்ணீர் ஊற்றி பயன்படுத்தாததால் மற்றவர்கள் போய் அதைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது- என்றார்.

வடமாகாண கல்விக் கண்காட்சி கடந்த இரண்டு தினங்கள் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியலாயத்தில்நடைபெற்றது. இந்தக் கண்காட்சியின் இறுதி நாள் கண்காட்சியில் வெற்றி பெற்ற மாணவர்களின் செயற்றிறனுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (ற-5,21)

## சிறுவர்களுக்கு சிகரெட் விற்ற வர்த்தகர்களுக்கு தண்டம்

யாழ்ப்பாணம், ஒக்.5

21 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த இரு வர்த்தகர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார் யாழ்ப்பாணம் நீதிவான் மன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு சிவில் உடையில் சென்ற உப பொலிஸ் பரிசோதகர் தலைமையிலான பொலிஸார் சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த இரு கடை உரிமையாளர்களைக் கைது செய்தனர்.

அவர்கள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். அவர்கள் இருவரும் தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதை அடுத்து தண்டம் விதிக்கப்பட்டது.(ற-5,107)

## விசமிகளால் வீடு சேதம்

யாழ்ப்பாணம், ஒக். 5

ஏழாலை சூராவத்தை அம்மன் கோயிலுக்கு அருகில் உள்ள வீடு ஒன்றின் கதவு விசமிகளால் சேதமாக்கப்பட்டது. இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு நடந்தது என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

இரவு 10 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத குழு இந்த விசமச் செயலைச் செய்தது என்று கூறப்படுகிறது. தனிப்பட்ட பகை காரணமாக இந்தச் செயல் இடம்பெற்றிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. (ற-5,107)

# பனை அபிவிருத்திச் சபையின் கண்காட்சி எதிர்வரும் 21இல்

## யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஒக்.5

"ஞாலத்தில் புதுமை புகும் தாலம்" என்னும் தொனிப் பொருளில் பனை அபிவிருத்திச் சபையின் கண்காட்சி யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு சபையின் முகாமையாளர் லோகநாதன் தெரிவித்தார்.

பனை அபிவிருத்திச் சபையின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கண்காட்சி மூன்று தினங்கள் நடைபெறும். இந்தத் திட்டம் சபையின் வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படுகின்றது. சபையின் புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் வடிவமைப்புக்களுடன் பனை ஆராய்ச்சி நிறுவனக் கண்டுபிடிப்புக்களும் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும்.

கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மகளிர் அமைப்புக்களின் உற்பத்திப் பொருள்களுக்கான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படுவதுடன், அவற்றுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும் வாய்ப்பும் உண்டு.

கண்காட்சியை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை, சுவரொட்டிப் போட்டிகளும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன – என்றார்.(ற-5,101)



கிளிநொச்சி, திருநகரில் நேற்றுமுன்தினம் தையல் பயிற்சி நிலையம் ஒன்று திறக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அதைத் திறந்து வைத்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) பன்னாட்டு மகளிர் பிரிவின் ஜேர்மன் கிளையின் அனுசரணையில் இந்தத் தையல் பயிற்சி நிலையம் திறக்கப்பட்டது. வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், வடக்கு மாகாண சபை உறுப்பினர் மயூரன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் பரப்புரைச் செயலர் கணேஸ்வேலாயுதம் உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ற-5,21,35)

## உடற்பயிற்சி நிலையத்தில் திருட்டு

யாழ்ப்பாணம், ஒக்.5

ஏழாலை மேற்குப் பகுதியில் உள்ள உடற்பயிற்சி நிலையம் ஒன்றில் உடற்பயிற்சிக்குப் பயன்படுத்தப்படும் பெருமளவு இரும்பு உருளைகள் திருடப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் நடந்துள்ளது. இரவு நேரம் கதவு உடைத்து உள் நுழைந்து திருட்டு இடம்பெற்றுள்ளது. திருடப்பட்ட பொருள்களின் மொத்தப் பெறுமதி கணக்கிடப்படவில்லை.

மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற-5,107)

# இனவாதிகளைச் சிறை வைக்காது தேசிய அரசால் சாதிக்க முடியாது

## வட மாகாண சபை உறுப்பினர் மயூரன் சுட்டிக்காட்டு

வவுனியா, ஒக்.5

இனவாதிகளையும், மதவாதிகளையும் சிறைக்குள் வைக்காதவரை தேசிய அரசால் எதையும் சாதிக்க முடியாது.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சபையின் வவுனியா மாவட்ட நியமன உறுப்பினர் செ.மயூரன்.

பொதுபல சேனாவின் ஊர்வலம் கடந்த வாரம் வவுனியாவில் நடைபெற்றது. அது குறித்து வெளியிட்ட அறிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது:

தமிழீழ விடுதலைப் புலிகள் இருக்கும் வரை அவர்களுக்கு எதிராகவோ, தமிழ் அரசியல் தலைவர்களுக்கு எதிராகவோ வீதியில் இறங்கிப் போராடாத வவுனியா சிங்கள மக்கள் இன்று வீதிகளில் இறக்கிவிடப்பட்டிருப்பது இனவாதத்தின் உச்ச நிலையே. தமிழ் சிங்கள உறவைச் சீர்குலைக்க மத அடிப்படைவாதிகளும், இனவாதிகளும் கொழும்பில் இருந்து வடக்கின் வாசலுக்கு வந்து அப்பாவிச் சிங்கள மக்களைப் பலிக் கடாவாக்கும் முயற்சிக்கு அரசு துணை போகக் கூடாது.

உதய கம்மன்பல, விமல் வீரவன்ச, ஞானசார தேரர் போன்ற இனவாதிகளையும், மதவாதிகளையும், சிறைக்குள் வைத்துப் பூட்டாதவரை தேசிய அரசால் எதையும் சாதிக்க முடியாது. தமிழ் மக்களுக்கு நிரந்தரமான, நியாயமான தீர்வைப் பெற்றுத் தரவும் முடியாது. தமிழ், முஸ்லிம் மக்கள் இணைந்து மகிந்தவை வீட்டுக்கு அனுப்ப காரணமானவர்களும் இவர்களே.

இவர்களின் இனவாத செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கத் தவறின் மைத்திரி, ரணில் கூட்டணியினரும் வீட்டுக்கு செல்வதுதவிர்க்கமுடியாததாகிவிடும். முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையிலான வடக்கு மாகாண சபையினதும், இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் உணர்வு பூர்வமான, உரிமைக்கான போராட்டத்தையும் பொதுபலசேனா வின் உப்புச்சப்பில்லாத போராட்டத்தையும் வேறுபடுத்தி நியாயத் தன்மையை அரசு சரிவர விளங்கிக்கொள்ள வேண்டும்.- என்றுள்ளது. (ற-5,21)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு இணைவை விரும்பாதவர்கள் பிரிந்து செல்லுங்கள்

## சொல்கிறார் யோகேஸ்வரன் எம்.பி.

மட்டக்களப்பு, ஒக் 5

வடக்கு-கிழக்கு இணைப்பை விரும்பாத அரசியல்வாதிகள் பிரிந்து செல்லலாம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையான இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்று முன்வைக்கப்படுமாக இருந்தால், தமிழர்களுக்கு மட்டுமன்றி, முஸ்லிம் மக்களுக்கும் சேர்த்தே அது பெற்றுக் கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட முறாவோடை சக்தி வித்தியாலயத்தின் 125 ஆவது ஆண்டு விழா மற்றும் பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் இவ்வாறு குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு ஓட்டமாவடி பகுதியில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான பிள்ளையார் ஆலயம் மற்றும் மயானம் ஆகியவற்றைப் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாவே சுவீகரித்ததாகவும் யோகேஸ்வரன் குற்றஞ்சாட்டினார்.

அவர் தெரிவித்ததாவது:-

சிங்கள மக்களுக்கு நான் எதிரானவன் அல்லன். அவர்களுக்குக் காணிகள் தேவை யாயின் அதற்காகத் தமிழ் மக்களின் காணிகளைச் சுவீகரிக்கக்கூடாது. முறாவோடைக் கிராமமானது பூர்வீகத் தமிழ் கிராமம். இக்கிராமத்தின் எல்லைகள் தற்போது உள்ளவையல்ல. அவை நாளடைவில் சுவீகரிக்கப்பட்டுச் சகோதர இனத்தவர்கள் இந்தக்கிராமத்துக்குள் ஊடுருவிவிட்டார்கள். சகோதர இனத்தவர்கள் தங்களுக்குரிய இடங்களை அரசுடன் சேர்ந்து பெற்றுக் கொள்ளவேண்டும். அத்துமீறி அரசியலைப் பயன்படுத்தி சுவீகரிக்கக்கூடாது. அரசை வைத்துக்கொண்டுத் தமிழ் மக்களின் காணிகளைப் பறிமுதல் செய்கின்றார்கள். மட்டக்களப்பு ஓட்டமாவடிக் கிராமத்தில் கிட்டத்தட்ட 110 குடும்பங்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். அங்கு ஒரு பிள்ளையார் ஆலயம் இருந்தது. 1985 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ஆலயம் இப்போது மீன் விற்கும் சந்தையாக மாறிவிட்டது. அருகில் ஒரு மயானம் இருந்தது. அந்த 5 ஏக்கர் காணியின் உறுதி என் கைவசம் இருக்கின்றது.

சில அரசியல்வாதிகள் வடக்கு-கிழக்கை இணைக்க விடமாட்டோம் எனக் குரல் கொடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். வடக்கு-கிழக்கை இணைக்காவிடின் நீங்கள் பிரிந்து போங்கள். வடக்கு-கிழக்கிலும் தமிழ் மக்கள் இருக்கின்றார்கள். நாங்கள் இணைந்திருப்போம்-என்றார். (நு)



## கரைச்சி வடக்கு பல நோக்கு கூட்டுறவுச்சங்கம்(வ.து) - பரந்தன்

### கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்.

### கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும் காலமும் - 23.10.2016.

வடக்கு – கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்ட 1998.05.16ஆம் திகதிய 1028/6ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தக மானியில் வெளியிடப்பட்டதுமான வடக்கு – கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பல நோக்கு கூட்டுறவுச்சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்ட விதிகளுக்கமைய முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய திரு.உ.சுபசிங்க ஆகிய நான் 2015.10.12ஆம் திகதிய 1596/06 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தகமானி மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின் படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23இற்கு அமைய சங்கத்தின் சகல கிளைகளினதும் கிளைக்குழுத்தெரிவிற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களை பின்வரும் கால அட்டவணைப்படி நடாத்துவதற்காக, அந்தக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராக கடமையாற்றுவதற்கும் கீழ்வரும் அலுவலர்களைப் பெயர்குறித்து நியமித்துள்ளேன்.

- இதற்கமைய இந்தக்கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலரினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.
- கிளைப்பொதுச்சபைக்கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்குச் சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களின் நான்கிலொரு(1/4) பங்கினர் அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையிலிருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது(09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையை கோருவார். இவர்களுள் ஆகக்குறைந்தது இருவராவது(02) 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையிலிருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் அவ்வவ் தொகையினருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவை மேற்கொள்வார்.
- இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களிடையே சம வாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
- தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையில் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச்செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.
- தகுதியுள்ள கிளைப்பொதுச்சபை அங்கத்தவர்களிற்கு கிளைக்குழு தெரிவு தொடர்பாக அறிவித்தல்கள் தனித்தனியாக அனுப்பி வைக்கப்படுகின்றன. இவ்வறிவித்தல்கள் கிடைக்கப்பெறாத எவரேனும் தகுதியுள்ள அங்கத்தவர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொண்டு இக்கிளை பொதுச்சபை நடைபெறும் திகதியில் தங்களுக்குரிய கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து கிளைக்குழுவை தெரிவு செய்யுமாறு வேண்டுகின்றேன்.

**கிளைப்பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் திகதியும் இடமும்.**

| இல | கிளைப்பெயர் | தவிசாளர் பெயர் | கூட்டம் நடைபெறும் திகதி.நேரம் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 01. | பரந்தன் | பு.தர்சினி | 23.10.2016 ஞாயிறு மு.ப 10.00 | த.அலுவலகம் - பரந்தன் |
| 02. | இரணைமடு மேற்கு | ஸ்ரீ.எமல்டா | 23.10.2016 ஞாயிறு மு.ப 10.00 | கிளி / புனித அந்தோனியார் றோ.க.வித்தியாலயம் |
| 03. | முரசுமோட்டை | கே.கலைவாணி | 23.10.2016 ஞாயிறு மு.ப 10.00 | முரசுமோட்டை முருகானந்த ஆரம்ப வித்தியாலயம் |
| 04. | ஊரியான் | த.செல்வகேந்தினி | 23.10.2016 ஞாயிறு மு.ப 10.00 | முரசுமோட்டை முருகானந்த ஆரம்ப வித்தியாலயம் |
| 05. | கண்டாவளை | செ.நிமலறூபன் | 23.10.2016 ஞாயிறு மு.ப 10.00 | கண்டாவளை ம.வி |
| 06. | புளியம்பொக்கணை | இ.சுரேஸ் | 23.10.2016 ஞாயிறு மு.ப 10.00 | புளி / அரிசியாலை |
| 07. | கலவெட்டித்திடல் | செ.ஜெயராசா | 23.10.2016 ஞாயிறு மு.ப 10.00 | கிளி / நாகேஸ்வரா வித்தி கலவெட்டித்திடல் |
| 08. | புன்னைநீராவி | ம.லெட்டினன் | 23.10.2016 ஞாயிறு மு.ப 10.00 | கிளி / புன்னை நீராவி அ.த.க பாடசாலை |
| 09. | உமையாள்புரம் | மு.புஸ்பலக்சுமி | 23.10.2016 ஞாயிறு மு.ப 10.00 | கிளி / உமையாள்புரம் அ.த.க பாடசாலை |
| 10. | தட்டுவன்கொட்டி | க.பாலகிறிஸ்ணன் | 23.10.2016 ஞாயிறு மு.ப 10.00 | கிளி / தட்டுவன்கொட்டி அ.த.க பாடசாலை |
| 11. | ஆனையிறவு | ச.முகுந்தவேல் | 23.10.2016 ஞாயிறு மு.ப 10.00 | கிளி / உமையாள்புரம் அ.த.க பாடசாலை |
| 12. | குமரபுரம் | ச.தயாதேவி | 23.10.2016 ஞாயிறு மு.ப 10.00 | பரந்தன் இந்து ம.வி |
| 13. | பொறிக்கடவை | இ.மாலினி | 23.10.2016 ஞாயிறு மு.ப 10.00 | பெரியபரந்தன் அ.த.க.பாடசாலை |
| 14. | பிரமந்தனாறு | வி.சிவபாலன் | 23.10.2016 ஞாயிறு மு.ப 10.00 | பிரமந்தனாறு ம.வி |
| 15. | தருமபுரம் | அ.செந்தூர்ச்செல்வன் | 23.10.2016 ஞாயிறு மு.ப 10.00 | தருமபுரம் ம.வி |
| 16. | கல்மடு | க.உதயரூபன் | 23.10.2016 ஞாயிறு மு.ப 10.00 | கல்மடு அ.த.க பாடசாலை |

**கிளைக்குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்படத் தகுதியற்றவர்கள்.**

- கிளையினது வாக்காளர் பட்டியலில் பெயர் காணப்படாத ஒருவர்
- 18 வயதிற்கு கீழ்ப்பட்டவர்கள்.
- உடன் முன் சென்ற 03 ஆண்டுகளுக்குள் தீய ஒழுக்கச் செயலிற்காகக் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டவர் அல்லது மூன்று மாதங்களிற்கு மேற்பட்ட சிறைத்தண்டனைக்குத் தீர்ப்பளிக்கப்பட்டவர்.
- இச்சங்கத்திற்கு அல்லது பதிவு செய்யப்பட்ட வேறு எக்கூட்டுறவுச்சங்கத்திற்கும் எக்கடனையாவது திருப்பிக்கொடுக்காதவர் அல்லது வேறு எவ்விதத்திலும் தவறு செய்தவர்.
- இச்சங்கத்தில் வியாபாரி எனப்பதிவு செய்யப்பட்டவர் அல்லது சாங்கத்தின் நலவுரிமைகளிற்கு முரண்பட்ட வகையில் ஒரு வியாபாரத்தை நடத்துபவர்.
- சங்கத்தில் ஆதாயம் கருதி ஏதாவது ஒரு பதவியை அல்லது இடத்தினை வகிப்பவர் அல்லது ஆணையாளரின் முன்னனுமதியின்றி ஏதாவது தகைமைக்கொடையைப் பெறுபவர்.
- இச்சங்கத்தில் அல்லது இச்சங்க உரிமை வகிக்கும் வேறு எந்தச்சங்கத்திலும் ஊதியம் பெறும் ஊழியராயிருப்பவர்.
- ஓர் உறுப்பினர் என்ற முறையில் தவிர மற்றப்படி சங்கத்துடன் செய்யப்பட்டிருக்கும் எந்த ஒப்பந்தத்திலோ அல்லது சங்கத்தினால் செய்யப்படும் எந்த விற்பனையிலோ, கொள்வனவிலோ அல்லது சங்க நிதியோடு சம்பந்தப்பட்டு அதனால் செய்யப்படவிருக்கும் அல்லது பேச்சளவில் இருக்கும் ஒப்பந்தத்தில் அல்லது கொடுக்கல் வாங்கல்களில் மறைமுகமாகவோ நேர்முகமாகவோ அக்கறை கொண்டிருப்பவர்.
- கூட்டுறவுச்சட்டத்தின்படி இயற்றப்பட்ட விதிகளிற்கமைய தமது பதவியை அல்லது வேலையைக் கடந்த 05 ஆண்டுகளில் விட்டகல வேண்டிய நிலைக்கு ஆளானவர்.
- இயக்குனர் சபையினால் அல்லது கிளை நிர்வாக சபையினால் உறுப்பினராகக் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படாத அல்லது மேல்முறையீடு இயக்குனர் சபையினால் அல்லது கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தில் பிரிவு 06(2) இன்கீழ் ஆணையாளரால் மீளாய்வு மூலம் அல்லது இவ்விதியின் 2:4 அல்லது 2:6 இன்கீழ் அல்லது வாக்காளர் அட்டவணையில் பெயர் சேர்க்கப்படாத ஒருவர்.
- பாராளுமன்ற உறுப்பினர், மாகாணசபை உறுப்பினர்கள், மாநகர சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள்.
- அங்கத்தவராகச்சேர்ந்து ரூபா 100.00ஐப் பங்குப்பணமாகச் செலுத்தி முடிக்காதவரும் அங்கத்தவராகச்சேர்ந்து ஒரு வருடம் பூர்த்தியாகாதவருமான ஒருவர்.

(சங்கத்தின் துணைவிதிப் பிரிவு இல 22(1))

ஒப்பம்:-
திரு.உ.சுபசிங்க
கூட்.அபி.உதவி ஆணையாளர்

கூட்.அபி.உதவி ஆணையாளர் திணைக்களம்
முல்லைத்தீவு.
29.09.2016.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதி விபத்து கவன ஈர்ப்பு வாரம்

"அப்பா, அம்மா, அண்ணா, அக்கா! நீங்கள் உயிரோடு வீடு திரும்புவீர்களென வழிமேல் விழிவைத்து வீட்டில் நாம் காத்திருக்கின்றோம். வீதி ஒழுங்கை மதித்து நிதானமாக வாகனத்தைச் செலுத்தி உயிரோடு வந்துசேருங்கள். கண்ணீரஞ்சலிப் பிரசுரமாக உங்களைப் பார்க்க நாங்கள் தயாராக இல்லை."

- நிகழ்வு - "எழுந்து நிற்போம்"
- காலம் - 10 . 10. 2016 அன்று முற்பகல் 10 மணி தொடக்கம் 11 மணி வரை
- இடம் - உங்களுங்கள் அலுவலக, வேலைத்தள வாசலில்

# வாய்ப்பை இழந்தது இலங்கை ராணுவம்

## ஐ.நா. அமைதிப்படை சார்பில் மாலிக்கு படைகளை அனுப்ப முடியவில்லை

கொழும்பு, ஒக்.5

ஆபிரிக்க நாடான மாலியில் 1000 பேர் கொண்ட வலுவான பற்றாலியன் ஒன்றை, ஐ.நா. அமைதிப்படை சார்பில் அனுப்பும் வாய்ப்பை இலங்கை இராணுவம் இழந்துள்ளதெனத் தெரிவிக்கப் படுகின்றது.

ஐ.நா. அமைதிப்படைக்கு மிகவும் ஆபத்தான நாடுகளில் ஒன்றாக மாலி விளங்குகிறது. அங்கு 2013ஆம் ஆண்டு ஐ.நா அமைதிப்படை நிறுத்தப்பட்ட பின்னர், 120 இற்கும் அதிகமான பல்வேறு நாடுகளின் படையினர் தாக்குதல்களில் உயிரிழந்துள்ளனர். இங்கு அமைதிகாப்புப்பணியில்ஈடுபடுத்த 1000 இலங்கைப் படையினரைக் கொண்ட பற்றாலியன் ஒன்றை ஐ.நா. கோரியிருந்தது.

எனினும், 1000 பேர் கொண்ட இலங்கை இராணுவ பற்றாலியனுக்குத் தேவையான கனரக ஆயுதங்கள் மற்றும் காலணிகளை ஐ.நாவின் காலக்கெடுவுக்குள் பெற்றுக்கொள்ள இலங்கை இராணுவத்தினால் முடியாமல் போயுள்ளது. இலங்கை இராணுவத்துக்கு வழங்கப்பட்ட வாய்ப்பை ஐ.நா. ரத்துச் செய்வதற்கு முன்னதாக, பலமுறை எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பியதாகக் கூறப்படுகின்றது.

மாலியில் இலங்கை இராணுவத்தினருக்கு வழங்கப்பட்ட வாய்ப்பை ஐ.நா. ரத்துச் செய்துள்ள நிலையில், அங்கு 100 பேர் கொண்ட மரபுரீதியான இராணுவப் பிரிவு ஒன்றை நிறுத்துவதற்கு மாத்திரம் அனுமதி அளித்துள்ளது.

இது தொடர்பாக, நியூயோர்க்கில் உள்ள ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஊடாக, இலங்கை இராணுவத்துக்குத் தகவல் அனுப்பப்பட்டது.

மாலியில் இலங்கை இராணுவத்தின் 1000 பேர் கொண்ட பற்றாலியன் ஒன்றை நிறுத்தும் வாய்ப்பு பறிபோயுள்ளதால், இலங்கையின் பொருளாதாரத்துக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

ஐ.நா. அமைதிகாப்புப்பணியில் ஈடுபடும் இலங்கைப் படையைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் 1332 டொலர் ஊதியமாக வழங்கப்படுகிறது. இதன் மூலம் பெருமளவில் அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்கும் வாய்ப்பும் இலங்கையிடமிருந்து பறிபோயுள்ளதெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த்)



இணுவில் திருப்பதி அருள்மிகு வேங்கடேஸ்வரர் ஆலயம் - மருதனார்மடம்

3 ஆம் நாள் பிரமோற்சவ தினம் (05.10.2016)

இரவு 7.00 மணிக்கு மோகினி அவதார உற்சவம்.

**வயலின் இசைஆராதனை**

வயலின் - ஜெயக்குமார், அ.காருண்யா, கு.மதிவதினி, ஜெ.கம்சவதி, S.கனோஜா

மிருதங்கம் - திரு.சண்முகப்பிரியன்.

மதியம் அன்னதானம்.

(C 25488)
(14,17,18)

ஆலயதர்மகர்த்தா.



# புலிகள் தாக்கிய கப்பலின் பாகங்கள் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஒக்.5

தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகிப் பருத்தித்துறைக் கடலில் மூழ்கிய 'வலம்புரி' பயணிகள் கப்பலின் சிதைந்த பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

சிவில் சுழியோடி ஒருவர் வழங்கிய தகவலைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போதே வடக்கு பருத்தித்துறையின் 8 கடல் மைல் தொலைவிருந்து 15 அடி ஆழத்தில் சிதைந்த கப்பலின் பாகங்கள் நேற்றுமுன்தினம் கண்டுபிடிக்கப்பட்டன.

இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமான இந்தப் பயணிகள் கப்பல் யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணிக்கபோது

1998 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானது இதன்போது கப்பலில் பயணித்த கடற்படையினர் 20 பேர் உயிரிழந்தனர். அந்தக் காலப்பகுதியில் நிலவிய சீரற்ற வானிலை மற்றும் பாதுகாப்புக் காரணங்களினால் கடலில் மூழ்கிய கப்பலை மீட்கும் பணிகள் முன்னெடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் 18 வருடங்களின் பின்னர் 'வலம்புரி' பயணிகள் கப்பலின் சிதைவடைந்த பாகங்கள் கடலுக்கு அடியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் கப்பலின் [illegible] கடலுக்கடியில் புதைந்துள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர். (த்)

## சார்க் அமைப்புக்கு ரணில் எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.5

சார்க் அமைப்பு அதன் உறுப்பு நாடுகளுக்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய பலன்களைப் பெற்றுக்கொடுக்கத் தவறுமானால் அதற்கான மாற்றீடு தொடர்பில் சிந்திக்க வேண்டிய நிலை ஏற்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வப் பயணமொன்றை மேற்கொண்டு நியூஸிலாந்துக்கு சென்ற பிரதமர் தனது இறுதி நாளான நேற்றுமுன்தினம் நியூஸிலாந்து நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற சிறப்புக் கூட்டத்தில் ஆற்றிய உரையின்போதே இந்தத் தகவலைத் தெரிவித்தார். ஆசிய நியூஸிலாந்து மன்றம் ஏற்பாடு செய்திருந்த இந்த மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் ரணில், இலங்கையின் தற்போதைய நிலை தொடர்பிலும், உலகில் அதற்குள்ள அங்கீகாரம் மற்றும் கிடைக்க வேண்டிய முக்கியத்துவம் தொடர்பிலும் தெளிவுபடுத்தினார். இந்தக் கூட்டத்தில் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைவரான நியூஸிலாந்தின் முன்னாள் தலைமை ஆளுநர் ஆனந்த் சத்தியாத் உட்பட நியூஸிலாந்து நாடாளுமன்ற [illegible] எனப் பலர் கலந்துகொண்டனர். (த்)



வண்ணை
ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
இன்று (05.10.2016)
புதன்கிழமை
நான்காம் திருவிழா

நற்கருணையம் பதியதாம் வண்ணையிலே வீற்றிருந்து
நாம சங்கு சக்கரத்துடன் நம்பியவர் துயர் துடைக்கும்
நாற்றிசையும் ஒலித்திடும் நாதத்தின் திருவுருவமே - இன்று
நான்காம் திருவிழாவில் நல்லருளைப் பொழிந்திடுவாய்

திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :

Rasi Collections
No.199, Power House Road, Jaffna.
021 222 5571



வல்லிபுர ஆழ்வார்
இன்று (05.10.2016) புதன்கிழமை
ஆறாம் திருவிழா

திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :

அன்னை முத்துமாரி பஸ்சேவை
கொழும்பு ⇄ யாழ்ப்பாணம் ⇄ பருத்தித்துறை

நான்கு புதிய A/C பஸ்களுடன்
இரு வழிச் சேவையை பகல், இரவு எனவழங்கிவருகிறது

JETEX உள்நாடு
வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் கூரியர் சேவை எம்மால் வழங்கப்படும்

வீட்டில் இருந்தவாறே பயணச்சீட்டுக்களையும் சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்களையும் பெற்றுக்கொள்ளலாம்

| | | | காலை | மாலை |
|---|---|---|---|---|
| கொழும்பு | + 94 77 544 9251 | | | |
| யாழ்ப்பாணம் | + 94 77 544 8503 | பருத்தித்துறை | 9.00 | 7.00 P.m |
| வல்வெட்டித்துறை | + 94 21 226 1977 | யாழ்ப்பாணம் | 10.00 | 8.00 P.m |
| | + 94 77 544 7359 | வெள்ளவத்தை | 9.00 | 7.00 P.m |
| நெல்லியடி | + 9477 285 0285 | | | |
| பருத்தித்துறை | + 9477 555 2973 | கொட்டாஞ்சேனை | 10.00 | 8.00 P.m |

Web www.annaimuthumari.com
www.valvaitourism.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரசியலுக்காகத்தான் தேசிய விழாக்களா?

இலங்கை தேசியத் தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடந்தது. அதனால் வடக்கின் விளையாட்டுத் துறைக்கு, குறைந்தது யாழ்ப்பாணத்தின் விளையாட்டுத் துறைக்கு என்ன நன்மை? எதுவுமில்லை!

எந்தவொரு பெருவிழாவும் நடத்தப்படுவதன் பின்னணியில் அந்தப் பிரதேசத்தின் வளர்ச்சி முக்கியமானதாகப் பார்க்கப்படும். அதற்காகவே பெருமளவு பணச் செலவில் இவை நடத்தப்படுகின்றன. இதற்காகவே உலக விழாக்களையும் போட்டிகளையும் நடத்துவதற்கு ஒவ்வொரு நாடும் போட்டி போடுகின்றன. அண்மையில் பொதுநலவாய நாடுகளின் அமைய விளையாட்டு விழாவை கொழும்பு நடத்தியதன் நோக்கமும் அதுவே!

இத்தகைய விழாக்களையும் போட்டிகளையும் நடத்தும்போது அந்த நாட்டின் மீது ஏனைய நாடுகளின் கவனம் குவியும், வர்த்தக நிறுவனங்களின் பார்வை திரும்பும், அதனால் முதலீடுகள் கிடைக்கும், பொருளாதாரம் வளரும், தொழில்நுட்பம் விருத்தியாகும் என்பதுபோன்ற இன்னோரன்ன வளர்ச்சிகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

தேசிய விழா என்பதும் ஒரு நாட்டைப் பொறுத்தவரையில் மிகப் பெரிய நிகழ்வே. அதனை ஓர் இடத்தில் நடத்தும்போது அந்தப் பிரதேசத்திற்குச் சிறியளவிலாவது அபிவிருத்தி, வளர்ச்சி கிட்டவேண்டுமல்லவா! அப்போதுதானே அதற்கு ஓர் அர்த்தம் இருக்கமுடியும்.

ஆனால், இங்கு நடப்பதோ நேர் எதிர்மாறானது. தேசிய விழாக்களை கொழும்பு அரசே ஒழுங்குபடுத்துகின்றது. அதற்கான பெருமளவு நிதியையும் அதுவே அனுப்புகிறது. பின்னர் அந்தப் பணத்தில் சேவை வழங்குநர்களையும் - அதாவது பந்தல், கதிரைகள், மற்றும் ஏனைய வசதிகளை ஏற்படுத்தித் தருவோர் - தெற்கில் இருந்தே அழைத்து வருகின்றது. அதாவது, அவர்களே பணத்தைக் கொண்டு வந்து தமக்கிடையிலேயே பங்கிட்டு அவர்களே எடுத்துச்சென்றும் விடுகிறார்கள். பணத்தைக் கொண்டு வருபவர் ஒருவராக இருப்பார், எடுத்துச் செல்பவர்கள் பலராக இருப்பார்கள். இது மட்டுமே வித்தியாசம். இப்படிப்பட்ட தேசிய விழாக்களால் என்ன பயன்? பிறகு ஏன் அவற்றை வெவ்வேறு இடங்களில் நடத்தவேண்டும்? கொழும்பிலேயே எல்லாவற்றையும் நடத்தி விடலாமே!

இங்கே தேவையான வசதி வழங்குநர்கள் இல்லை, அதனால்தான் கொழும்பிலிருந்து கொண்டு வரவேண்டியிருக்கிறது என்று காரணம் சொல்லக் கூடும். நீங்கள் இத்தகைய வாய்ப்புக்களை வழங்காத வரையில் இங்குள்ளவர்கள் எப்படி அவற்றை ஏற்படுத்திக் கொள்வார்கள்?

தேசிய விளையாட்டு விழாவால் யாழ்ப்பாணத்தின் விளையாட்டுத்துறைக்குக் கிஞ்சித்தும் பயன் கிடைக்கவில்லை. எந்த மேம்பாடும் கிட்டவில்லை எனில், இந்த விழா யாழ்ப்பாணத்தில் ஏன்? தரமான ஒரு விளையாட்டு மைதானத்தைக்கூட இந்தத் தேசிய விழாவுக்காகத் தயார்ப்படுத்த முடியவில்லை. ஒழுங்கான உள்ளக விளையாட்டு அரங்கு ஒன்றுகூட இங்கு இல்லை. பின்னர் எதற்காக இங்கு தேசிய விளையாட்டு விழா? வெறும் அரசியல் காரணங்களுக்காகவா?

உண்மையான அபிவிருத்தி நோக்கமற்ற, உள்ளூர் மக்கள் பயனடையாத எந்தவொரு தேசிய விழாவாலும் தமிழர்களின் மனங்களை ஒரு போதும் வெல்ல முடியப்போவதில்லை என்பதை கொழும்பு சரிவரப் புரிந்துகொள்ளவேண்டும்.



சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இருந்து
ரெங்கன்

சுயாதீனம், குறிக்கோள், நம்பகத்தன்மை, தகுதியான அளவில் வளங்களுடனான பொறிமுறை போன்றவை விரிவாக ஆராய்ந்த பின்னரே நிறுவப்பட வேண்டும். இவை பற்றி தொடர்ந்தும் கலந்துரையாடல்களை முன்னெடுப்பது அவசியம். பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் நிறுவனங்களின் பங்களிப்பும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். இந்த முயற்சியில் அரசு முன்னின்று செயற்பட வேண்டும் என்பதை ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

கடந்தகால வன்செயல்கள் மற்றும் முரண்பாடுகளுக்குத் தீர்வுகாண்பது, தேசிய ஒற்றுமையை வளர்த்தெடுக்கும் எதிர்கால பகிர்வுகளின் மூலம் எதிர்கொள்ளல் போன்றவற்றின் மூலம் தேசிய நல்லிணக்கத்துக்கான வழிமுறைகளைக் கண்டறியலாம். இது நாட்டின் ஒற்றுமைக்கும், சகல மக்கள் சமூகங்களினது அமைதியான சகவாழ்வுக்கும் இட்டுச் செல்வதாய் இருக்குமென்று தேசியக் கொள்கையின் நோக்கத்தை ஜனாதிபதியின் இந்த ஆவணம் விளக்குகின்றது.



**நல்லிணக்கத்துக்கு இதுவல்ல வழிமுறை**

எதிர்த் தரப்பினரைப் பொறுத்தவரை இவ்வாறான தேசியக்கொள்கை எதுவும் அவசியம் இல்லை என்பதாகவே அவர்கள் கருதுகிறார்கள். நல்லிணக்கத்தைச் சென்றடைவதற்கு இதுவல்ல சரியான மார்க்கம், இது நிலைமைகளை மேலும் சிக்கலாக ஆக்குவதாக இருக்குமென்று ஒன்றுபட்ட எதிர்க்கட்சியினர் தெரிவித்துள்ளனர். அண்மையில் வடக்கில் இடம்பெற்ற பேரணிகளைப் பாருங்கள். இனக்குரோதத்தை கட்டியெழுப்பவே அவர்கள் விரும்புகிறார்கள்.

பெரும்பான்மை மக்களைச் சந்தேகங்கொள்ளச் செய்வதாகவே அது இருக்கின்றது. எமது சமூகங்கள் மேலும் தூரவிலகிச் செல்லும் வகையில் நாம் இவைகளை அனுமதிக்கலாகாது. மக்கள் தொண்டைகளில் நாம் எதனையும் திணித்துவிட முடியாது. நாங்களும் மீள் நல்லிணக்கத்தை உருவாக்கவே முயன்றோம். 12,000 தீவிரவாத உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு கொடுத்தோம். நாங்கள் இராணுவ முகாம்களை மூடி விடவில்லை என்றவகையில் எதிர்தரப்பினர் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

தேசியக்கொள்கை தொடர்பாக அரசு இதுவரைக்கும் கூட்டு எதிர்கட்சியினருடன் கலந்தாலோசனைகளை நடத்தவில்லை என்று அந்தத் தரப்பினரின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். ஒற்றுமையைக் குழப்பும் வகையில் ஆர்ப்பாட்டங்களை வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நடத்திக் கொண்டிருக்கும்போது, இவ்வாறான கொள்கைகளை அரசால் எவ்வாறு முன்னெடுக்க முடியும் என்றும் அவர் கேட்டார். அரசு எம்முடன் பேச்சு நடத்தும் வரை நாம் காத்திருப்போம். அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் இதில் உள்ள குறைபாடுகளை நாம் எடுத்துக்காட்டுவோம் என்றார் தினேஷ் குணவர்த்தன.

அண்மையில் வடக்கில் நடந்து முடிந்த ஆர்ப்பாட்டப் பேரணியை நாட்டின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக பரப்புரை செய்வதற்கு கூட்டு எதிர்க்கட்சியினர் தீர்மானித்துள்ளனர். அவ்வாறான கூட்டமொன்று ஒக்ரோபர் 8ஆம் திகதி இரத்தினபுரி நகரில் நடத்தப்பட இருக்கின்றது. அன்றைய தினம் புதிய கட்சி தொடர்பாக அறிவிக்கப்படும் என்ற முன்னைய முடிவு பின்போடப்பட்டுள்ளது.

**கட்சியின் கொடி தயாரிக்கப்படுகிறது**

புதிய கட்சி ஒன்றை அமைப்பதற்கான முடிவு ஏற்கனவே எடுக்கப்பட்டுவிட்டது. இரண்டு பெரிய கட்சிகள் மீதும் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்பதே இதற்குக் காரணம் என்று கூறியுள்ளார், இதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளவரான பசில் ராஜபக்ச. கட்சியின் கொடி, அதன் நிறம் எல்லாம் கூடத் தீர்மானிக்கப் பட்டுவிட்டன. கட்சிக் கொடியை வடிவமைக்கும்படி ஓவியர்களும் கேட்கப்பட்டுள்ளார்கள். இதுபற்றி நாங்கள் சரியான சமயத்தில்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசிய நல்லிணக்கம்: ஜனாதிபதி முன்வைத்துள்ள 11 பக்க ஆவணம்

விவரங்களை வெளிப்படுத்துவோம் என்று கூறினார் பசில் ராஜபக்ச. கட்சியின்பெயரை வெளியிட அவர்மறுத்துவிட்டார். ஆனால் ஆதரவாளர்களும் கட்சிக்கான பெயரைத் தெரிவுசெய்து அறிவிக்கும்படி கேட்கப்பட்டுள்ளார்கள்என்று கூறினார். அவர்மேலும் கூறுகையில், தற்பொழுது அரசை ஆதரித்து நிற்கும் பலர், புதிய கட்சி ஆரம்பிக்கப்பட்டதும், எங்களுடன் சேர்ந்து கொள்வார்கள்–என்றார். அநேகமாக அடுத்த வருடம் ஜனவரி அளவில் புதியகட்சி செயற்படத் தொடங்கிவிடும். அந்தக் காலகட்டத்தில் புதிய அரசமைப்பின் மீதான சர்வஜனவாக்கெடுப்பு நடைபெறுவதாக இருக்கும். உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களும் நடைபெறுவதாய் இருக்குமென்றார் பசில் ராஜபக்ச .

## சகலதரப்புக்களினதும் குறைகளை நீக்கி, அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு அரசியல் தீர்வுக்கான அதிகாரப் பகிர்வு

நவம்பர் 10 ஆம்திகதிய வரவு–செலவுத்திட்டம் தொடர்பாக உயர்நிலைக்கூட்டம் ஒன்றை நடத்துவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தற்போது நியூசிலாந்து சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பும்வரை எதிர்பார்த்திருப்பதாக அரச வட்டாரங்கள் தெரிவித்தன. புதுடில்லியில் நடைபெறவிருக்கும் பொருளாதார மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பிரதமர் நியூசிலாந்தில் இருந்து நேராக அங்குசெல்வார் என்று தெரிகின்றது. நியூயோர்க்கிலிருந்து வியாழக்கிழமை நாடுதிரும்பியுள்ள வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர, புதுடில்லிக்குச் சென்று பிரதமருடன் இணைந்துகொள்ளவிருக்கின்றார். நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவும் அவர்களுடன் இணைந்துகொள்ளவிருப்பதாகத் தெரிகின்றது.

## நல்லிணக்கத்துக்கான மார்க்கம் இதுவல்ல–கூட்டு எதிர்க்கட்சி

வரவிருக்கும் புதிய வரவு–செலவுத் திட்டம் தொடர்பான பொதுக்கருத்தொன்றை உருவாக்கிக் கொள்வதற்கே ஜனாதிபதி உயர்மட்டப் பேச்சு வார்த்தைகளை நடத்தவிருப்பதாகத் தெரிகின்றது. வரவு–செலவுத்திட்ட ஆலோசனைகளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் எதிர்க்க மாட்டார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. டிசெம்பர் 10 திகதியளவில் பட்ஜெட் மீதான விவாதம் நிறைவுபெறும் என்றாலும், மேலும் ஒருவாரத்துக்கு நீடிக்கப்படலாமென்று அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வரவிருக்கும் வரவு–செலவுத்திட்டம் உண்மையில் அரசுக்கு அதிமுக்கிய விடயமாக கவனம்செலுத்தப்படுவதாக இருக்கப்போகின்றது. இதற்கு உள்ளூராட்சித் தேர்தல்களை அடுத்தவருட ஆரம்பத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருப்பதும் ஒருகாரணம்.

அதேசமயம் தேசிய நல்லிணக்கமும், பன்னாடுகள் அக்கறை கொண்டிருப்பதால் முக்கியம் பெறுகின்றது. அந்த வகையில் போரை வென்றெடுத்ததைவிட இது மிகக் கடினமான விடயமாகவே இருக்கப்போகின்றது. இதில் சம்பந்தப்பட்டுள்ள சகல தரப்பினரதும் மனங்களை வென்றெடுப்பது இதுவரை ஐக்கிய முன்னணி அரசால் கணிசமான அளவில் சாத்தியப்படாமலே இருந்து வருகின்றது. ஒருகாலத்தில் போராளிகளால் நிரம்பிக் காணப்பட்ட வடக்கு மாகாணம், இப்போது விரைவாக வளர்ந்துவரும் பிரதான பிரதேசமாகக் காணப்படுகின்றது. இருந்தாலும் அரசும், அதற்கு நிபந்தனை இன்றி ஆதரவு வழங்கிவரும் த.தே.கூட்டமைப்பும் நிலைமையை கைநழுவிப் போகச்செய்து கொண்டிருப்பது போல் தோன்றுகின்றது. எழுக தமிழ் போராட்டத்தை தலைமை வகித்து வடக்குமாகாண முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன் நடத்தியிருப்பது, அரசுக்குள்ளேயும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளேயும் கலகத்தை ஏற்படுத் தியுள்ளது. த.தே.கூட்டமைப்பு இந்த ஆர்ப்பாட்டத்துக்கும் தமக்கும் தொடர்பில்லையென்றும் அறிவித்துள்ளது. இது இனக்குரோத விதைகளை விதைக்கவும், இராணுவத்தை இழிவுபடுத்து வதாகக் காட்டவும், ஏனைய சமூகங்கள் மத்தியில் சந்தேகங்களைக் கிளப்பவும் வழி வகுத்துள்ளது. இனவாதத்தை ஒழிப்பது



என்பது வாய் வார்த்தையில் இலகுவாக இருந்தாலும், செயலளவில் அவ்வளவு சுலபமான தல்ல என்பதை இது காட்டுகின்றது. தேசியக்கொள்கை என்பது ஆவண பூர்வமாக மட்டும் இருப்பது எந்தவித பயனையும் தரப்போவதில்லை. தேசியமட்டத்தில் அதற்கொரு விருப்பம் இருக்கவேண்டும். சகல கட்சிகளும் இணைந்து செயற்பட்டு அதனை யதார்த்தமாக்க வேண்டும். அதுவே பிரச்சினைக்கான தீர்வாக அமையமுடியும்.

# கடன் எடுத்தவர் யாரோ! அதை மீளச் செலுத்துபவர் யாரோ! இதற்கொரு நீதி கிட்டுமா?

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு 2000ஆம் ஆண்டளவில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபன விரிவாக்கக் கடன் திட்டத்தின் கீழ், சிறுதொழில் முயற்சியாளருக்கு கடன் வழங்கும் வகையில் ரூபா ஒருமில்லியன் அளவில் நன்கொடை வழங்கப்பட்டது. மேற்படி கருத்திட்டத்தின் மூலம் சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம் அங்கத்தவர்களுக்கும், பணியாளர்களுக்கும் ரூபா 50,000 வீதம் கடன் வழங்கியது. கடன் பெறும் பயனாளிகளுக்குச் சங்கத்தில் வேலை செய்யும் இரண்டு பணியாளர்கள் பிணையாளராக நிற்கவேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் கடன் வழங்கப்பட்டது. கடன் பெற்றவர்களில் கணிசமானோர் பொதுச்சபை உறுப்பினர்கள், கிளைக் குழு உறுப்பினர்கள் கடன் வழங்கும்போது வெளியார் சிலருக்கு பிணையாக நிற்குமாறு சில பணியாளர்களுக்கு அழுத்தமும் கொடுக்கப்பட்டது.

பத்துவருடங்களுக்கு முன்னர் ஓய்வுபெற்றவர்களுக்கு கடந்த சேவைக்காலப் பணிக்கொடை சங்க நிதி நிலைமை காரணமாக வழங்கப்படவில்லை. நாற்பது ஆண்டுகளுக்கு மேல் சங்கத்தை வழிநடத்துபவர்களின் சாதனையால் பெறப்பட்ட பொதுச் சங்கத்தின் முக்கிய சொத்தாகிய காணி ஒன்று ரூபா 45 மில்லியனுக்கு விற்றுத் தற்போது ஓய்வுபெற்றவர்களின் பணிக்கொடை வழங்கப்படுகின்றது. பணிக்கொடை பெறச் சென்ற ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு, அவர்கள் பிணைக்கு நின்ற பயனாளிகளின் தவணை தப்பியதன் நிலுவை மற்றும் வட்டி ஆகியவற்றைக் கழித்துக்கொண்டே பணிக்கொடை வழங்கப்படுகின்றது. மேற்படி கழிக்கப்படும் பணம் செல்மதி நிலுவையாக்கப்பட்டு கடன்காரர் கட்டி முடித்து கடன் தீர்ந்ததும், திருப்பி வழங்கப்படும் என நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டது. இது சாத்தியமாகுமா?


பணிக்கொடை வழங்கப்பட்டு 3 மாதங்கள் சென்றும், கடன் பெற்றோரிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் நிலுவையை அறவிடுவதற்கு சங்கத்தால் எத்தகைய நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.கடன் நிலுவை உள்ள பயனாளிகளுக்கு நிலுவையைச் செலுத்துமாறு எத்தகைய கடிதமும் இதுவரையும் வழங்கப்பட வில்லை. தற்போது பணியாளர்களின் பணத்தில் இருந்து அறவிடுவதற்கு முன்னர் கூட, அவர்களுக்கு எவ்வித அறிவித்தலும் வழங்கப்படவில்லை. கடன் பெற்ற தவணை தப்பிய கடன்காரர்களில் கணிசமானோர் பொதுச்சபை உறுப்பினர்கள், கிளைக்குழு உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகத்துக்கு நெருக்கமானவர்களாக இருப்பதால் கடன் நிலுவையைச் செலுத்தும்படி அவர்களுக்கு அழுத்தம் கொடுக்கப்படவில்லை எனத் தெரியவருகின்றது. தவணை தப்பிய கடன்காரர் கிளைக்குழுவிலோ பொதுச் சபையிலோ உறுப்பினர்களாக இருக்க முடியாது என்பது கூட்டுறவு விதி. ஆனால் தற்போது பொதுச்சபையில் உள்ளவர்களில் பலர் தவணை தப்பிய கடன்காரர்கள்.

உலகிலேயே மிகமிகக் குறைந்த சம்பளத்தில் கூடிய நேரம்வேலை செய்யும் கூட்டுறவுப் பணியாளருக்கு பென்சன்(ஓய்வூதியப்பணம்) இல்லை. பணிக்கொடையையே நம்பி இருக்கும் இவர்களது பணத்தில் இருந்து அவர்கள் பிணை நின்றோர் செலுத்த வேண்டிய கடன் நிலுவையை வசூலிப்பது நியாயமானதா? மனிதாபிமானதா?பணத்தைப் பெற்றவர் யாரோ? கொடுத்தவர் யாரோ? தற்போது பணத்தைக் கட்டும் பரிதாப நிலையில் உள்ளவர்கள் பாவிகளாகிய பணியாளர்களே. இது குறித்து சம்பந்தப்பட்ட திணைக்களமோ, மாகாண அமைச்சோ உரிய நடவடிக்கை எடுத்து உதவுமாறு கோரி நிற்கின்றோம்.

பாதிக்கப்பட்ட ஓய்வு நிலைப் பணியாளர்கள்
சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமாதான ஒப்பந்தத்தை கைவிட்டது அமெரிக்கா

சிரியாவில் அமைதியை ஏற்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து முனைப்புக் காட்டிய அமெரிக்கா, ரஷ்யாவுடனான சமாதான ஒப்பந்தத்தை கைவிடுவதாக அறிவித்தது.
சிரிய கிளர்ச்சிக் குழுவுக்கும், அரச படைக்கும் இடையில் கடந்த பல வருடங்களாக போர் இடம்பெற்று வருகிறது. சிரிய அரச படைக்கு ஆதரவாக ரஷ்யாவும் கிளர்ச்சிக் குழுவுக்கு ஆதரவாக அமெரிக்காவும் செயற்பட்டு வருகின்றன. கடந்த ஐந்து வருடங்களாக இடம்பெற்ற போரில், கிட்டத்தட்ட 3 லட்சம் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 7 லட்சம் பேர் இடம்பெயர்ந்தனர். சிரியாவின் அரசியல் போக்கை தீர்மானிக்கும் இருபெரும் சக்திகளான அமெரிக்கா-ரஷ்யா இரண்டுக்கும் இடையில் ஐக்கிய நாடுகள் சபை பல்வேறு அழுத்தத்தைக் கொடுத்து, அண்மையில் சமாதான ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது. ஆனால், வெறும் 6 நாள்கள் மட்டுமே இந்த ஒப்பந்தம் நீடித்தது. ரஷ்யா ஒப்பந்தத்தை மீறி போரை ஆரம்பித்தது. ஆனால், அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து சிரியாவில் அமைதியை ஏற்படுத்த முனைப்புக் காட்டியது. முயற்சி எவையும் பயனளிக்கவில்லை. அலெப்போ நகரில் ரஷ்யா தனது தாக்குதலை தற்போது இரட்டிப்பாக்கியதையடுத்து சமாதான ஒப்பந்தத்தை தானும் கைவிடுவதாக அமெரிக்கா அறிவித்தது. இதனையடுத்து சிரியாவில் ரஷ்ய படைக்கும், சிரிய அரச படைக்கும் எதிரான போராட்டத்தை அமெரிக்கா விரைவில் ஆரம்பிக்கும் எனக் கருதப்படுகிறது. (ம-ரி4)

# கைவிரித்தது மத்திய அரசு

காவிரி மேலாண்மை வாரியத்தைத் தன்னால் அமைக்க முடியாது என்று-இந்திய மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்தது.
தமிழ்நாட்டில் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சம்பாநெல் இனம் பயிரிடப்பட்டுள்ளது. போதிய நீர் இல்லாத காரணத்தால் காவிரியிலிருந்து தமக்கு நீர் தருமாறு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. உச்ச நீதிமன்றம் தமிழ்நாட்டுக்கு காவிரியை திறந்துவிடுமாறு தெரிவித்ததையடுத்து கர்நாடகாவில் கலவரங்கள் வெடித்தன. கர்நாடகாவைக் கண்டித்து தமிழ்நாட்டிலும் கலவரங்கள் வெடித்தன. கோடிக்கணக்கான சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்டன, சேதமடைந்தன. பலர் துன்புறுத்தப்பட்டனர். இந்த விவகாரத்தில் இந்திய மத்திய அரசு தலையிட வேண்டும்என்று அழுத்தம் கொடுக்



கப்பட்டது. காவிரி நடுவர் மன்றம், காவிரி மேலாண்மை வாரியம் என்ற ஒன்றை அமைத்து, அதனூடாக காவிரி விவகாரத்தை நகர்த்த வேண்டும் என்று தீர்ப்பிட்டதையடுத்து, இந்த விவகாரம் உச்ச நீதிமன்றத்துக்கு சென்றது. குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. விசாரணையில் காவிரி விவகாரத்தில் மத்திய அரசு தலையிட முடியாது என்றும், மாநிலங்களின் மூலமே இந்த விவகாரத்தை தீர்க்க முடியுமென்றும், மத்திய அரசை உச்ச நீதிமன்றம் நிர்ப்பந்திக்க சட்டத்தில் இடமில்லை என்றும்-மத்திய அரசு குறிப்பிட்டது. (ம-ரி4)

# நஞ்சூட்டப்பட்ட தீவிர சிகிச்சை


டமஸ்கஸ், ஒக்.5
ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட் (ஐ.எஸ்.ஐ.எஸ்.) அமைப்பின் தலைவரான பக்தாதிக்கு நஞ்சூட்டப்பட்டது எனவும், இதனால் அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும், அரேபிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடாக அங்கீகரித்துள்ளது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. உலகெங்கும் குண்டுவெடிப்புச் சம்பவங்களை நிகழ்த்துதல், யாசிடி இனப் பெண்களை பாலியல் அடிமைகளாக வைத்திருத்தல், கொலைக் குற்றங்கள் என உலகுக்கே சத்துருவாக ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு விளங்குகிறது. இதனால் அமெரிக்காவின் தலைமையில் கூட்டுப்படைகளும், ரஷ்யாவும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக போரை முன்னெடுத்து வருகிறது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவரான அபு பக்கர் அல் பக்தாதியின்



# ட்ரம்ப் அறக்கட்டளைக்கு நியூயோர்க்கில் தடை



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் பிரதான வேட்பாளர்களில் ஒருவரான டொனால்ட் ட்ரம்பின் அறக்கட்டளையின்செயற்பாடுகளுக்கு நியூயோர்க் நகரில் தடை விதிக்கப்பட்டது.
நியூயோர்க் நகரில், வருடாந்தம் 25 ஆயிரம் டொலர்களுக்கு மேல் நிதியுதவி கோரும் எந்த நிறுவனமும் சில சட்டதிட்டங்களுக்கு அமைவாக முறையாகப் பதியப்பட்டிருக்கவேண்டும். ஆனால், ட்ரம்பின் அறக்கட்டளை பதிவுகள் ஏதுமின்றி செயற்பட்டதாலேயே இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக அரச சட்டத்தரணிகள் குறிப்பிட்டனர்.
இந்த விசாரணையின் பின்னணியில் இருக்கும் அரசியல் நோக்கங்கள் குறித்து, தாங்கள் மிகவும் கவலையடைந்துள்ளோம். விசாரணைக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கத் திட்டமிட்டுள்ளோம் என ட்ரம்ப் அறக்கட்டளையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ம-ரி4)



ஸ்பெயினின் டெரொங்கனா நகரில் வருடாவருடம் நடைபெறும் மனித கோபுரம் அமைக்கும் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் பல குழுக்களாகப் பிரிந்து ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். (ரி4)

# அமெரிக்கத் தேர்தல் கால

வொஷிங்ரன், ஒக். 5
அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல்களின்போது தனது ஆயுதப் பரிசோதனைகளைச் செய்யும் வடகொரியா, அமெரிக்காவின் புதிய ஜனாதிபதிக்கு மனதளவில் அழுத்தத்தைக் கொடுப்பதன் மூலம், தனது ஆயுத பலத்தை நிரூபிக்க எத்தனிப்பதாக ஆய்வில் வெளிப்பட்டது.
கடந்த 60 வருடங்களில் அமெரிக்காவில் நடைபெற்ற தேர்தல்களையும், அந்தக் காலப்பகுதிகளில் வடகொரியாவின் செயற்பாடுகள் தொடர்பாகவும் பன்னாட்டு நிறுவனம் ஒன்று ஆய்வு நடத்தியது. குறித்த ஆய்வில் அமெரிக்காவில் தேர்தல் நடைபெறுகின்ற காலப்பகுதிகளில், குறிப்பாக ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகின்ற காலப்பகுதிகளில் ஆயுதப் பரிசோதனைகளையும், அணுவாயுதப் பரிசோதனைகளையும் வடகொரியா நடத்துவதாகவும், இந்தப் பரிசோதனைகளின் மூலம் தனது ஆயுத பலத்தை வெளிப்படுத்த எத்தனிப்பதாகவும் தெரியவந்துள்ளது.
அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் காலங்களில் வடகொரியா உலக அளவில் பதற்றத்தை ஏற்படுத்துகிறது. தேர்தல்கால வாய்ப்பை பயன்படுத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ர் அல் பக்தாதி எனவும் தகவல்



தலைக்கு 10 மில்லியன் அமெரிக்க டொலர்களை அமெரிக்கா அறிவித்துள்ளது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அவர், அவருடன் இருந்த குழுக்களாலேயே நஞ்சூட்டப்பட்டதாக அரேபிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இஸ்லாமிய சடங்கு ஒன்றுக்காக சமைக்கப்பட்ட மதிய உணவிலேயே நஞ்சு கலக்கப்பட்டு, பக்தாதிக்கு கொடுக்கப்பட்டது. அவருடன் ஏனைய மூன்று பிரதான தலைவர்களுக்கும் நஞ்சு கொடுக்கப்பட்டுள்ளது.

பக்தாதிக்கு தீவிர சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. சக குழுக்களே இதை அரங்கேற்றியுள்ளனர். ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் அவசர கூட்டமொன்றில், பக்தாதிக்கு நஞ்சு கலந்தவர் என்று சந்தேகிக்கப்பட்டவரது உடலில் தற்கொலை அங்கி பொருத்தப்பட்டு வெடிக்க வைக்கப்பட்டது. இதில் அவருக்கு அருகிலிருந்த 16 ஆயுததாரிகள் சாவடைந்தனர். அனைவரும் சம்பவத்துடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புடையவர்களாக இருக்கலாம் என அரேபிய ஊடகங்கள் மேலும் தெரிவித்தன. (ம-ரி4)



## அல்குவைதாவின் எகிப்துத் தலைவர் கொல்லப்பட்டார்

கைரோ, ஒக். 5

அல்குவைதாவின் எகிப்துக்கான தலைவர் அமெரிக்க கூட்டுப்படை தாக்குதலில் நேற்றுமுன்தினம் சாவடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அல்குவைதாவின் எகிப்துக்கான தலைவர் அபுஅல்பராஜ்அல்மாஸ்ரி இட்டிப் மாகாணத்தில் பயணித்துக் கொண்டிருந்தபோது, அமெரிக்காவின் துல்லிய வான் தாக்குதலில் கொல்லப்பட்டார். இதை ஆயுதக்குழுவும் ஏற்றுக் கொண்டது. பிரிட்டனின், சிரியாவுக்கான மனித உரிமைகள் அவதானிப்பு குழுவின் அறிக்கையிலும் அவரதுசாவுஉறுதிப்படுத்தப்பட்டது. இந்த தாக்குதல் வெற்றிகரமானது என அமெரிக்கா தெரிவித்தது. (ம-ரி4)

## ஒரே நாளில் 5,650 அகதிகள் சென்றடைந்தனர் இத்தாலியை

ரோம், ஒக்.5

இத்தாலியில் நேற்றுமுன்தினம் மட்டும் 5 ஆயிரத்து 650 அகதிகள் தரையிறங்கியதாக இத்தாலிய கடலோரப் பாதுகாப்புப் படை அறிவித்தது.

ஈராக், சிரியா, லிபியா, எகிப்து நாடுகளில் இடம்பெற்றுவரும் போர்கள் காரணமாக அங்குள்ள மக்கள் இத்தாலிக்கு அகதிகளாகச் செல்வது இந்த வருடத்தில் மிகையாக அதிகரித்துள்ளது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் மட்டும் 5 ஆயிரத்து 650 அகதி



கள் இத்தாலியைச் சென்றடைந்ததாக இத்தாலிய கடலோரப் பாதுகாப்புப் படை அறிவித்தது. 40 படகுகளில் அனைவரும் வந்தனர் எனவும், ஒரே நாளில் பதிவான ஆகக்கூடிய அகதிகள் வரவுகளில் இதுவும் ஒன்று என இத்தாலிய கடலோரப் பாதுகாப்புப் படை மேலும் தெரிவித்தது.

இந்த வருடத்தில் மாத்திரம் இத்தாலியில் ஒரு லட்சத்து 32 ஆயிரம் அகதிகள் தரையிறங்கியுள்ளனர். இத்தாலியை நோக்கிப் பயணித்த 3 ஆயிரத்து 54 பேர் பயணத்தின் போது மத்திய தரைக் கடலில் சாவடைந்தனர் என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. (ம-ரி4)



## கோரத் திருவிழா

பீஜிங், ஒக். 5

நடப்பு வருடத்துக்கான பொகெட் திருவிழா சீனாவில் தற்போது நடைபெற்று வருகிறது.

சீனர்கள், 10 தினங்கள் மாமிசமற்ற உணவு உண்டு அல்லது நோன்பு இருந்து கொண்டாடும் திருவிழாவே பொகெட். ஒக்ரோபர் மாதத்தின் முதல் 10 நாள்களும் திருவிழா நடைபெறும். தம்மை நோன்பு மூலம் தூய்மைப்படுத்திய மக்கள், தமது உடலில் உலோக பொருள்களைக்கொண்டு துளையிட்டு நீண்ட நடைபயணம் மூலம் கோயில்களைச் சென்றடைவர். நடப்பு வருடத்துக்கான பொகெட் விழா பல்லாயிரக்கணக்கான மக்களின் பங்குபற்றலுடன் சீனாவில் கோலாகலமாக நடைபெற்று வருகிறது. (ம-ரி4)

## போலந்து

## கருக்கலைப்பு சட்டத்துக்கு எதிராக தெருக்களில் திரண்டனர் பெண்கள்

வார்சோ, ஒக். 5

போலந்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கருக்கலைப்புத் தடைச் சட்டத்துக்கு எதிராக ஆயிரக்கணக்கான பெண்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கருக்கலைப்பை முற்றாக இல்லாமல் செய்யும் விதத்தில் போலந்தில் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி கருக்கலைத்தவருக்கு 5 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்படுவதுடன் உதவிபுரிந்த மருத்துவருக்கும் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்று புதிய சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இந்த சட்டத்தை பல பெண்கள்ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் அனைவரும் ஒன்று திரண்டு நேற்றுமுன்தினம் பெரியதொரு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். குறித்த தினத்தை கறுப்புத் திங்கள் எனவும் அவர்கள் பிரகடனம் செய்தனர்.

கருக்கலைப்புத் தொடர்பாக பெண்களே முடிவெடுக்க வேண்டும். நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய சட்டம் பெண்ணியத்துக்கு முரணானது என ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர். (ம-ரி4)



## ந்தில் எல்லை மீறுகிறது வடகொரியா

அந்த நாடு தன்னை ஓர் ஆயுத பலமான நாடாக உலகுக்கு காட்டிக்கொள்ள எத்தனிக்கிறது. மட்டுமல்லாமல் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக வருபவருக்கு அழுத்தத்தைக் கொடுக்கவும் வடகொரியா முனைகிறது.

இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமெரிக்காவின் தேர்தல் காலமான இந்தக் காலத்தில், வடகொரியா கண்டம் விட்டுக் கண்டம் பாயும் அணுகுண்டு ஏவுகணையைச் சோதித்தமையும், அத்தகைய ஏவுகணையை ஏவும் வல்லமை பெற்ற நீர்மூழ்கிக் கப்பலை வடகொரியா கட்டுவதையும் குறிப்பிடலாம் என குறித்த நிறுவனம் தனது அறிக்கையில் குறிப்பிட்டது. (ம-ரி4)



## அமெ. - பிலிப்பைன்ஸ் கூட்டுப் பயிற்சி நிறுத்தம்

அமெரிக்காவுடன் இணைந்து மேற்கொள்ளும் கூட்டுப் போர்ப் பயிற்சியை முடிவுக்குக் கொண்டுவர திட்டமிட்டுள்ளதாக பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி றொட்றிக்கோ டுடேர்தே அறிவித்தார். ஆசிய கண்டத்தில் பிலிப்பைன்ஸ் அமெரிக்காவுக்கு நெருங்கிய கூட்டாளியாக இருந்து வருகிறது. பிலிப்பைன்ஸ் மற்றும் அமெரிக்கா இடையே அடுத்த வாரத்தில் கூட்டு பாதுகாப்பு பயிற்சி மேற்கொள்ள ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது. இந்தப் போர் பயிற்சியே அமெரிக்கா வுடன் இணைந்து மேற்கொள்ளும் கடைசி போர் பயிற்சி என பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி டுடேர்தே அறிவித்தார். அமெரிக்காவுடனான நீண்டகால போர்ப் பயிற்சியைக் கடைப்பிடிக்க விருப்பம். ஆனால், இந்த கூட்டுப்பயிற்சிக்கு சில நாடுகளிடமிருந்து எதிர்ப்புக்கள் வந்துள்ளன. எனவே தற்போதைய நிலையில் இதை விரும்பவில்லை என டுடேர்தே மேலும் தெரிவித்தார். (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்தியாவுடன் மோதலைத் தீர்மானித்த நாள்

ந.லோகதயாளன்

இந்திய -இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் இந்திய இராணுவத்தினருடன் போர் மூழ்வதற்குக் காரணமான சம்பவம் நடந்ததினம் இன்று. பாரதத்தின் இரண்டாவது நயவஞ்சக எண்ணத்தால் தீயினில் எரியாத 12 தீபங்களின் 29ஆவது ஆண்டின் நினைவு நாள். இந்திய இராணுவம் ஈழத்துக்கு வருகை தந்ததன் பின்னர் முதலில் ஓர் தீபம் 12 நாளாக உருகியது. அந்த சோகத்தில் இருந்து மக்களும் போராளிகளும் மீள்வதற்கு முன்னர்; ஒரே நாளில் 12 தீபங்கள் அணைய இதே இந்தியா துணையாக நின்றது.

1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் 3ஆம் திகதி அதிகாலையில் பருத்தித்துறைக் கடற்பரப்பில் பயணித்த கடல் புறா படகை வழிமறித்த இலங்கை அரசு அதில் பயணித்த 14 புலிகளையும் கைது செய்தது. இலங்கை -இந்திய ஒப்பந்தம் எழுதப்பட்டு, இந்திய இராணுவத்தின் கீழ் வடக்கு- கிழக்கு நிர்வாகம் மேற்பார்வை இடம்பெற்ற நிலையில், தருணம் பார்த்துக் காத்திருந்த இலங்கை அரசு, விடுதலைப் புலிகளின் அந்தக் காலத்தின் இரு மாவட்டங் களின் தளபதிகள் உள்ளிட்ட 12 பேரையும் சிறைப்பிடித்தது.

இவ்வாறு கடலில் கைதான 12 புலிகளும் காங்கேசன்துறை இறங்கு துறையின் ஊடாக பலாலி இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். குறித்த செய்தி புலிகளின் தலைமைக்குப் பறந்தது.

உடனடியாகவே யாழில் உள்ள இந்திய இராணுவ அதிகாரிகளின் கவனதுக்கும் இந்தியத் தூதரகத்தின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது. திலீப னின் விடயத்தில் புலிகளின் மனோதிடத்தை நன்கே அறிந்திருந்த இந்தியா உடனடியாகச் செயற்படுவது போன்று, ஓர் உப்புச் சப்பற்ற ஏற்பாட் டில் இறங்கியது. அந்த ஏற்பாட்டின் பிரகாரம் மறுநாள் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் உள்ளிட்ட சிலர் பலாலி இராணுவ முகாமுக்குச் சென்று பார்வையிட, ஏற்பாட்டை மட்டும் இந்தியா வழங்கியது.

பலாலி சென்ற பாலசிங்கம் தலைமையிலானோர் புலிகளின் விடுதலை குறித்துப் பேசிய போது, இந்தியத் தரப்பு இலங்கை அரசின் விடயம் இது எனக் கைவிரித்தது. இலங்கை அதிகாரிகளோ வடக்கு-கிழக்கு தற்போது இந்திய இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளது எனக் கைவிரித்தனர்.

நிலைமையின் விபரீதத்தை உணர்ந்த பாலசிங்கம், இறுதியில் கைது செய்யப்பட்ட புலிகளைச் சந்திக்க முயன்றார். அதன் பிரகாரம் அவர் களைச் சந்தித்தார். அதன்போது கைதான புலிகள் மிகத் தெளிவாகத் தமது நிலைப்பாட்டைத் தெரிவித்தனர். ஒப்பந்தத்தின் பிரகாரம் நாம் எந்த விதமான ஆயுதங்களும் இன்றிப் பயணித்தமையினாலேயே கைதானோம். அதற்கு இந்தியாவே பொறுப்பு. எம்மை விடுதலை செய்ய வேண்டியதும் இந்தியாவே. அதற்கு மாறாக கொழும்பு கொண்டுசெல்ல முயன்றால், நாங்கள் எமது உயிரை மாய்க்கும் நிலையே ஏற்படும் என்பதை இந்திய-இலங்கை அதிகாரிகளிடம் தெரிவியுங்கள் என உறுதிபடக் கூறினார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தளபதி குமரப்பா அவசர அவசரமாக ஒரு கடிதம் வரைந்து அதனை பாலசிங்கம் அண்ணையின் கையில் இரக சியமான முறையில் வழங்கி, அதனை தலைவரிடம் கொடுக்குமாறும் வேண்டினார். இந்திய- இலங்கை அதிகாரிகளுடனான சந்திப்பும் பயனற்று, பாலசிங்கம் பலாலியை விட்டு வெளி யேறினார். குறித்த விடயம் தலைமைக்குத் தெரியப்படுத்தப்பட்டு அடுத்த கட்டமாக இவர்களின் விடுதலைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இந்த இடைவெளியில், இலங்கை-இந்திய அரசுகள் இணைந்து 12 புலி களையும்விசாரணை என்னும் பெயரில் கொழும்புக்கு ஏற்றுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றன. அதனைச் சிறையில் இருந்த புலிகளுக்கும் தெரியப் படுத்தினர். கொழும்பு கொண்டு செல்லப்பட்டால் விசாரணை என்னும் பெயரில் இடம்பெறப்போகும் சித்திரவதைகளை அறியாதவர்கள் அல்லர் புலிகள். இதனால் விடுதலைப் புலிகளுக்கே உரித்தான கொள்கையின் பால் நின்று முடிவை எடுக்கின்றனர்.

குறித்த சம்பவத்தில் அந்தக் காலத்தில் திருமலை மாவட்டத்திலேயே எதிரிகளுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய திருகோணமலை மாவட்டத் தளபதி புலேந்தி அம்மான், மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களின் தளபதி குமரப்பா, அப்துல்லா, ரகு, நளன், அன்பழகன், றெஜினோல்ட், கரன், [illegible], மிரேஸ், பழனி மற்றும் தவக்குமார் ஆகிய போராளிகளே இவ்வாறு கைதுசெய்யப் பட்டிருந்தனர்.

இதில் திருமலைத் தளபதி புலேந்தி அம்மானை எதிரி பலதடவை குறி வைத்தும் நெருங்க முடியவில்லை. சிறு ஆயுதம் கையில் இருந்தாலே எதிரியின் கோட்டைவரை சென்று வருபவன். புலிகளின் திருமலையின் முன்னாள் தளபதி சீலனின் வளர்ப்பு அப்படி இருந்தது. இதனால் வெறுங் கையுடன் அகப்பட்ட புலேந்தி அம்மானை விடுவித்தால் இனி எந்தக் காலத்திலும் அம்மானை நெருங்கமுடியாது என்பது அப்போதைய இராணுவத்தின் புலனாய்வுத் தகவலாக இருந்தது.

இதன் காரணத்தினாலேயே புலேந்தி அம்மானை எப்படியும் கொழும்புக்கு கொண்டு செல்ல வேண்டும் என்பதில் அரசு தீவிரம் காட்டியதால் 14 பேரும் விடுதலைப் புலிகளின் உயர்ந்த மரபுக்கமைய சயனைட் வில்லையை உட்கொண்டு வீரச்சாவடைய முடிவெடுக்கின் றனர். இவ்வாறு சயனைட் உட்கொண்ட சமயத் தில், அவர்களை நெருங்கிய சிங்களச் சிப்பா யைக் கூட புலேந்தி அம்மான் தனது சயனைட் கடித்த வாயினால் கடித்துவிட அவனும் அங்கிருந்து அவசரமாக அப்புறப்படுத்தப்படுகின்றான்.


இதில் 12 புலிகள் வீரச்சாவை அணைத்தனர். இருவர் காப்பாற்றப்பட்டனர். இந்தச் செயலை தமிழ் மக்கள், இந்தியாவெந்த புண்ணில் வேல் பாச்சியதாகவே கருதினர். இந்தச் செயலே பின்னாளில் இந்திய இராணுவத்தினருடன் போர் புரிவது என்ற முடிவுக்கு புலிகளை இட்டுச் செல்ல உந்து சக்தியாக விளங்கியது என்றால் மிகையாகாது. இவ்வாறு சாவடைந்த 12 புலிகளின் உடல்களும் அப்போதைய மரபுக்கமைய தீருவில் வெளியில் தீயுடன் சங்கமம் ஆகிய நினைவைச் சுமந்த 29ஆவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# போர்க் கால இலக்கியங்கள்

நா.யோகேந்திரநாதன்









போர் என்றாலே அவலங்கள் நிறைந்தது என்ற கருத்தை எவரும் மறுத்துவிட முடியாது. உயிரிழப்புகள், உடைமையிழப்புகள், இடப்பெயர்வுகள் என மனித குலத்தின் இயல்பு வாழ்வை அழித்து துன்பங்களுக்குள்ளும், துயரங்களுக் குள்ளும் தள்ளிச் சமூகக் கட்டமைப்பையே நிலைகுலைய வைக்கிறது. ஒரு மனிதனின் சாவு எவ்வளவு பாரதூரமான சோகத்தையும், பாதிப்பையும் ஏற்படுத்தும் என்பதை நாமறிவோம். ஆனால், போர்க்காலத்திலோ சாவுகள் என்பன வெறும் எண்ணிக்கை என்றளவுக்கு நிலை தாழ்ந்து விடுகின்றன. ஆனால், போர் இல்லாத நாளே இல்லையென்று சொல்லுமளவுக்கு உலகம் போர்களுக்குள் அமிழ்ந்து போய்க்கிடக்கிறது. உலகில் ஆக்கிரமிப்புக்களும் ஒடுக்குமுறைகளும் இருக்கும்வரை போரை இல்லாதொழிக்க முடியாது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். ஆக்கிரமிக்கும் நாடுகளுக்கும் ஆக்கிரமிக்கப்படும் நாடுகளுக்குமிடையே போர்கள் மூளுகின்றன.

ஒடுக்கமுற்படுபவர்களுக்கும், ஒடுக்கப்படுபவர்களுக்குமிடையே மோதல்கள் நிகழ்கின்றன. சில தரப்பினர் வெற்றிபெற மறு பகுதியினர் தோல்வியடைகின்றனர். தோல்வியடைபவர்கள் மீண்டும் திரண்டு போரிடுகின்றனர். இவ்வாறு போர்கள் தொடர்கதைகளாக விளங்குகின்றன. இறப்புக்களும் இழப்புக்களும் வெறும் செய்திகளாகவும் மனித உரிமைகள் சபையினது அறிக்கைகளாகவும் அடங்கி விடுகின்றன.

ஆனால், போரில் எந்த ஒரு தரப்பிலும் இல்லாத ஒரு சிலர் கொள்ளை இலாபம் சம்பாதிக்கின்றனர். ஆயுத உற்பத்தியாளர்கள், ஆயுத விநியோகஸ்தர்கள், தரகர்கள், அரசியல்வாதிகள் போன்றோர் வெள்ளை ஆடை கசங்காமலே பணத்தைக் குவிக்கின்றனர். போர் முடிந்த பின்பும் இன்னுமொரு சாரார் அபிவிருத்தி என்ற பேரிலும் மீளமைப்பு எனச் சொல்லியும் பணம் குவிக்கின்றனர்.

இந்த ஆயுத உற்பத்தியாளர்களே அரசுகளுக்கும் அவற்றை எதிர்த்துப் போரிடும் போராளிகளுக்கும் ஆயுததங்களை விநியோகிக்கின்றனர்.

அதேவேளையில் போர்க் காலம் ஒப்பற்ற இலக்கியங்களையும் உருவாக்கிவிடுகின்றது. மக்களின் அவலங்களும் ஆதங்கங்களும் இலக்கியங்களாக்கப் படும்போது அவை அழியா வரம் பெற்ற வரலாற்றுப் பதிவுகளாகிவிடுகின்றன. அதேவேளையில் போர்க் கால இலக்கியங்களாக அநீதிகளும் நியாயப்படுத்தப் படுவதுண்டு. எனினும் போர் இடம்பெறும் காலங்களில் உருவாகும் ஒப்பற்ற உணர்வுபூர்வமானவையும் உண்மைகளை வெளிக்கொண்டு வருபவையுமான பல படைப்புகள் போரில் அழிந்து விடுவதுண்டு. அல்லது எதிரிகளால் அழிக்கப்பட்டு விடுவதுண்டு. ஆனால், போரின் பின்பு உருவாகும் போர்க்கால இலக்கியங்கள் நிலைபெற்று இலக்கியமாக மட்டுமன்றி வரலாற்று ஆவணமாகவும் விளங்குகின்றன. சில மாபெரும் காவியங்களாகவே போற்றப்படுகின்றன.

போர்க்கால இலக்கியங்கள் என்றவகையில் முதன்மையாகப் பார்க்கப்படுபவை சோவியத் இலக்கியங்களே. இவை பல நாடுகளிலும் பல்வேறு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டும் பல இலட்சம் மக்களால் படிக்கப்படுகின்றன. பல நல்ல தரமான எழுத்தாளர்கள் வருவதற்கான வழிகாட்டிகளாக இவை விளங்கின என்றால் மிகையாகாது. மார்க்ஸிம் கோர்க்கியின் தாய், டால்ஸ்டாயின் போரும் காதலும், புத்துயிர்ப்பு, ஒஸ்திரோவெஸ்கியின் வீரம் விளைந்தது, உண்மை மனிதன் கதை என்பன இன்றும் பேசப்படும் நாவல்களாக விளங்கிவருகின்றன. அதேபோன்று அன்ரன் செக்கோவின் படைப்புக்களும் தனித்துவம்மிக்கவை. இவையெல்லாம் விடுதலைப் புரட்சியில் மக்களின் தன்னலமற்ற பங்பளிப்பையும் உறுதிப்பாட்டையும் அவர்கள் காட்டிய வீரம், தியாகம் விடுதலைப்பற்று என்பவற்றையும் ஆழமாகவும் இலக்கிய நயத்துடனும் பதிவு செய்துள்ளன. அதேபோன்று லெனின் கிராட், ஸ்டாலின் கிராட் போன்ற நூல்கள் போர்க்களங்களை மனக் கண்ணுக்கு முன்கொண்டு வந்து நிறுத்தியதுடன் மக்கள் எவ்வாறு போரின் வெற்றிக்குப் பங்களித்தனர் என்பதையும் தத்ரூபமாக விவரித்துள்ளன. இவற்றைப் போரில் நேரடியாகப் பங்கு கொண்ட தளபதிகளே எழுதினர்.

இன்னொருபுறம் எதிர்மறையான நூல்களும் எழுதப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. சோவியத் தலைவர் ஸ்டா லினை ஒரு கொடியவர் என்றும் அவரின் சர்வாதிகார ஆட்சியில் மக்கள் கொடுமைப் படுத்தப்பட்டனர் எனக்காட்டும் வகையில் பட்டஸ்ரோக் என்பவர் டொக்டர் ஷிவோகோ என்ற நூலை எழுதியிருந்தார். இதற்கு நோபல் பரிசு வழங்கப்பட்டதுடன் இது சினிமாப் படமாகவும் எடுக்கப்பட்டது. இதே பாணியில் விலங்குப் பண்ணை என்ற நூல் ஜோர்ஜ் ஓவல் என்பவரால் எழுதி வெளியிடப்பட்டது. மாயாஸ்கி போன்ற பெரும் கவிஞர்கள் மத்தியிலும் சாதாரண தொழிலாளர்களும் போர் வீரர்களும் எழுதிய பல கவிதைகள் நூல்களாக வெளிவந்து புகழ் பெற்றுள்ளன.

இப்படியான போர்க்கால சோவியத் இலக்கியங்கள் எமது கைக்குக் கிடைத்தபோதும்கூட ஏனைய நாடுகள் சளைத்தவை என்று சொல்லி விடமுடியாது.

பிரான்ஸ் போரை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட, இருநகரக் கதைகள், முன்பு இலங்கையில் பாடப்புத்தகமாக விளங்கியது நினைவு கூரத்தக்கது. வியட்நாம் போரின்போது உருவான இலக்கியங்கள் மிகச் சிறப்பான கூற்றைப் பெற்றிருந்தன. மலையக எழுத்தாளர் கணேஸின் மொழிபெயர்ப்பில் வெளிவந்த சிறுகதைத் தொகுதி வியட்நாமின் போர்க்கால இலக்கிய மேன்மையை எமக்கு அறிமுகப்படுத்தியது. கியூபாத் தலைவர் பிடல் காஸ்ரோவின், வரலாறு என்னை விடுதலை செய்யும் என்ற நூல் நீதிமன்ற உரை நூலாக வெளிவந்து உலகப் புரட்சிவாதிகளின் நெஞ்சில் புதிய குருதியைப் பாய்ச்சியது என்றால் மிகையாகாது. இதேபோன்று உலகப் புரட்சித் தலைவர் சேகுவேராவின் கவிதைகள் போர்வாளாகப் புரட்சிக் கனலை உலகெங்கும் மூட்டின. செக் ஊடகவியலாளர் யூலிஸ் பூசிக்கின் தூக்கு மேடைக் குறிப்புகள் ஓர் ஒப்பற்ற இலக்கியப்படைப்பாகப் பார்க்கப்படுகிறது. ஹிட்லரின் கெஸ்டோபா ஊனப் பிரிவின் சித்திரவதைக் கூடங்கள் கொடிய சித்திரவதைகள் என்பவற்றை இந்த நூல் சிறப்பாகப் பதிவுசெய்தது. இவர் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது

(24 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பா.பாலாஜினி



# இலக்கியங்களுக்குள் சிறுவர்களை ஈர்ப்பது எப்படி?

இலக்கியம் என்பது காலத்தினுடைய கண்ணாடி. எமது பண்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் எடுத்துச் சொல்கின்ற பெருமை உடையது. இவ்வாறான இலக்கியங் களைப் பேணிப்பாது காத்து அடுத்த தலை முறைக்கு எடுத்துச் செல்கின்ற பொறுப்பு எங்களுடையது. அடுத்த தலைமுறையினர் என்று இங்குகுறிப்பிடப்படுவது இன்றைய சிறுவர்களை. ஆனால், இவர்கள் இலக்கி யங்களில் நன்கு பரிச்சய முள்ளவர்களாக இருக்கின் றனரா என்றால் இல்லை யென்றுதான் சொல்ல வேண்டும். எனவே, இலக் கியங்களை எவ்வாறு சிறு வர்களுக்கு அறிமுகப்படுத்த லாம்? என்றால், அதற்கு முத லில் நன்றாக எழுதவும் வாசிப்பதற்கும் அவர்களைப் பழக்கப்படுத்த வேண்டும்.

இன்றைய சிறுவர்கள் தேர்வு களுக்காக மட்டுமே வாசிக்கின் றார்கள். தேர்வுகள் முடிந்ததும் வாசிப்பும் நின்று விடுகின்றது. பெற்றோர்களுக்கும் பிள்ளைகள் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்றாலே போதுமானது. எனவே, அவர்களும் இந்தவிடயத்தில் பெரிதாக அலட் டிக் கொள்வதேயில்லை. எனவே சிறுவர்கள் நன்றாக வாசித்துப் பழகுவதற்காகக் கற்பனைகள் மற்றும் புத்தாக்க சிந்தனைகளை உடைய கதைகளைத் தேடி அறிந்து, அவற்றை அறிமுகப்படுத்த வேண்டும். ஆனால், இன்றைய அளவில் சிறுவர்களுக்கென எழுதப்பட்டுள்ள கதைகள் மிகச் சொற்பமாகத்தான் உள்ளன. ஏனைய சிறுவர் இலக்கியங்களும் அவ்வாறுதான் உள்ளன. இன்றைய சிறுவர்களுக் குரிய கதைகளில் பெரும்பாலானவை பெரியவர்களுக் குரிய கதைகளின் எளி மைப்படுத்தப்பட்ட வடிவங் களாகும்.

இதைத்தவிர அம்புலிமாமா, மரபுக் கதைகள், முல்லா நஸ்ருதீனின் கதைகள் போன்றவை, இன்றைய சிறுவர்களினுடைய அறிவு வளர்ச்சிக்குத் தீனி போடுகின்ற அளவில் இல்லை. எனவே, இலக்கிய கர்த்தாக்களும், சிறுகதை ஆசிரியர்களும் இன்றைய சிறுவர்களுக்கு ஏற்றவகையில் இலக்கியங்களைப் படைப்பதற்கு முன்வரவேண்டும். அவ்வாறு புத்தகங்களை எழுதுகின்றபோது கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் என்னவென்றால் அவ்வாக்கியங்கள் நீண்ட தொடர் வாக்கி யங்களாகவும், கலப்பு வாக்கியங்களாகவும் அமையாது பார்த்துக் கொள்ளவேண்டும். நீண்ட தொடர் வாக்கியங்களாக அமையும் போது, அவற்றை வாசித்து அதன் பொருளை அறிந்து கொள்வது நிச்சயம். சிறுவர்களுக்குக் கடினமாக இருக்கும். எனவே, அவர் களுக்கு ஏற்றாற்போல எளிமையான தனி வாக்கியங்களாகவும், சிறுவர் அகராதியில் உள்ளனவாகவும் அமைந்திருத்தல் சாலச்சிறந்ததாகும்.

> அம்புலிமாமா, மரபுக் கதைகள், முல்லா நஸ் ருதீனின் கதைகள் போன்றவை காணப்பட் டாலும், இன்றைய சிறுவர் களினுடைய அறிவு வளர்ச்சிக்கு அவை தீனி போடுகின்ற அளவில் இல்லை. எனவே, இலக் கிய கர்த்தாக்களும், சிறு கதை ஆசிரியர்களும் இன்றைய சிறுவர்களுக்கு ஏற்ற வகையில் இலக் கியங்களைப் படைப் பதற்கு முன்வர வேண்டும்.

இலக்கியங்களைப்பற்றி அறியாதவர்கள் தமது பண்பாடுகள், பழக்க வழக்கங்கள் தொடர்பாக எதுவுமே அறியாது வெறும் ஜடங்களாகவே வாழ்வார்கள். எமது எதிர்காலச் சந்ததியினரும் அவ்வாறு ஜடங்களாக வாழ்வது உங்களுக்கு விருப்ப மான ஒன்றா? இல்லையல்லவா! எனவே, இத் தகைய சிறுவர் இலக்கியங்கள் உருவாக வேண் டியது காலத்தினுடைய கட்டாயம் என்பதை நீங்கள் நிச்சயமாக உணர வேண்டும். இன்று புலம்பெயர் தமிழர்கள் உலகின் பல பாகங் களில் இருந்தும் பல்வேறு இலக்கிய ஆக் கங்களை வெளியிடுகின்றார்கள்.

அவை முகப்புத்தகங்களிலும், இதழ்களிலும் வெளிவருகின்றன. ஆனால், அந்த இலக் கியங்களில் சிறுவர்களுக்குரிய இலக்கியங் கள் பெருமளவு வெளிவருகின்றனவா என்றால் இல்லை என்றே சொல்லவேண்டும். எனவே, அவ்வாறான இலக் கியங்களைப் படைக் கின்றவர்கள் இன் றைய பிள்ளைகள் நாளைய விஞ் ஞான தொழில் நுட்ப உலகுக்கு வெற்றிகர மாக முகங்கொடுக்கக்கூடிய வகையில் விஞ்ஞானம், கலை இலக்கியம் கண்டுபிடிப்பு கள் போன்ற அவர்களின் சிந்தனைகளைத் தூண்டிவிடக்கூடிய வகையில் சிறந்த அம் சங்களை உள்ளடக்கிய இலக்கியங்களைப் படைக்க வேண்டும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக உரத்து வாசித் தல் மிகச் சிறந்தது என்று உளவியலா ளர்கள் கூறியுள்ளனர். அதாவது பெரிய வர்கள்- சிறியவர்களுக்கு உரத்து வாசித்துக் காட் டுவதனால் அவர் களுடைய மன திலே அவை அதி களவு பதிந்து விடும் என்று கூறப் படுகின்றது. இன் றைய இளைஞர் களும், முதியவர் களும் சிறுவர்களாக இருந்தவர்கள்தான். எனவே, அவர்கள் தங்களுடைய சிறுபரா யத்தை இன்றைய சிறுவர்கள் புரியும் வகையில் அவர்களுக்கு உணர்த்த வேண் டும்.

எனவே, பெரியவர் களே உங்கள் வீட்டிலுள்ள சிறுவர்களுக்கு தினமும் பதினைந்து நிமி டங்களாவது உரத்து வாசித்துக் காட்டுங்கள். அவர்களின் உணர்வுகளுக்குக் கருவியாக இருந்து தூண்டி விடுங்கள். இவ்வாறான செயற்பாடுகளை நீங்கள் மேற்கொண்டால், நிச்சயம் சிறுவர்களுடைய வாழ்வில் முன் னேற்றம் உண்டாகும். அவர்கள் இலக்கி யங்களைக் கற்பதோடு மட்டும் நின்றுவிடாது, இன்னும்பல புதிய இலக்கிய வடிவங்களை யும் புரிந்து கொள்வார்கள் என்பது உறுதி. எனவே, சிறுவர்களை இலக்கிய வாசிப்பில் ஈர்ப்பதும் அவற்றில் இருந்து தள்ளி வைப் பதும் உங்களுடைய கைளில் தான் தங்கி யுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்ததொரு ஆரம்பம்

## போரின்றிய விடியலை நோக்கிய கலைப் பயணம் கருத்தரங்கு

குணசேகரன் சக்தீனா

போரின் பின்னரான கலைகளின் செல்நெறி குறித்த கேள்வியையும் அதிர்வையும் ஏற்படுத்தியுள்ளது செயல்திறன் அரங்க இயக்கம் கடந்த ஞாயி றன்று நடத்திய போரின்றிய விடியலை நோக்கிய கலைப் பயணம் என்ற கருத்தரங்கு.

போர் முடிந்து 5 ஆண்டுகள் கடந்து விட்டபோதும் அது ஏற்படுத்திய பாதிப்புக்களில் இருந்து தமிழ் மக்கள் இன்னமும் விடுபட்டுவிடவில்லை. அந்த கொடிய நினைவுகளில் இருந்து மக்கள் இன்னும் மீண்டு வரவில்லை. இந்த நிலையில் கலைகளின் போக்கு எத்தகையதாக அதிலும் குறிப்பாக உள்ளூரிலேயே இயங்கக்கூடிய கலை அமைப்புகளின் செல்நெறி எத்தகையதாக இருக்கவேண்டும் என்பது பற்றிய ஆராய்வதாக இருந்தது கருத்தரங்கு.

கடந்த சில ஆண்டுகளாகவே மக்கள் நாளும் அனுபவிக்கும் வேதனைக்கு எவரிடமும் மருந்து இல்லை. சமூகம், குடும்பம், தனிமனிதர்கள் என்று எல்லாப் பக்கங்களிலும் பிரச்சினைகள்தான். உளவியல் காயங்கள், உடல் காயங்களை ஆற்ற முடியாதவர்களாய் இருக்கும் மக்களின் கதைகள் ஏராளம். இவை எல்லாம் பெருவெளிகளில் பேசப்படவேண்டுமா என்பதைக் கருத்தரங்கும் அங்கு நிகழ்த்தப்பட்ட ஆற்றுகைகளும் கேள்விக்குள்ளாக்கின.

கருத்துரைகளுக்கு இடையிடையே 4 நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. போருக்குள் வாழ்ந்த கலைஞர்களே இவற்றில் நடித்தார்கள். அவை அவர்களின் கதைகளாக அல்லது அவர்களின் உறவினர்களின் கதைகளாகவே இருந்தன. பாடுகளைச் சுமந்தவர்களுக்குத் தம் வலிகளைச் சொல்வது ஒன்றும் பெரிதல்லவே! எனவே கலைஞர்களின் நடிப்பும் முகபாவனைகளும் நாடகத்துக்கு உயிரூட்டின. பார்வையாளர்களையும் கண்ணீர் சிந்த வைத்தன.

கருத்தரங்கு காலை - மாலை என்று இரு அமர்வுகளாக இடம்பெற்றது. காலையில் மூன்று கருத்துரைகளும், மூன்று நாடகங்களும் மேடையேற்றப்பட்டன. மாலையிலும் கருத்துரைகளும், நாடகங்களும் மேடையேற்றப்பட்டன. இன்றைய காலச் சூழலில் இவை பேசப்படவேண்டிய கதைகளாக இருந்தாலும் அவற்றைப் பேசு பொருளாக்குவதற்கான பொருளாதார அடித்தளம் வடக்கில் உள்ள கலை நிறுவ னங்களிடம் இல்லாதிருப்பது குறித்துச் செயல்திறன் அரங்க இயக்கத்தின் பணிப் பாளர்தே.தேவானந்த்கவலைதெரிவித்தார்.

“இங்குள்ள எல்லாமும் வெளி ஆக்கிர மிப்புக்கு உள்ளாகியுள்ள நிலையில் கலையும் அவ்வாறே ஆக்கிரமிப்புக்குள் ளாகி வருகின்றது. போரைப் பற்றி அறி யாதவர்கள், இதுவரை சொகுசாக வசதியாக நிம்மதியாக வாழ்ந்தவர்கள் இங்கு வந்து ஆற்றுகைகளை வழங்கும்போது அவர்களி டம் தொழில் நேர்த்தியும் செய் நேர்த்தியும் இருக்கின்றன, அது இங்குள்ளவர்களிடம் இல்லை என்று புகழ்ந்து போற்றுகிறார்கள். இந்த நிலையை எப்படி எதிர்கொள்வது? 30 வருடங்களாகப் போருக்குள் சிக்கித் தவித்த ஒரு சமூகம் தன் கதைகளைச் சொல்வதற்கான தொழில்நேர்த்தியைப் பெற்றுக் கொள்ள அதற்கு எங்கே நேரமும் காலமும் இருந்தது?” என்று கேள்வி எழுப்பினார் தேவானந்த்.

“தமிழ் என்றால் தற்கொலை, தமிழ் என்றால் கணவனை இழந்த பெண்கள், தமிழ் என்றால் மாற்றுத் திறனாளிகள், தமிழ் என்றால் முதியவர்கள் என்ற வலி நிறைந்த வாழ்விற்குள் தள்ளப்பட்டிருக்கிறோம். இவற்றைப் பொருட்படுத்தாத அரசியல்வாதிகள் நாடாளுமன்றக் கதிரைகளைக் கைப்பற்றுகின்ற போட்டியில் உலவிக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய சூழலில் தமிழ் மக்கள் பங்குபெறும் ஜனநாய கத்தை இங்கு மீட்டெடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். அதைச் செய்வதற்குக் கலைகளால் தான் முடியும். எனவே இதுபோன்ற கலை ஆற்றுகைகள் கிராமம் கிராமமாகத் தொடரவேண்டும்” என்றார் தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவர் சட்டத்தரணி சோ. தேவராஜா.

செயல்திறன் அரங்க இயக்கம் நல்லூர் ஆலயத்திருவிழாக் காலத்தில் 12 தினங்கள் நடத்திய நாடகத் திருவிழாவைப் போன்று எல்லா ஆல யங்களின் திருவிழக்களின்போதும் குறைந்தது 5 நாள்களாவது அந்தந்தக் கிராமங்களைச் சேர்ந்த இளைஞர்களைப் பயிற்றுவித்து நாடக விழாக்களை நடத்துவது மக் கள் தமது பிரச்சினைகளை பொது அரங்குகளுக்குக் கொண்டு வந்து பேசுபொருளாக்குவதற்கு உதவும் என்றும் யோசனை தெரிவித்தார் அவர்.

கருத்தரங்கின் இடையிடையே அரங்கேற்றப்பட்ட நாடகங்கள், தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமல்லாமல் ஏனைய மக்கள் மத்தியிலும் அரங்கேற்றப்பட வேண்டும் என்பதை ஆணித்தரமாக வலியுறுத்தினார் யாழ். பல்கலைக்கழக சட்டத் துறை விரிவுரையாளர் திருமதி ம.கோசலை. “எமது மக்கள் அனுபவித்த கஷ்டங்களை ஏனைய மக்களும் தெரிந்து கொள்ள வேண்டும். நடந்தவற்றைப் பேசுவதுடன் அதற்கு அப்பாலான விடயம் பற்றியும் நாடகங்கள் பேச வேண்டும்” என்றார்.

“உலகமயமாக்கல் சூழலில் சுயஉற்பத்திகளும் சுயமும் பெருநிறுவனங்களால் எப்போதுமே அச்சுறுத்தலுக்கு உள் ளாகிக்கொண்டே இருக்கின்றன. வடக் கில் மட்டும் என்றில்லை உலகெங்கும் இதுவேதான் நடந்துகொண்டிருக்கிறது. எனவே இங்குள்ளவர்களுக்குச் செய்நேர்த்தியும் தொழில் நேர்த்தியும் இல்லை என்பதைப் பற்றிக் கவலைப் படத் தேவையில்லை. இந்தக் கலைஞர்கள் உண்மையைப் பேசுகிறார்கள். அவர்கள் தொழிலுக்காக நடிக்கவில்லை. எல்லாப் பக்கத்தாலும் ஆக் கிரமிப்புக்கள் இருந்ததாலும் அதற்குள் எமது இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதே இப்போதைக்கு முக்கியமானது. தக்கன பிழைத்துக்கொள்ளும். எனவே நாம் உண்மையை விட்டுக்கொடுத்து செய்நேர்த்தியையும் தொழில் நேர்த்தியையும் பெற்றுக் கொள்ள வேண்டியதில்லை” என்று தெரிவித்தார் உதயன் பத்திரிகையின் ஆசிரியர் தே.பிரேம்.

“போர் இன்றிய விடியல் என்பது தமிழர்களுக்கு இனிச் சாத்தியமில்லை. ஏனெனில் அவர்கள் ஏற்கனவே ஒரு போரை நடத்திமுடித்துவிட்டார்கள். இந்தத் தலைப்பின் பொருள் மீளநிகழாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதாகத்தான் இருக்க முடியும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை யின் தீர்மானம்கூட அதைத்தான் வலியுறுத்துகிறது. இங்கு ஏற்கனவே நடந்த தவறுகள், இழப்புக்கள், பயங்கரங்கள், குற்றங்கள் மீள நிகழாமல் இருக்கவேண் டும் என்று அந்தத் தீர்மானம் வலியுறுத்துகின்றது. அவ்வாறான ஒரு சூழல் உருவாகுவதற்கும் பேணப் படுவதற்கும் கலைகள் நேரடியாகப் பெரும் பங்காற்ற முடியும். ஏனெனில் இருக்கின்ற அனைத்துச் சூழலையும் தகர்த்து புதிய கருத்துக்களை முன் கொண்டு செல்லக்கூடிய வலு கலைகளிடம் இருக்கின்றது” என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மாலை அமர்வில் உரையாற்றிய தாயகம் சஞ்சிகையின் ஆசிரியர் க. தணிகாசலம், “திரும்பத் திரும்ப இதே கதைகளையே பேசிக் கொண்டிருப்பது மக்களைச் சலிப்படையச் செய்துவிடக் கூடும். எனவே நாம் இதைக் கடந்து செல்ல வேண்டும். இனி வரும் காலத்தை எப்படி எதிர்கொள்வது என்பது குறித்த ஆற்றுகைகள் வரவேண்டும்” என்றார். “இயேசு நாதர் மீண்டும் மீண்டும் பிறக்கிறார், சூரன் போர் நடத்துகின்றோம்.

(22 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# நலம் தரும் நவராத்திரி

பா.பாலாஜினி

உலகம் முழுதும் பரந்து வாழும் இந்துக்களால் கொண்டாடப்படுகின்ற அல்லது அனுஷ்டிக்கப்படுகின்ற முக்கிய விரதமாக நவராத்திரி விளங்குகின்றது. சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவராலும் கொண்டாடப்படுகின்ற விரதமும் இதுதான். நவராத்திரி என்றால் ஒன்பது இரவுகள். இந்த ஒன்பது நாள்களும் அன்னையை வேண்டி வழிபடும் நாள்களாகும். இது மிகவும் புனிதமாக அனுஷ்டிக்கப்பட வேண்டிய ஒரு விரதமாகும். இந்த உலகத்திலே கல்வி, செல்வம், வீரம் இந்த மூன்றும் முக்கியமானவை ஆகும். இவை இல்லாது உலகிலே எந்த மனிதனாலும் வாழமுடியாது. வீரம் வேண்டி துர்க்கா தேவியையும், செல்வம் வேண்டி இலக்குமி தேவியையும், கல்வி வேண்டி சரஸ்வதி தேவியையும் வழிபடுகின்றோம்.

இந்த நவராத்திரி நாள்களில் முதல் மூன்று நாள்களும் துர்க்கைக்குரிய இரவுகளாகும். ஶ்ரீதுர்க்காதேவி மூர்த்தமாக அன்னை ஆதிபராசக்தியை ஆரம்ப நாள்களில் வழிபடுகின்றோம். வீரம் எமது வாழ்வில் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றது. அடுத்த மூன்று நாள்களும் ஶ்ரீ இலக்குமி தேவி மூர்த்தமாக அன்னை ஆதிபராசக்தியை நடு மூன்று நாள்களிலும் வழிபடுகின்றோம். செல்வமும் நாம் வாழ்வதற்கு மிக அவசியமானது. இறுதி மூன்று நாள்களும் சரஸ்வதிதேவி மூர்த்தமாகிய அன்னை ஆதி பராசக்தியை வழிபடுகின்றோம். உலகில் உள்ள அனைத்துச் செல்வங்களிலும் கல்விச் செல்வம் ஒன்றுதான் நிலையானது. இதனை வெள்ளத்தாலோ, மழையாலோ, நெருப்பாலோ அழித்துவிட முடியாது.

இறுதி நாளான பத்தாவது நாள் விஜயதசமி என்று அழைக்கப்படுகின்றது. அன்று வரிசை வரிசையாக பொம்மைகளை கொலு வைத்துப் பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் வேறு பல நிறுவனங்களிலும் கொண்டாடுவார்கள். அன்று பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் ஏடு தொடக்கல் எனப்படுகின்ற வித்தியாரம்பம் நிகழ்வு நடைபெறுவது வழமை. இதைத்தவிர குழந்தைகளுக்கு காதுகுத்துதல், சோறு ஊட்டுதல் போன்ற நிகழ்வுகளும் நடைபெறும். பெண்கள் இந்த நவராத்திரியின் ஒன்பது நாள்களும் காலையில் நீராடி தேவியை வழிபடுவர்.

கன்னிப் பெண்களை குமாரி கல்யாணி, ரோகிணி, சண்டிகா, சாம்பவி, சுபத்திரா, சரஸ்வதியாக பாவித்து அவர்களை அலங்கரித்து மகிழ்வர். இந்த நவராத்திரி விரத நாள்களில் சகலகலாவல்லி மாலை, அபிராமி அந்தாதி, மீனாட்சிஅம்மை பிள்ளைத்தமிழ் முதலிய தேவி தோத்திரங்களைப் பாடி வழிபட்டால் அவளின் முழுமையான அருள் எமக்குக் கிடைக்கும். சரஸ்வதிக்கு நாமகள் 'கலைவாணி, கலைமகள் என்னும் சிறப்பு நாமங்கள் உண்டு. இந்த விரதம் புரட்டாதி மாதத்திலே வளர்பிறை பிரதமை முதல் நவமி ஈறாக ஒன்பது நாள்களும் அனுஷ்டிக்கப்படுகின்றது.

பத்தாம் நாளான விஜயதசமியை 'தசரா' என்றும் கூறுவர். வெற்றித் திருநாள் எனவும் இது அழைக்கப்படுகின்றது. செய்யும் தொழிலே தெய்வம் என்பதற்கு அமைய செய்கின்ற தொழிலுக்கு மதிப்புக் கொடுக்கும் முகமாக அந்தந்தத் தொழில்களுக்குப் பயன்படுத்தப்படும் ஆயுதங்களை வைத்துப் பூசை செய்வது வழமை. இந்த விஜயதசமி அன்று மானம் பூ என அழைக்கப்படுகின்ற முக்கிய நிகழ்வு நடைபெறுவது உண்டு. அதாவது அம்பிகை ஆலயங்களில் கொலுவிருந்த விக்கிரகத்தை குதிரை மீது வைத்து திருவுலாச் செய்து வாழை வெட்டுதல் நடைபெறும்.



மகிடாசுரன் என்ற அசுரனைத் தேவி சங்கரித்தாள். இதை நினைவுபடுத்தும் முகமாக மானம்பூ எனப்படுகின்ற இந்த வாழைவெட்டு நடைபெறுகின்றது. ஆன்மாக்களைப் பீடித்துள்ள ஆணவமலம் என்ற அறியாமையும் மிருகத் தன்மையும் அழியவேண்டும். தேவியை வழிபட்டால் எம்மைப் பீடித்துள்ள ஆணவ இருள் நீங்கும்.

பாண்டவர்கள் அஞ்ஞாதவாசம் முடித்து, தாங்கள் வன்னி மரத்தில் ஒளித்து வைத்துவிட்டுப் போன ஆயுதங்களை இந்த விஜயதசமியில் தான் மீண்டும் எடுத்தார்கள் என்று சொல்லப்படுகின்றது. இந்த உலகமே சக்தியால் தான் இயங்குகின்றது. சக்தி இல்லையேல் உலகமே இல்லை. சிவபெருமான் ஆண்பாதி, பெண்பாதியாக அர்த்தநாரீஸ்வரராக விளங்குகின்றார். 'சக்தி இருந்தால் செய் இல்லையேல் சிவனே என்று கிட' என்று கூறுவதில் இருந்து சக்தியின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளலாம்.

தேவியர் மூவரும் தான் உலகத்தை ஆட்டிப்படைப்பவர்கள். அதனால் இந்தப்பூசை மிக முக்கியத்துவம் பெறுகின்றது. நாம் இந்த விரதத்தை அனுஷ்டித்து அருள்பெறுவோமாக.

# யோகர் சுவாமிகள் அருள்பெற்ற

## காரைநகர் தந்த சிவஶ்ரீ க.வைத்தீஸ்வரக்குருக்கள்

வேலுப்பிள்ளை சிவகுருநாதன்



ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான குருபரம்பரையில் வந்தவர் தான் சிவஶ்ரீ க.வைத்தீஸ்வரக்குருக்கள். ஐயா அவர்கள் ஒன்பது வயதுப் பாலகனாக இருந்த காலத்தில் காரைநகர் சிவன் கோயில் வடக்கு வீதியில் அமைந்த அவரது பேரன் சரவணபவக் குருக்கள் இல்லத்துக்கு யாழ்ப்பாணத்து கொழும்புத்துறை யோகர் சுவாமிகள் அடிக்கடி 1925 ஆம் ஆண்டளவில் வருகை தருவார். அங்கு சரவணபவக்குருக்களுடனும் அவரது மகன் கணபதீஸ்வரக் குருக்களுடனும் இணைந்து யோகர் சுவாமிகள் திருவாசகம் படிப்பார்கள். மறைவில் இருந்து இதைக் கேட்டுக்கொண்டிருந்த சிறுவன் வைத்தீஸ்வரக் குருக்கள் தாயாரிடம் என்ன படிக்கிறார்கள் என்ற விவரத்தை தெளிவாகக் கேட்டு விளங்கிக் கொண்டார். அந்தக் காலம் தொடக்கம் திருவாசகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு அதனைக் கவனமாகக் கிரகித்துப் படித்து வந்தார். ஒருநாள் சிறுவன் வைத்தீஸ்வரர், அவரது பேரன் சரவணபவக்குருக்கள், யோகர் சுவாமிகள் ஆகிய மூவருமாக அவரது இல்லத்தில் இருந்து, சிவன் கோயில் முன்பக்கமாக வந்து கொண்டிருந்த வேளை ஆலயத்தல விருட்சங்களில் ஒன்றான இலுப்பை மரத்தடியில் அப்போதைய கோயில் ஆதீன கர்த்தாவாக இருந்த துரையப்பாவைக் கண்ட யோகர் சுவாமிகள் அவரை அழைத்து சிவன் கோயிலைக் காட்டி இது கோயிலடா, உள்ளுக்குள் ஒரு பூச்சி இருக்கிறது கூத்துக் கொட்டகையாக்கிப் போடாதே என்று திருவாய் மலர்ந்தருளினார்.

பின்னர் படித்துப் பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்த ஐயா ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பப் படிவத்தைக் கல்வியங்காட்டில் அமைந்த கல்விக்கந்தோரில் சமர்ப்பிக்க, பிற்பகலில் நடையில் சங்கிலியன் சிலை அமைந்த வீதி ஊடாகச் சென்று கொண்டிருந்தார். அவரை எதிர் கொண்ட யோகர் சுவாமிகள் எங்கே போகிறீர் என்று வினவ ஐயா தான் போகிற விடயத்தைத் தெளிவாகச்சொன்னார். தகுதி அடிப்படையில் ஆசிரியர் பதவிக்கு எடுக்கிறவர்களா அல்லது செல்வாக்கு அடிப்படையில் எடுக்கிறவர்களா என ஆங்கில மொழியில் ஐயாவைக் கேட்டார் சுவாமிகள். தகுதி அடிப்படையில் எடுப்பதாக ஐயா பதிலளித்தார். அதே நேரத்தில் யோகர் சுவாமிகள் கல்விக் கந்தோரில் உள்ள அதிகாரிகளை நேரில்சென்று பார்த்து எனது அன்பர் ஒருவர் ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பப்படிவத்துடன் உங்களிடம் வந்து கொண்டிருக்கிறார். அவரை நீங்கள் முதலாவது ஆளாக நேர்முகப் பரீட்சையில் எடுக்க வேண்டும் எனப் பணிந்திருந்தார். கல்விக் கந்தோரில் அன்றைய வேலைகள் நிறைவு செய்து, வேலை ஆள்கள் வீட்டுக்குப் போக இருந்த வேளை ஐயா விண்ணப்பப் படிவத்துடன் கல்விக் கந்தோருக்குள் நுழைய அதிகாரிகள் இவர்தான் யோகர் சுவாமிகள் கூறிய ஆள் என அடையாளம் கண்டு கொண்டனர். முந்நூறுக்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்களில் நேர்முகப் பரீட்சையில் ஐயா அவர்கள் மூன்றாவது ஆளாகத் தெரிவுசெய்யப்பட்டார். சில காரணங்களால் ஐயா முதலாவது நிலைக்குக் கொண்டு வந்து முதலாவது ஆளாக நியமனம் பெற்றார்.

இளைஞரான வைத்தீஸ்வரர் சைவசமயத்தையும் தமிழையும் வளர்க்க வேண்டும் என்ற அவாவுடன் காணப்பட்டார். மணிவாசகர் பேரில் காரைநகர் மணிவாசகர் சபை என உருவாக்கி, யோகர் சுவாமிகளிடம் ஆசி பெறுவதற்காக கொழும்புத்துறை ஆசிரமத்துக்கு 1939 ஆம் ஆண்டு சென்றார். அப்பொழுது அடியார்களுடன் இருந்த சுவாமிகள் ஐயாவைக் கண்டவுடன் வேண்டத்தக்க அறிவோய் நீ என்ற திருவாசகப் பாடலைப் பாடி ஆசி கூறி வழி அனுப்பி வைத்தார்.

ஐயாவினுடைய வாழ்க்கையில் என்றும் மறக்கமுடியாத நினைவு ஆக சிவபெருமான் மாணிக்கவாசகர் மூலம் திருவாசகத்தைப் பாடுவித்தாரோ அதேபோன்று ஈழத்துச் சிதம்பர புராணத்தை நவாலியூர் பண்டிதர் சோ.இளமுருகனார் மூலம் பாடுவித்து, வெளியிட்டு வைத்தார். அது கோயிலின் தேடக்கிடையா பெருநிதியம் போல் திகழ்கின்றது.

ஐயா தமது 99 ஆவது வயதிலும் சுய நினைவுடனும் துடிப்புடனும் இருந்தார். அவர் மறைவதற்கு முதல்நாள் இரவு 12 மணியளவில் குளியல் அறைக்குப் போக வேண்டும் என்று மகனுடன் போய்க் குளித்துவிட்டு சாமியறையில் சென்று விபூதி அணிந்து தூப தீபம் ஏற்றி திருமுறை படித்து வணங்கி விட்டு வந்து, வீட்டு முன்வாசல் மண்டபக் கதிரையில் அமர்ந்தார். பிள்ளைகள் ஏன் ஐயா இருக்கிறீர்கள் போய்ப்படுங்கோ என்று சொல்ல, யோகர் சுவாமிகளின் ஆசிரமத்துக்குப் போகப் போகிறேன். ஓட்டோக்காரரிடம் சொல்லியிருக்கு அவன் வருவான் அவனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன் என்று பதிலளித்துவிட்டு நீண்ட நேரத்தின் பின்னர் விடியப்புற நேரம் போய்ப் படுத் துக்கொண்டார். தொடர்ந்து நித்திரையில் இருந்த ஐயா அன்று நண்பகல் 12 மணியளவில் விழித்து, பிள்ளைகளிடம் நான் எங்கே இருக்கிறேன் சொல்லுங்கள் எனக் கேட்டார். பிள்ளைகள் சுன்னாகத்தில் சிற்பி ஐயா வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கிறீர்கள் எனப்பதிலளிக்க நான் யோகர் சுவாமிகளுடன் அவரது ஆசிரமத்தில் பேசிக் கொண்டிருக்கின்றேன் என்று பதிலளித்துவிட்டு மீண்டும் படுத்துக் கொண்டார். கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி அதிகாலை சுயநினைவுடன் கதைத்துவிட்டு இறைவனடி சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மிருசுவில் தமிழ்தாசன்

# தேன் தமிழ் இலக்கிய வேள்வியில் தென்மராட்சி இலக்கிய அணி!

தமிழ்க்கோட்டம்! இது ஒரு தமிழ்த் தோட்டம். இங்கே சின்னஞ்சிறிய செடியொன்று மெல்ல மெல்ல வளர்ந்து, இப்போது பெருவிருட்சமாகத் தோற்றம் பெற்றுவிட்டது. இதுவே தென் மராட்சி இலக்கிய அணியென்னும் அற்புதமான அமைப்பு. தென்மராட்சிப் பகுதி வாழ் இலக்கிய ஆர்வலர்களின் இலக்கியப் பசிக்குத் தீனி போட்டு வந்த இந்த அமைப்பானது படிப்படியாகத் தனது கால்களை அகலப்பரப்பி தற்போது ஏனைய பிரதேசத்துத் தமிழ் இலக்கியப் பிரியர்களையும் தன்வசம் ஈர்த்துக் கொண்டுவிட்டது. மாதாமாதம் என்னும் படி முறையில் இலக்கிய நிகழ்வுகளை நடத்திவரும் தென்மராட்சி இலக்கிய அணி இது வரை ஆறு நிகழ்வுகளை மிக வெற்றிகரமாக வழங்கியிருந்தது. முத்தமிழ்ப் பரப்பிலே இயல், நாடக மென்னும் அங்கங்களை மட்டும் அரங்குகளிலே உலாவ விட்டது. இசையென்னும் ஒன்று மாத்திரம் அரங்கேற்றப்படாமலிருந்து வந்த நிலையில் அதுவும் கடந்த 25ஆம் திகதி ஞாயிறன்று மிக வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருந்தது, இது ஏழாவது நிகழ்வாகும்.

தமிழ்க் கோட்டம் கம்பன் கல்லூரி வளாகம். மாலை ஐந்து மணி, மண்டபம் நிறைந்த இலக்கிய ரசிகர்கள் பளிச் சென்று நேர்த்தியாக ஒழுங்கமைக்கப்பட்ட மேடை வலதுபுறத்தில் தமிழ்த் தாயின் திரு உருவம். அரங்கிலே புடம் போட்டெடுத்த துறைசார் பேச்சாளர்கள். சரியாக ஐந்து மணிக் கெல்லாம் ஆரம்பமாகும் இலக்கிய விழா அன்று ஏனோ சற்றுத் தாமதமாகிக் கொண்டது. அதற்காகப் பார்வையாளர் பக்கமிருந்து எவ்விதமான மனச்சலிப்புக்களோ முகச்சுளிப்புக்களோ எழுந்ததாகத் தெரியவில்லை. அவர்களுக்கும் தெரியும். இலக்கிய அணியினரின் நிகழ்வுகள் அனைத்தும் நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க ஒன்றன்பின் ஒன்றாக நேர்த்தியாக நடந்தேறுமென்று, எனவே பொறுமை காத்தனர். வழமையை விட நடக்கவிருந்தது ஒருவித்தியாசமான நிகழ்வு, ஆவல் அதிகரித்தது. மிக மெல்லிய ஒலியிலே நாராயணன் புகழ்பாடும் பக்திப்பாடல்கள் ஒலிபரப்பாகி ரசிகர்களைப் பரவசப்படுத்திக் கொண்டிருக்க, அன்றைய இன்னிசைச் சங்கமமம் நிகழ்வுக்கு முக்கிய அனுசரணை வழங்கிய சாவகச்சேரி நகர் தொழிலதிபரும் நன்கொடையாளருமான கா.சிவஞானசுந்தரமும் அவரின் துணைவியாரும் ஒன்று சேர்ந்து மங்கல விளக்கைஏற்றி வைத்து அன்றைய விழாவுக்குப் பிள்ளையார் சுழிபோட்டு வைத்தனர். அதனையடுத்து கலா வித்தகர் ம.தயாபரனின் கடவுள் வாழ்த்துப்பா அரங்கத்தைக் குளிரச் செய்தது. விழாவின் தலைமையுரையை சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் நிகழ்த்தினார். இசை நுணுக்கங்களைத் தெரிந்தவரும் நிறைந்த இசையார்வம் கொண்டவருமான அதிபரின் தலைமையுரை மிகவும் பொருத்தமாய் அமைந்திருந்தது.

எழிலுரை! எழிலுரையென்றாலே அழகான உரையென்பது தானே அர்த்தம். இசைத்தமிழ் இன்பம் என்னும் தலைப்பை எடுத்துத் தனது இயல்பான பேச்சுத்திறனாலும், இனிமையான குரல் வளத்தினாலும் பேசியும், பாடியும் சபையோரிடமிருந்து பெரும் "அப்ளாஸ்" வாங்கி யிருந்தார் சி.சசீவன். இவர் ஒரு வங்கி உத்தியோகத்தராக இருந்தும், தமிழின் மீதும் இசையின் மீதும், இவருக்கிருந்த நுண்ணறிவும் பாண்டித்தியமும் பார்வையாளர்களை வியக்க வைத்தன.

இத்துடன் அன்றைய விழா [illegible] நிறைவெய்தியது. பார்வையாளர் இதுவரை ஆவலுடன் [illegible]டனும் காத்துக் கொண்டிருந்த அந்த நிகழ்வு அரங்கிலே ஆரம்பமாகவிருந்தது. சபையிலே பலத்த சலசலப்பும் ஆரவாரமும் ஒன்றுசேர, அந்த இளம் நாதஸ்வர வித்துவான்களான சித் தார்த்தனும், பிரதித்தனும் கம்பீரமாக மேடையில் ஏறினர். அப்போது ஆரவாரம், கரகோசம் இரட்டிப்பாயிருந்தது. மறைந்த பிரபல நாதஸ்வர மாமேதை கே.எம்.பஞ்சாபி கேசனின் பேரர்கள்! கவர்ச்சியான இன் முகங்களைக் கொண்ட இளையவர்கள்! சிறுவயதிலேயே நாதஸ்வர இசையை முழுமையாகக் கற்று, ஏராளமான ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுக்கள், பட்டங்களைச் சுவீகரித்துக் கொண்டவர்கள். ஒற்றுமையான அண்ணன், தம் பிகள்! ஒரே இசையில் ஒத்தூதும் திறன் மிக்கவர்கள், இவைகள் தான் அவர்களுக்கு வழங்கப்பட்ட "அட்வான்ஸ்" கரகோசங்களுக்குக் காரணங்களா யிருக்கலாம்.

நிகழ்ச்சிக்கு இன்னிசைச் சங்கமம் எனத் தலைப்பிட்டிருந்தனர். நாதஸ்வரம், தவில் போன்ற கீழைத்தேய வாத்தியங்களுடன் தபேலா, ஒக்பாட், கிற்றார், கீபோட் போன்ற மேலைத்தேய இசைக் கருவிகளையும் ஒன்றாகக் கையாண்ட ஒரு மாறுபட்ட வித்தியாசமான இசை நிகழ்வினைக் காணக் கூடிய தாகவிருந்தது. அத்தனை வாத்தியங்களிலும் நாதஸ்வர இசையே முதன்மை இசையாகக் கோலோச்சி நின்றது. அந்த இசைக்கு இசைவாகப் பக்க இசையை வழங்கினர் ஏனைய இசைக்கலைஞர்கள். இசைகள் எல்லாம் ஒன்றாக ஒலித்தமையானது சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந் தமை போன்றதொரு இனிமை! அடடா!.

எமது பாரம்பரிய இசையான நாதஸ்வரத் திலிருந்து முதலில் கடவுள் வாழ்த்துப் பிரசவமாகியது. அதனைத் தொடர்ந்து விநாயகர் துதி, அருமையான பழம் பெரும் கீர்த்தனைகள், தில்லானா, திரையிசைப் பாடல்கள் என் இசை வெள்ளம் பிரவாகித்துக் கொண்டிருந்தது. நாதஸ்வர இசையை வழங்கிய உடன் பிறப்புக்கள் சித்தார்த்தனும், பிரகீர்த்தனும் அருகருகேயமர்ந்து நாதஸ்வரத்தை இசைக்கும்போது தில்லானா மோகனாம்பாளில் பார்த்து மகிழ்ந்த சிவாஜி கணேசனும் ஏ.வி.எம்.ராஜனும் ரசிகர்களின் மனக் கண்களில் வந்து போனதை யாரும் மறுக்க முடியாது. அத்தனையழகும் சோடிப் பொருத்தமும் ரசிகர்களின் கண்களைக் கவர்ந்திழுத்தன. ரசிகர்களின் பக்கம் ஒரு தொலைபேசி உரையாடலையோ ஒரு கொட்டாவியையோ வேறு சிந்தனைகளையோ காணமுடியவில்லை. அந்தளவுக்கு இன்னிசைச் சங்கமத்துடன் ஒன்றிப்போயிருந்தனர். பக்க இசை வழங்கியவர்கள் நாதஸ்வர இசைக்கும் பொருத்தமான இடங்களில் பக்க இசைகளை வழங்கி அவ்வப்போது சிறப்புச் சேர்த்துக் கொண்டனர்.

பொதுவாக ஆங்காங்கே நடைபெறும் இசை நிகழ்வுகளில் ரசிகப் பெருமக்களைக் கைதட்டிக் கரகோம் செய்யும்படி மேடையில் நிற்கும் அறிவிப்பாளர் வேண்டுகோள் விடுப்பது வழக்கம். ஆனால், இந்த இன்னிசைச் சங்கமத்திலே யாருடைய தூண்டுதலோ, வேண்டுதலோ இன்றி சிறுவர் முதல் பெரியோர்வரை அவ்வவ்போது கரகோசங்கள் செய்து மகிழ்ச்சியடைந்தமை அந்த நிகழ்வின் சிறப்புக்குக் கட்டியம் கூறின. அத்தனை கனதியான, அந்த இன்னிசைச் சங்கமத்தைக் கண்டு களித்தவர்கள் உண்மையிலேயே பாக்கியசாலிகள். பார்க்காதவர்கள் இனியாவது சந்தர்ப்பம் கிடைக்கும் பட்சத்தில் பார்த்து மகிழ்ந்து கொள்ளட்டும்.

தென்மராட்சி மண்ணுக்கு மிகுந்த புகழையும் பெருமையையும் பெற்றுத் தந்து கொண்டிருக்கும் தென்மராட்சி இலக்கிய அணியானது குறிப்பிட்ட சில இலக்கியவாதிகள், தமிழ் ஆசான்கள், கலை ஆர்வலர்களின் அளப்பரிய அர்ப்பணிப்பினாலே உருவாகி, இத்துணை வளர்ச்சிப் போக்கைக் கண்டிருக்கின்றது. குறிப்பாக ஆசிரியர் அ.வாசுதேவா மற்றும் மார்க்கண்டு ஆசிரியர் போன்றவர்களுடன் ஏனைய நலன் விரும்பிகளும், இலக்கியப்பிரியர்களும் இவ்வமைப்பின் உறுதிமிகு தூண்களாக விளங்கிக் கொண்டிருக்கின்றார்கள். இனிவருங்காலங்களிலும் எமது தென்மராட்சி இலக்கிய அணியானது, நல்ல முத்தான கலைகளைச் சத்தாகத் தந்து எமது மண்ணில் வாழும் இலக்கிய ஆர்வலர்களின் இலக்கியப்பசியைப் போக்க எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக!

வாழ்க தமிழ்! வளர்க நம் கலைகள்!

> ரசிகர்களின் பக்கம் ஒரு தொலைபேசி உரையாடலையோ ஒரு கொட்டாவியையோ வேறு சிந்தனைகளையோ காணமுடியவில்லை. அந்தளவுக்கு இன்னிசைச் சங்கமத்துடன் ஒன்றிப்போயிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்மையைப் பெருமைப்படுத்தும் பெருவிழா

ஸ்ரீமதி.மாதங்கி மயூரகிரிசர்மா

நவதின மகோற்சவம் என்றே புகழப்படும் பெரு விழா நவராத்திரி விழாவாகும். உலகெங்குமுள்ள இந்துக்கள் ஒருங்கே இணைந்து கொண்டாடும் திருநாள் இதுவாகும்.
வழமையான ஒன்பது இரவு வழிபாடுகள் நடைபெற்று விஜயதசமி விழாவுடன் பத்துநாள்கள் கொண்டாடப்படும் நவராத்திரிவிழா இந்தமுறை மொத்தமாக பதினொரு நாள்கள் கொண்டாடப்படுகிறது.
ஏகாதசி தினம் என்ற பதினொரு நாள்கள் அமையும் நவராத்திரி மிகவும் அபூர்வமானது.
ஏன் இப்படி? என்கிற கேள்வி எல்லோர் மனதிலும் உதயமாகலாம். பிரதமை திதியும் அத்த நட்டசத்திரமும் கூடிய நாள் நவராத்திரி பூஜை ஆரம்பிக்க உகந்த நாளாகும்.
அதே போல தசமித்திதியும் திருவோண நட்சத்திரமும் கூடிய நாள் விஜயதசமியாக கொண்டாடி வருகிறோம். இந்த முறை இந்த இரு நாள்களுக்குமான இடைவெளி ஒன்பது நாள்களாக இருப்பதால் மொத்தம் பதினொரு நாள்களாக அமைகிறது.
பிற விழாக்களை விட நவராத்திரி விழாவில் பெண்களுக்கே அதிக உரிமையும் பெருமையும் சிறப்பும் இருக்கிறது.
இவ்வளவு ஏன்? இந்த விழாவே பெண் தெய்வத்துக்குரிய விழாத் தானே?
இந்த நவராத்திரி தினங்களில் தான் அன்னை மகா சாமுண்டா தேவி கொடியவர்களை அழித்து பெண்மையின் பெருமையை நிலைநாட்டினாள்.
கொடியவர்களை அழிப்பது என்பது அகத்தும் புறத்துமுள்ள மாசுகளை அகற்றித் தெய்வீக ஒளியை ஏற்றுவதைக் காட்டுகிறது.





இந்த மங்கலமான திருநாள்கள் கலைகளின் திருநாள்களாகும். வீடுகள் தோறும் அலங்காரமாக கொண்டாட வேண்டிய பெருநாள்கள்.
வீடுகளென்ன, கல்விச்சாலைகளென்ன, அலுவலகங்களென்ன, கோயில்களென்ன எங்கும் பக்தியை பெருகச் செய்து இறையுணர்வை ஏற்படுத்தும் நற்சாதனமாக நவராத்திரி விளங்குகின்றது.
படிப்படியாக கொலு வைப்பதும் கோலங்களிடுவதும் பாமாலைகள் பாடுவதும் நர்த்தனமாடுவதும் வாத்தியங்களை இசைப்பதும் இந்த விழாவின் இன்றியமையாத அம்சங்களாகும்.
பெண்குழந்தைகளை கன்யா என்று கன்யா பூசை செய்து வழிபடுவர். வீடுகளுக்கு வருகிற பெண்களை எல்லாம் இன்னார் இனியார் என்று பாராது வேறுபாடு இன்றி வரவேற்று தாம்பூலம் கொடுத்து உபசரணை செய்வர். அன்னையின் திருமுன் பலவித படையல் நெய்வேதனம் செய்வர்.
இவையெல்லாம் நவராத்திரிக்கே உரிய மகிமைகளாகும். கண்டி கோமம்; ஸ்ரீசக்கர பூசை, அபிராமி அந்தாதி ஓதல் போன்ற நிகழ்வுகளும் நவராத்திரியில் இணைவதை அவதானிக்கலாம்.
ஒரே தாயான அன்னையை முக்கியமாக துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி என்று மூன்று வடிவங்கள் மும்மூன்று நாள்களில் ஆராதிப்பர்.
இலங்கையில் பலரும் வீட்டுப்பூசை என்று மகா நவமியன்று மட்டுமே வீட்டில் கும்பம் வைத்து ஆராதித்தாலும் எல்லா நாள்களும் வழிபடுவதே சிறப்பானது.
குறைந்த பட்சம் அஷ்டமி என்ற நாள் தொட்டேனும் வழிபாடு செய்வது சிறப்பானது.
வட இந்தியாவில் துர்க்கா பூசை என்றே இதனை கொண்டாடுகின்றனர். அவர்கள் சைலபுத்திரி பிரஹ்மம்சாரிணி சந்திரகண்டா கூஷ்மாண்டா ஸ்கந்தமாதா காத்யாயணீ காலராத்ரீ மகாகௌளரி சித்திப்ரதா என்று ஒன்பது நாளும் ஒன்பது பெயருடையவளாக துர்க்கை அம்மையை போற்றுவர்.
தமிழர்கள் கல்வியிலும் கலையிலும் அதிக ஈடுபாடுடையவர்களாதலில் கலை மகள் விழா என்று நவராத்திரியை சிறப்பிக்கிறார்கள்.
இதைவிட கும்பத்தில் ஆராதிக்கும் அன்னையை தீபத்திலும் கண்ணாடி என்கிற தர்ப்பணத்திலும் கூட வழிபடுகின்ற வழக்கமுண்டு.
ஆயுத பூசையானது தொழில் சிறப்பைத் தருவது. மறுநாளான விஜயதசமி வெற்றி விழா என்கிற வெற்றித்திருநாள். இந்த வெற்றியே மானம்பு என்று அழைக்கப்படுகிறது.
இந்த நாளில் வன்னி மரத்தை பூசை செய்யுமாறு சொல்லப்பட்டுள்ளது. இதனையே இன்றும் ஸமீவிரு பூசை என்று பஞ்சாங்கங்கள் கலண்டர்களில் பதிவாக்கப்பட்டுள்ளது. (ஸமீவிரும் வன்னிமரம்).
ஆயினும் கால ஓட்டத்தில் வன்னிக் கிளையை வாழையில் வைத்து வாழை மரத்தை பூசை செய்து வெட்டுவது தேச வழமையாகியுள்ளது. இதனை தமிழ் நாட்டில் வன்னி மரத்துக்கு அம்புபோடுதல் என்றே இன்றும் கொண்டாடுவர்.

> வீடுகளென்ன, கல்விச் சாலைகளென்ன, அலுவலகங்களென்ன, கோயில்களென்ன எங்கும் பக்தியை பெருகச் செய்து இறையுணர்வை ஏற்படுத்தும் நற்சாதனமான நவராத்திரி விளங்குகின்றது.

இவ்வாறு பல்வகை பெயர்களில் பலவகை மரபுகள் சடங்குகளுடன் கொண்டாடப்படும் நவராத்திரி பெண்மையைப் பெருமைப் படுத்தும்திருநாள். ஆகவே பெண்களான நாமெல்லாம் சக்தியை வழிபட்டு நவராத் திரியின் உன்னத இலட்சிய உணர்வை பெறுவோமாக. அம்பிகையின் பேரருளைப் பெறுவோமாக.

# சிறந்ததொரு ஆரம்பம்....

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சூரனை வருடா வருடம் தோற்கடிக் கிறோம். எமக் காணவைகளை விட்டுக்கொடுப் பதில்லை,
எப்பவும் அவற்றை மறந்துவிடப்போவதுமில்லை. அதேபோல்தான் போரால் பாதிக்கப்பட்ட மக்களும் என்றைக்கும் தமது வடுக்களை மறப்பதில்லை. வடுக்கள் ஏற்படுத்தப்பட்டவைதான். ஆனால் வடுக்கள் எதனால் ஏற்பட்டவை என்பதற்கான தீர்வுகள் கிடைக்க வேண்டும். அவற்றை நாடக ஆற்றுகைகள் வெளிக்கொண்டு வருபவையாகத்தான் இருக்கின்றன" என்ற கருத்து கலந்துரையாடலின் போது முன்வைக்கப்பட்டது.
நாடக நெறியாளர் ச.பாலசிங்கமும் தினக்குரல் பத்திரிகையின் உதவி ஆசிரியர் ஆ.சபேஸ்வரனும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தலைவர் வ.முருகதாசும்கூட கருத்துரைகளை வழங்கினார்கள்.
'இறப்புச் சான்றிதழ்', 'புதையுண்ட சடங்கு', 'தூவானம்', 'ஏகாந்தம்' ஆகிய உணர்வுபூர்வமான நாடகங்களும் கருத்தரங்களில் மேடையேற்றப்பட்டன. இவற்றில் 'புதையுண்ட சடங்கு', 'தூவானம்' ஆகிய நாடகங்கள் முல்லைத்தீவைச் சேர்ந்த இளைஞர்களாலேயே மேடையேற்றப்பட்டன. அவர்களுக்கு நடத்தப்பட்ட அரங்கக் களப்பயிற்சியில் அவர்களால் பகிரப்பட்ட சொந்தக் கதைகளில் இருந்து அவை ஆற்றுகை வடிவமாக்கப்பட்டன என்று செயல்திறன் அரங்க இயக்கத்தினர் தெரிவித்தனர். இதில் நடித்தவர்கள் அனைவரும் இறுதிப் போரின்போது முழுத் துன்பங்களையும் அனுபவித்தவர்கள் என்பது ஆற்றுகைகளின் உயிர்ப்பை மேலும் ஒரு படி உயர்த்தியிருந்ததை பார்வையாளர்களின் முகங்களில் உணர முடிந்தது.
அவை போரின் கதைகளைத்தான் பேசின என்பதைச் சொல்லித் தெரியவேண்டும் என்பதில்லை. அதிலும் 'தூவானம்' நாடகம் முற்றிலும் வேறுபட்ட காட்சியமைப்புகளுடனும், நாடக உத்திகளுடனும் அரங்கேறியது. புதிய அரங்கியல் அனுபவத்தைக் கொடுத்தது.
போரில் சிக்குண்ட ஒரு தனி மனிதன் உள, உறவு ரீதியாக எப்படிச் சிதைக்கப்பட்டான் என்பதை அற்புதமாக வெளிப்படுத்தியது. எந்தவொரு மனிதனுக்கும் வந்துவிடக்கூடாத மானிடத் துயரத்தை அது பேசியது. கொடும் போரின் ஒரு கட்டத்தில் தாய் தந்தையைக் காப்பதா, மனைவி பிள்ளையைக் காப்பதா என்கிற இக்கட்டுக்குள் சிக்கிக்கொண்ட ஒருவன், இரு தரப்பில் ஒருவரைத்தான் காப்பாற்ற முடியும் என்கிற நிலையில் எந்த முடிவை எடுத்தான்? அதனால் வந்த விளைவு என்ன? அந்த முடிவு போர் முடிந்த பின்னும் அவனை எப்படித் துரத்திக்கொண்டே இருக்கின்றது என்பதை உணர்ச்சிபூர்வமாகக் காட்டுவதாக இருந்தது நாடகம். பார்வையாளர்கள் மெய்சிலிர்க்க அதைக் காட்சிப்படுத்தினார்கள் கலைஞர்கள். "இந்த இனத்திற்கு யார் தந்த சாபமிது. பட்டுப்போன மரத்தில் பச்சையங்கள் வருமா? எங்களைச் சுற்றி எல்லைகள் இட்டார்கள், எழு என்றார்கள், நில் என்றார்கள், வா என்றார்கள், போ என்றார்கள்" போன்ற பாடல் வரிகள் போரின் மனித அவலங்களை அச்சொட்டாக வெளிப்படுத்தி பார்வையாளர்களை ஆற்றுகையுடன் கட்டிப்போட்டிருந்தன.
மழை விட்டும் தூவானம் விடவில்லை என்று சொல்வார்கள். அதேபோன்று போர் முடிவடைந்த பின்னரும் அது ஏற்படுத்திய வலிகள், காயங்கள், வடுக்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. போரில் தமது உறவுகளை இழந்து தமது உடல் அவயங்களை இழந்தவர்கள் தமக்குத்தமே சுய தண்டனை வழங்கு கின்றார்கள். சமூகத் தண்டனைக்குள்ளும் அவதிப் படுகின்றார்கள். இதனை சமூகக் கூட்டுப் பொறுப்புணர்வின் மூலமே மீட்டெடுக்க முடியும் என்ற கருத் துணர்வை நாடகமும் கருத் தரங்கும் ஆணித்தரமாக வலியுறுத்தின.

> மழை விட்டும் தூவானம் விடவில்லை என்று சொல் வார்கள் அதேபோன்று போர் முடிவடைந்த பின்னரும் அது ஏற்படுத்திய வலிகள், காயங்கள், வடுக்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. போரில் தமது உறவுகளை இழந்து தமது உடல் அவயங்களை இழந்தவர்கள் தமக் குத் தாமே சுய தண்டனை வழங்குகின்றார்கள். சமூகத் தண்டனைக்குள்ளும் அவதிப்படுகின்றார்கள். இதனை சமூகக் கூட்டுப் பொறுப்புணர்வின் மூலமே மீட்டெடுக்க முடியும் என்ற கருத்துணர்வை நாடகமும் கருத்தரங்கும் ஆணித்தரமாக வலியுறுத்தின.

போரின்றிய விடியலை நோக்கிய கலைப் பயணம் சிறந்ததொரு ஆரம்பம். வலிகளைச் சுமந்தவர்களின் வாழ்வை வெளிப்படுத்த சிறந்த களத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. செயல் திறன் அரங்க இயக்கத்தினரின் இம் முயற்சி மேலும் வளர்ந்து பரவவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் நாதன் (சட்டத்தரணி)



# சோனகத் தெருவுக்குப் புகழ்சேர்த்த அந்த மண்ணின் மைந்தர்கள்

*(நேற்றைய தினம் மேன்மையுடன் விளங்கிய யாழ்ப்பாணம் சோனகர் தெரு என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரையின் தொடர்ச்சி)*

சிறிது வசதிபடைத்தவர்கள் தங்கள் பிள்ளைகள் உயர்கல்வி கற்க வேண்டுமென்ற நோக்கத்துடன் பல்கலைக் கழகம் வரை கற்க அனுமதித்தார்கள். சட்டக்கல்லூரிக்கு அனுப்பினார்கள். ஏன் இந்தியாவுக்குக் கூட அனுப்பிப் படிப்பித்தார்கள். அவ்வண்ணம் படித்த மாணவர்கள் சோனகதெரு விலேயே பட்டப் படிப்புப் பெற்றவர்களாகக் கருதப் பட்டார்கள். அந்த நாளில் அவர்களின் தொகையை விரல் விட்டு எண்ணிவிடலாம். அவ்வண்ணம் ஊருக்குப் பெருமை சேர்த்தவர்கள், முத்திரை பதித்தவர்களாகக் கருதப்பட்டார்கள்.

அவ்வாறானவர்களின் வரிசையில், தான் அணிந்திருந்த துருக்கித் தொப்பியை நீதிமன்றத்திலும் அகற்ற மாட்டேன் அது எமது சமய அடையாளம் என வாதாடி வெற்றிபெற்றவர் மர்ஹூம் எம்.சி.அப்துல்காதர் என்ற வழக்கறிஞர். (1875 தொடக்கம் 1946) 1936 இல் யாழ்.நகரசபையில் 12ஆம் வட்டார அங்கத்தவராகவும் நகர சபையின் உப தலைவராகவும் இருந்த சட்டத்தரணி காதி அபூபக்கர் ஜே.பி.யு. எம். அவரது மகன் வைத்தீஸ்வராவின் பழைய மாணவனும், இலங்கையின் முதலாவது முஸ்லிம் சிவில்சேவை அதிகாரியாகச் சித்திபெற்றவர் (சி.சி.எஸ்) டாக்டர் ஏ.எம்.ஏ. அசீஸ். இவர் கிழக்கு மாகாணத்தில் பல பிரதேசங்களில் உதவி அரச அதிபராகக் கடமை புரிந்து பிற்காலத்தில் கொழும்பு சாஹிராக் கல்லூரியின் அதிபராக இருந்தார். இவரினது கல்விப்புலமை காரணமாக, யாழ்.பல்கலைக்கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழாவின் போது கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது. 1952லிருந்து 1963வரை இலங்கைசெனற்சபையில் அங்கத்தவராக இருந்தார்.

வைத்தீஸ்வராவின் பழைய மாணவனான மர்ஹூம் எம்.எம். அப்துல்காதர் இலங்கையின் முதல் முஸ்லிம் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டவர், இவரது மருமகன் சி.எம். முஹம்மது உதுமான், சோனகத் தெருவின் முதல் பட்டயக் கணக்காளர்.

சட்டத்தரணி காதி அபூபக்கரின் மருமகனான குவாசி எம்.எம்.சுல்தான் (ஜே.பி.யு.எம்) யாழ்ப்பாண மாநகர சபையின் 12ஆம் வட்டார அங்கத்தவராவும் 1955இல் யாழ்ப்பாண மேயராகவும் இருந்தவர். 1950 இலிருந்து தேர்தல்களில் வெற்றிபெற்றவர். 15 அங்கத்தவர்களைக் கொண்ட மாநகர சபையில் இரண்டே முஸ்லிம் அங்கத்தவர் இருந்தும், இவரது கல்வித்தகைமை, கண்ணியம், நேர்மை காரணமாக மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1955இல் அன்னாருக்குத் தமிழ்–முஸ்லிம் உறவின் சாட்சியாகக் கிடைத்த மேயர் பதவியானது, யாழ்மாநகரசபை வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயமாகும்.

மருத்துவர் எம்.எச்.ஏ. அப்துல்காதர் சோனகதெருவின் முதல் M.B.B.S மருத்துவர் வெளிநாடுகளில் உயர் பதவிகளை வகித்தவர்.

வைத்தீஸ்வராவின் இன்னொரு பழைய மாணவன் எம்.எம்.மக்பூல் C.A.S பரீட்சையில் சித்திபெற்று கிளிநொச்சியில் காணி அதிகாரியாகக் கடமையாற்றினார். இவர் அகால மாரணமாகும்பொழுது மன் னார் அரச அதிபராகக் கடமை புரிந்தார். சோனகத் தெருவின் அபிவிருத்தியை லட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவர். சட்டத்தரணிகள் து.வி.ஆலீப் M.s.s அட்வகேட் சகீது, சட்டத்தரணி மன்சூர் எனப் பட்டியல் நீளும்.

எம்.எம்.அப்துல் குத்தூஸ் முன்னாள் ஒஸ்மானியக் கல்லூரியின் அதிபராகவும் பிரதேசக்கல்வி அதிகாரியாகவும் இருந்து பிரதிக்கல்விப்பணிப்பாளர் நாயகமாகப் பதவி வகித்து ஓய்வு பெற்றவர். எம்.எம்.மன்சூர் பட்டதாரி, கல்வி நிர்வாக சேவையாளர் பிற்காலத்தில் இணைந்த வடகிழக்கு மாகாண சபையில் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாளின் மந்திரிசபையில் கல்வி அமைச்சின் செயலாளராகப் பணிபுரிந்தார்.

இவர்களைப் போல 30க்கு மேற்பட்டவர்கள் கல்லூரி அதிபர்களாகவும் பிற்காலத்தில் கல்வி நிர்வாக சேவையில் பல பதவிகளை அலங்கரித்த சோனக தெருவின் மைந்தர்கள்.

தன்னிகரற்ற எழுத்தாளராக, பேச்சாளராக இலக்கியவாதியாக, அரசியல் வாதியாக விளங்கி சோனகதெருவுக்குப் பெருமை சேர்த்தவர் மர்ஹூம் சுபைர் இளங்கீரன் என்னும் தமிழ் எழுத்தாளர்.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் யாழ்.நகரின் பெரியகடைப்பகுதி மற்றும் சந்தைத் தொகுதிகளில் நிகழ்ந்த வர்த்தக முயற்சிகளில் கிட்டத்தட்ட 70 வீதம் யாழ்.முஸ்லிம்கள் வசமே இருந்தன. இரும்புக்கடைகள், நகைக்கடைகள், தையல் தொழில், இறைச்சிவியாபாரம் என்பன முஸ்லிம்களின் ஏகபோக உரிமையாக இருந்தன. வியாபாரக் கட்டடங்கள் 60 வீதமானவற்றின் உரிமையாளர்களாவும் இருந்தனர். 1950ஆம் ஆண்டுகளில் இவ் விகிதாசாரம் சிறிதளவு குறைவடையலாயிற்று. 1990 ஒக்ரோபர் வெளியேற்றத்துடன் யாழ் வர்த்தகத்தில் முஸ்லிம்களின் பங்கு பூஜ்ஜியமாயிற்று. கட்டட உரிமையும் கிட்டத்தட்ட இன்று 10வீதம் என வீழ்ச்சியடைந்துள்ளது.

1961ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கைத் தமிழரசுக் கட்சியால் ஒழுங்கு செய்யப்பட்ட வடக்கு, கிழக்குக் கச்சேரிகளை முடக்கும் சத்தியாக்கிரகம் என்னும் அஹிம்சாவழிப் போராட்டம் இலங்கையின் அரச வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். பெப்ரவரி 25ஆம் நாள் அந்தக்கால யாழ்ப்பாண முக்கிய அரச பிரமுகர்களில் பெரும்பாலானோர் தத்தமது எதிரும் புதிருமான அரசியல் கொள்கைகளையும், தேர்தல் மோதல்களையும் புறந்தள்ளிவிட்டு இந்த அகிம்சைப் போராட்டத்தில் ஒன்றிணைந்து கலந்து கொண்டனர். முஸ்லிம் அரச ஊழியர்களும், பொது மக்களும் இந்த உரிமைப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். அந்தக் காலத்தில் இந்தச் செயல் மிகவும் பாராட்டுக்குரிய பேசு பொருளாக விளங்கியது. இதன் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்ட ஊர்வலம் முன்னாள் மேயர் மர்ஹூம் சட்டத்தரணி சுல்தான், முன்னாள் உதவி மேயர் மர்ஹூம் வி.எம்.எம். அபூசாலி ஹாஜியார் தலைமையில் நடைபெற்றது. இந்தத் தகவலை 1963 இல் ஆங் கிலத்தில் சட்டத்தரணி எஸ். பொன்னையா என்பவரினால் எழுதப்பட்ட நூலில் காணலாம்.

> சட்டத்தரணி காதி அபூபக்கரின் மருமகனான குவாசி எம்.எம். சுல்தான் (ஜே.பி.யு.எம்) யாழ்ப்பாண மாநகர சபையின் 12ஆம் வட்டார அங்கத்தவராவும் 1955இல் யாழ்ப்பாண மேயராகவும் இருந்தவர். 1950 இலிருந்து தேர்தல்களில் வெற்றிபெற்றவர் 15 அங்கத்தவர்களைக் கொண்ட மாநகர சபையில் இரண்டே முஸ்லிம் அங்கத்தவர் இருந்தும், இவரது கல்வித்தகைமை, கண்ணியம், நேர்மை காரணமாக மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1955இல் அன்னாருக்குத் தமிழ் முஸ்லிம் உறவின் சாட்சியாகக் கிடைத்த மேயர் பதவியானது, யாழ்மாநகரசபை வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயமாகும்.

இன்னுமொரு நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம். இந்திய அமைதிப்படை புலிகளுடன் போர் புரிந்த காலத்தில் கோட்டையிலிருந்து சோனக தெருவை நோக்கியும் செல் மழை பொழிந்தது. தங்கள் பகுதியிலிருந்து எதுவித எதிர்த் தாக்குதலும் இடம்பெறாத சமயம், இப்படி நடைபெறுகிறதே என்று கவலையுற்றனர் முஸ்லிம் மக்கள். கன்சூன் என்ற பெயருடைய வாலிபன் ஒரு திடீர் முடிவெடுத்தான். சுமார் 20பேர்வரை மக்களை அழைத்துக் கொண்டு தலைக்குமேல் வெள்ளைக் கொடியை உயர்த்திப் பிடித்துக் கொண்டு கோட்டையை நோக்கி முன்னேறினான். துணிவுடன் கோட்டையை அடைந்த அந்த வாலிபன் தங்கள் பகுதி நிலைமையை கொமாண்டருக்குத் தெரிவித்தான். திருப்தி அடைந்த கொமாண்டர் செல் தாக்குதலை உடனடியாக நிறுத்தும்படி கட்டளையிட்டார். மக்கள் அந்த வாலிபனைக் கட்டியணைத்து ஊரைக் காத்த சிறுவன் என்று பாராட்டி, மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள். அவனது முயற்சியால் தப்பியது சோனகத் தெரு மாத்திரமல்ல அதை அண்டிய பகுதிகளான கொட்டடி, கோணாந்தோட்டம், வெள்ளாந்தெரு, நாவாந்துறைப் பகுதிகளுமே என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அதே போன்று சோனக தெருவின் மண்ணின் மைந்தர்கள் வர்த்தகத் துறையிலே கொழும்பு புறக்கோட்டை, தெகிவளை, கல்கிசை, பாணந்துறை, நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம், அனுராதபுரம், மதவாச்சி போன்ற பிரதேசங்களில் சிறிய பெரிய வர்த்தகர்களாகவும் தொழிற்சாலை உரிமையாளர்களாகவும் சிறப்பாகப் பரிணமிக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் தொழில்புரியும் இடங்களில் தங்கள் குடும்பத்தினருடனேயே வாழ்கின்றனர். 50 வீதத்துக்கு மேற்பட்டோர் தென்பகுதியில் சொந்தமாக வீடுகளையும் வைத்திருக்கிறார்கள்.

இப்படியெல்லாம் பெருமையுடனும், வசதியுடனும் வாழுகின்ற கனவான்கள் ஏன் தாம் பிறந்து வளர்ந்த இன்று சோபையிழந்திருக்கும் சோனகத் தெருவை புதுப்பிக்க வருகிறார்களில்லை என என்னைக் கேட்டால் எனது பதில் அவர்கள் மீண்டும் ஒரு முறை தமது விரல்களைச் சுட்டுக் கொள்ளத் தயாரில்லை என்பதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒக்ரோபர் மாத

# 2016 ராசி பலன்

## மேடம்

புரட்சிகரமாக யோசிக்கும் மேட ராசி அன்பர்களே! தன-சப்தமாதிபதியான சுக்கிரன் இந்த மாதம் முழுக்க சாதகமான நட்சத்திரங்களில் சென்று கொண்டிருப்பதால், போராட்டங்களிலிருந்து மீள்வீர்கள். பணவரவு அதிகரிக்கும்.

பழைய சிக்கல்களுக்கு தீர்வு கிடைக்கும். பிரபலங்களின் நட்புக் கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் இருந்து வந்த மோதல்கள் விலகும். வீடு கட்டுவது, வாங்குவது நல்ல விதத்தில் முடியும்.

16-ஆம் திகதி வரை சூரியன் 6 ஆம் வீட்டில் அமர்ந்திருப்பதால் வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். அரசால் அனுகூலம் உண்டு. பழைய கடனில் ஒரு பகுதியை முழுமை செய்ய வழி பிறக்கும். பூர்வீகச் சொத்துப் பிரச்சினை சுமுகமாகும். மகனுக்கு வெளிமாவட்டம் அல்லது வெளிநாட்டில் வேலை கிடைக்க வாய்ப்பிருக்கிறது.

பிள்ளைகளின் வாழ்க்கை தரம் வசதி, வாய்ப்புகள் உயரும். குலதெய்வக் கோயிலை புதுப்பிப்பீர்கள். 16ஆம் திகதிவரை புதன் 6 ஆம் வீட்டில் மறைந்தாலும், ஆட்சி பெற்று அமர்வதால் எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். உறவினர், நண்பர்களால் அன்புத் தொல்லைகள் இருக்கும். அவ்வப்போது அசதி, சோர்வு, தொண்டைப் புகைச்சல், நரம்புச் சுளுக்கு வந்து நீங்கும்.

உங்கள் ராசிநாதன் செவ்வாய் சாதகமான வீடுகளில் செல்வதால் உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். வீடு, மனை வாங்குவது, விற்பது இலாபகரமாக முடியும். 6ஆம் வீட்டிலேயே குரு மறைந்திருப்பதாலும், அஷ்டமத்துச் சனி தொடர்வதாலும் பணப் பற்றாக்குறையால் வெளியில் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். சிலர் உங்களை தவறான பாதைக்கு அழைத்துச் செல்வார்கள். மற்றவர்கள் குடும்ப விவகாரத்தில் அத்துமீறி மூக்கை நுழைக்க வேண்டாம். தூங்கும் இடத்தையும் அடிக்கடி மாற்ற வேண்டாம்.

**பெண்களுக்கு**

உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்தப் பாருங்கள். பெற்றோரின் அரவணைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் கூடுதல் இலாபம் கிடைக்கும். தேங்கிக் கிடந்த பழைய சரக்குகளை தள்ளுபடி விலைக்கு விற்றுத் தீர்ப்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். நன்றி மறந்த சக ஊழியர்களை நினைத்துக் கொஞ்சம் ஆதங்கப்படுவீர்கள். கலைத்துறையில் சாதிப்பவர்கள் பிறமொழி வாய்ப்புகளால் பயனடைவீர்கள். போராட்டங்களைக் கடந்து புத்துயிர் பெறும் மாதம் இது.


# போர்க்கால இலக்கியங்கள்

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

சொதன், மா ஓ சேதுங் போன்றவர்களில் சில போர்க்காலப் படைப்புகளைப் படிக்க வாய்ப்புக் கிட்டினாலும் அந்த நூல்களின் மொழிபெயர்ப்புகள் எதுவும் கைக்குக் கிடைக்கவில்லை. ஆனால், அமெரிக்க ஊடகவியலாளர் எட்கார் ஸ்ரோவால் எழுதப்பட்ட நீண்ட பயணம் என்ற நூல் சீனப்புரட்சிப் போரின் ஒரு பகுதியை இலக்கியத் தரத்துடன் வெளிப்படுத்தியுள்ளது. இதுவும் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு உலகெங்கும் படிக்கப்படுகிறது.

இவை உலகப் போர்க் கால இலக்கியங்களில் நானறிந்தவை. இவை எம்மில் சிலரின் இலக்கியப் படைப்பாற்றலுக்கு வழிகாட்டின என்றுகூடச் சொல்ல லாம். எப்படியிருப்பினும் ஏனைய படைப்புகளை விட, போர்க்கால இலக்கியங்கள் தனித்துவம ானவை. ஏனெனில் சிந்தும் குருதியாலும் சிதறும் சதைத் துண்டங்களாலும் தனி மனிதர்கள் தமது நாட்டுக்காகவோ இனத்துக்காகவோ வர்க்கத்துக்காகவோ தம்மையே அர்ப்பணிக்கும் புனித உணர்வாலும் எழுதப்படுபவை.

தமிழர்கள்முப்பதுஆண்டுகளுக்குமேலாகப்போருக்குள் வாழ்ந்தவர்கள். வெற்றிகளைக் கண்டு குதூகலித்தவர்கள். தோல்விகள் ஏற்படும்போது துடித்தவர்கள். போரின் இறப்புகளையும், இழப்புகளையும் இடப் பெயர்வுகளையும் அனுபவித்தவர்கள். பொருளாதாரத்தடை, மருந்துத்தடை, எரிபொருள்தடை போன்ற தாங்கமுடியாத நெருக்கடிகள் மத்தியிலும் விமானக் குண்டு வீச்சுக்கள், எறிகணை வீச்சுகள் நடுவிலும்கூட, ஒரு மாதிரி சுதந்திர நிர்வாகக் கட்டமைப்பின் சுகத்தையும் அனுபவித்தவர்கள்.




எனவே, எம் மத்தியிலும் போர்க்கால இலக்கியப் படைப்புகள் உருவாகுவதற்கான களம் விரிந்து கிடந்தது. அந்தக் களத்தில் ஏராளமான படைப்புக்கள் உருவாகின. சிறுகதைகளாக, கவிதைகளாக, கட்டுரைகளாக வானொலிப் படைப்புகளாக ஆயிரமாயிரம் இலக்கியங்கள் உருவெடுத்தன. மூத்த படைப்பாளிகளிடமிருந்தும் புதிய தலைமுறையினரிடமிருந்தும் போராளிகளிடமிருந்தும் ஒப்பற்ற இலக்கியங்கள் பிறப்பெடுத்தன. அனுபவம் வாய்ந்த படைப்பாளிகளை எழுத வைக்குமளவுக்குப் புதிய தலைமுறையினரதும் போராளிகளினதும் ஆக்கங்கள் வீச்சுடன் மேலலெழுந்தன.

ஆனால், விடுதலைப் போரின் தோல்வி அவற்றில் பெரும்பாலானவற்றை விழுங்கிவிட்டது. எஞ்சியிருக்கும் ஒரு சிலவும் படைப்பாளிகளின் பாதுகாப்புக் கருதி [illegible] முடியாத அளவுக்குத் தலைமறைவாகிவிட்டன. இன்னும் சில வெளிநாடுகளில் உள்ள பெட்டகங்களுக்குள் சிறைவைக்கப் பட்டுவிட்டன.

போர்க்கால இலக்கியங்களே காணக் கிடைக்காத இந்த வெறுமை நிலையில் போர்க் காலத்தை அடிப்படையாகக் கொண்டு சில படைப்புகள் வெளிவந்துள்ளன.

யானை பார்த்த குருடர்கள் கதை எமக்குத் தெரியும். அவர்களுக்குப் பார்வை இல்லாததால் காலைத் தொட்டவன்-யானை உரல் மாதிரி என்றும், வாலைத் தொட்டவன் விளக்குமாறு மாதிரி என்றும்-வியாக்கியானம் செய்தார்களாம். ஆனால், இன்றைய சில படைப்புக்களை நல்ல கண்பார்வை உள்ளவர்களே யானை, பூனை மாதிரி என்றும்-நரி மாதிரி என்றும்-விளக்கம் கொடுத்து, தங்கள் மனக் கவசங்களுக்கு ஏற்ப விளக்கமளிக்க ஆரம்பித்து விட்டனர். அவற்றைப் போர்க்கால இலக்கியங்களாகக் காட்டி, எமது புனிதமான விடுதலைப் போராட்டத்தையும் அதன் ஒப்பற்ற தலைமையையும், மாவீரர்களையும், போராளிகளையும் கீழ்மைப்படுத்தும் கேவலமான பணியில் இறங்கியுள்ளனர். இன்னொரு புறம், போராட்டத்தின் மேன்மையையும் உன்னதத்தையும் அர்ப்பணிப்புக்களையும் வெளிப்படுத்தும் வகையில் சில படைப்புக்களும் வெளிவந்துள்ளன.

எனவே, போரின்போதும், போரின் பின்பும் வெளிவந்த போர்க்காலப் படைப்புகள் சிலவற்றை உண்மையின் அடிப்படையில் ஆய்வுசெய்ய முயல்கிறோம்.

முதலில் கமால் குணவர்த்தனவின் 'நந்திக் கடலுக்கான பாதை', தமிழினியால் எழுதப்பட்டதாகக் கூறப்படும் 'கூர்வாளின் நிழல்', வெற்றிச் செல்வியால் எழுதப்பட்ட 'ஆறிப்போன காயங்களின் வலி' என்னால் எழுதப்பட்ட 'நீந்திக்கடந்த நெருப்பாறு' மற்றும் 'வட்டுக்கோட்டையிலிருந்து முள்ளிவாய்க்கால் வரை' போன்ற நூல்கள் தொடர்பாக எமது பார்வையை முன்வைக்கவுள்ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேற்றைய கடலுணவு

## விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 500 | 500 | 700 | 700 | 800 | 700 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 800 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 600 | 800 | – |
| பாரை | 550 | 400 | 400 | 800 | 500 | 600 | – |
| சுறா | 500 | 500 | 500 | 800 | 600 | 800 | 700 |
| சீலா | 300 | 400 | 300 | 600 | 300 | 500 | – |
| விளை | 650 | 500 | 300 | 600 | 400 | – | 450 |
| முரல் | 300 | 400 | 300 | 500 | 300 | 500 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 300 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 400 | 200 | – |
| ஓரா | 400 | 400 | 300 | – | 300 | 250 | 400 |
| திரளி | 300 | 300 | 100 | 150 | 200 | 150 | 300 |
| நகரை | 250 | 300 | 100 | 250 | 300 | 200 | 300 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 100 | 150 | – |
| ஒட்டி | 300 | 150 | 200 | – | 200 | 300 | – |
| திருக்கை | 150 | 250 | 200 | 400 | 200 | 300 | 250 |
| மதனம் | 150 | 200 | – | 400 | 300 | 250 | 300 |
| கொய் | 100 | 200 | 50 | 70 | 100 | 50 | – |
| பாலை | 400 | 150 | 300 | 400 | 200 | 300 | – |
| வாழை | 100 | 250 | – | 400 | 300 | 250 | – |



# அன்னாசி - வெந்தயப் பணியாரம்

**தேவையான பொருள்கள்**

அரிசி – 200 கிராம்
அன்னாசிப்பழம் நறுக்கிய துண்டுகள் – ஒரு கப்
வெந்தயம், உளுத்தம் பருப்பு – தலா ஒரு தேக்கரண்டி
எண்ணெய்– 100 மில்லி லீற்றர்
உப்பு – தேவையான அளவு

**செய்முறை**


அரிசி, வெந்தயம், உளுத்தம் பருப்பை ஒன்றாக ஊற வைத்து, மென்மையாக அரைக்கவும். அன்னாசித் துண்டுகளைத் தனியாக அரைத்துக் கலக்கவும். உப்பு சேர்த்துக் கலந்து, பணியாரக் கல்லில் எண்ணெய் விட்டு, மாவை ஒரு சிறு கரண்டியால் ஊற்றி, பொன்னிறமாக பொரித்து எடுக்கவும். அன்னாசி – வெந்தயப் பணியாரம் தயார்.



## நாளை

**புரட்டாதி-20**

வியாழக்கிழமை -06.10.2016
திதி: பஞ்சமி பி.ப. 02.53
நட்சத்திரம்: அனுசம் மு.ப.10.15
ராகுகாலம்: 01.32-03.02 வரை
சுபநேரம்: 07.32-09.02 வரை



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 50 | 40 | 60 | 40 | 40 | 30 | 50 |
| கத்தரி | 80 | 60 | 60 | 80 | 40 | 40 | 90 | 35 |
| கரட் | 80 | 100 | 120 | 100 | 80 | 100 | 110 | 100 |
| மரவள்ளி | 70 | 70 | 60 | 50 | 60 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 150 | 120 | 120 | 140 | 160 | 40 | 100 | 60 |
| பாகல் | 100 | 100 | 160 | 120 | 180 | 120 | 150 | 70 |
| கருணைக்கிழங்கு | 120 | 100 | 100 | 120 | 80 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 80 | 90 | 100 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 100 | 100 | 80 | 120 | 90 | 70 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 | 30 | 60 | 70 | 30 |
| தக்காளி | 100 | 80 | 70 | 100 | 80 | 80 | 120 | 40 |
| வாழைக்காய் | 70 | 60 | 40 | 60 | 80 | 80 | 70 | 40 |
| கீரை | 30 | 20 | 30 | 20 | 30 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 30 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 60 | 60–80 | 70 | 70 | 100 | 200 | 70 |
| புடோல் | 50 | 40 | 40 | 60 | 30 | 40 | 70 | 50 |
| கோவா | 80 | 80 | 80 | 80 | 80 | 100 | 90 | 50 |
| வெண்டி | 80 | 80 | 80 | 80 | 80 | 40 | 70 | 30 |
| போஞ்சி | 160 | 140 | 200 | 160 | 180 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 130 | 100 | 120 | 100 | 100 | 90 | 100 |
| தேங்காய் | 50 | 35 | 40 | 35–40 | 30 | 20 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 110 | 110 | 110 | 110 | 100–120 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 300 | 360 | 400 | 360 | 300 | 200 | 120 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 200 | 70 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 100 | 80 | 120 | 80 | 80 | 200 | 80 | 100 |

# மருத்துவக் குணங்கள் நிறைந்த முருங்கை

- முருங்கைப் பட்டை, உலோகச் சத்துக்கள் நிறைந்தது. உணவில் கலந்த வித்துக்கும் நரம்புக் கோளாறுக்கும் இது நல்ல மருந்து. மலச்சிக்கல், வயிற்றுப் புண், கண் நோய் ஆகியவற்றுக்கு மருந்தாகவும் பயன்படுகிறது. வாரத்தில் ஒருமுறையோ இரண்டு முறையோ முருங்கை காயை உணவாக உபயோகித்தால், குருதியும் சிறுநீரும் சுத்திகரிக்கப்படும். வாய்ப்புண் வராதபடி பாதுகாப்பு உண்டாகிறது.
- கடுமையான குருதி சீதபேதி, வயிற்றுப் புண், தலைவலி, வாய்ப்புண் ஆகிய வியாதிகளுக்கெல்லாம் முருங்கைக்காய் கை கண்ட மருந்து. முருங்கைக் காயை வேக வைத்து கொஞ்சம் உப்பு சேர்த்துச் சாப்பிடலாம்.
- முருங்கைக்காய் சூப் காய்ச்சல், மூட்டு வலியையும் போக்க வல்லது. முருங்கை விதையைக் கூட்டு செய்து சாப்பிடலாம். இது மூளைக்கு நல்ல பலத்தை தரும். தாது விருத்தியை உண்டு பண்ணும். முருங்கை மரத்திலிருந்து கிடைக்கும் பிசின் நல்ல மருந்துக் கலவை செய்ய பயன்படுகிறது.
- பச்சைப் பிசினை காதில் ஒரு சொட்டு விட்டால் போதும், காது வலி உடனே நின்று விடும். இந்த மரத்தின் வேர் மற்றும் பிசின் சம்பந்தப்பட்ட மருந்துக் கலவையை அல்லது லேகியங்களை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் நரை சீக்கிரம் வராமல் தள்ளிப்போகும். மேலும் இந்தப் பூவுக்கு தாது விருத்தி செய்யும் குணம் உண்டு.
- முருங்கைப்பூ உஷ்ணத்தை உண்டு பண்ணக் கூடியதுதான் என்றாலும், அதனால் கெடுதல்கள் எதுவும் இல்லை. முருங்கைப் பிசினில் அரை லீற்றர் நீர் விட்டு புதுப் பானையில் வைத்திருந்து காலையில் இரண்டு கொட்டு அவுன்ஸ் நீருடன் கற்கண்டு சேர்த்துச் சாப்பிட்டால் தாது கெட்டிப்படும். முருங்கை இலை சாறுடன் பால் கலந்து குழந்தைகளுக்கு கொடுத்தால், குருதிச் சுத்தியும், எலும்புகளையும் வலுப்படுத்தும்.
- இதில் கர்ப்பிணிகளுக்கு தேவையான கல்சியம், அயன், விற்றமின் உள்ளது. கர்ப்பப்பையின் மந்தத் தன்மையை போக்கி, பிரசவத்தை துரிதப்படுத்தும். இதன் இலையை கொண்டு தயாரிக்கப்படும் பதார்த்தம், தாய்ப்பால் சுரப்பதை அதிகப்படுத்தும்.
- ஆஸ்துமா, மார்புச்சளி, போன்ற சுவாசக் கோளாறுகளுக்கு முருங்கை இலை சூப் நல்லது. முருங்கை இலைச்சாற்றுடன் எலுமிச்சை சாறு கலந்து தடவ முகப்பருக்கள் மறையும். முருங்கைக்காய் இருதயத்தை வலுப்படுத்துவதுடன், இருதய நோய்களைப் போக்கி குருதி விருத்தி தாது விருத்தி செய்யும். முருங்கை இலைச் சாறுடன் தேனும், ஒரு கோப்பை இளநீரும் கலந்து பருக மஞ்சள்காமாலை, குடலில் ஏற்படும் திருகுவலி, வயிற்றுப்போக்கு என்பன கட்டுப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாடா மாப்ளே... இப்பதான் வாறியா... வா... இங்க சரக்கு ஒண்ணும் சரியில்லை யடா... மப்பு ஏறவே மாட்டேன்கிறது"
"மப்பு ரொம்பதான்டா ஓவராய் ஏறியிருக்கு... நான் உன் 'பிரண்டு' இல்லையடா... உன் அப்பன்டா"




**HBD my Darlu** @Lekhas

எல்லோர் உடலும் இரத்தம், சதையால் தான் ஆனது. எல்லோர் மனதும் ஆசை, கனவு, ஏக்கம், வலியால் தான் ஆனது. ஆகையால் யாரைப் பார்த்தும் பயப்படத் தேவையில்லை...!!!



# பெண்ணாக மாறிய பிரபல பொலிவூட் நடிகர்



பொலிவூட்டில் பிரபல நடிகரும், மொடலுமான கவுரவ் அரோரா, ஆணாக இருந்து பெண்ணாக மாறியுள்ளார். இதனால் அவர் தனது பெயரை 'கவுரி அரோரா' என மாற்றிக் கொண்டார்.

இது குறித்துப் பேசிய அவர், 'ஸ்பிளிட்ஸ்வில்லா' என்னும் தொலைக்காட்சி 'ரியாலிட்டி ஷோ'வில் கலந்து கொண்டபோது தான், நான் ஒரு ஆண் அல்ல பெண் என்பதை உணர்ந்தேன் எனத் தெரிவித்தார்.

மேலும், பெண்ணாக மாறத் தேவைப்படும் அறுவைச் சிகிச்சைக்கு, தான் உடல் ரீதியாகத் தயாராகி விட்டதாகவும் இதற்குத்தேவையானமருந்துகளை சாப்பிட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

அதுமட்டுமில்லாமல், "பெண்ணாக மாறத் தான் பலமுறை முயற்சித்ததாகவும், ஆனால், பெற்றோர் மற்றும் சமூகத்துக்குப் பயந்து தன்னால் மாற்முடியவில்லை" என்றும் தெரிவித்தார். இதனால் மனஉளைச்சலுக்கு ஆளாகித் தற்கொலைக்குக் கூட முயன்றுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.





அவன் 'நெற்'றில உட்கார்ந்திருக்கான். இப்போ நீ எவ்வளவு கூப்பிட்டாலும் காதிலே விழாது... பேசாமஃ பேஸ்புக்ல போய் அவனுக்கு ஒரு மெசேஜ் அனுப்பு 'சாப்பிட எழுந்து வாடான்'னு.

உளியைத் தாங்காத எந்தக் கல்லும் சிலையாக முடியாது
இராத்திரி தூங்காமல் பேஸ்புக், வட்சப் பார்க்கிற எந்தப் புள்ளையும் உருப்படவே முடியாது



போன தலைமுறையின் மிச்சம் நாங்கள்




'அமெரிக்கா'வில் மின்தடை ஆனா, அவங்க மின்சார சபைக்குப் போன் பண்ணுவாங்க!
'ஜப்பானில்' மின்தடை ஆனா, அவங்க பியூஸ் போயிருக்கா! அப்படின்னு செக் பண்ணுவாங்க!
ஆனால்,
'இலங்கை'யில் மின்தடை ஆனா, என்ன பண்ணுவாங்கன்னு தெரியுமா?
முதல்ல பக்கத்து வீட்டை செக் பண்ணுவாங்க!

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7 | | | | | | 8 |
| | 6 | | | 8 | | | 3 | |
| 5 | | | 6 | | | 4 | | |
| | | 9 | | | 1 | | | |
| | 3 | | | | | | 1 | |
| | | | 4 | | | 2 | | |
| | | 3 | | | 8 | | | 1 |
| | 8 | | | 5 | | | 6 | |
| 4 | | | | | | 5 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 7 | 9 | 2 | 6 | 4 | 1 | 5 |
| 5 | 4 | 1 | 8 | 3 | 7 | 9 | 2 | 6 |
| 2 | 6 | 9 | 4 | 5 | 1 | 8 | 7 | 3 |
| 6 | 2 | 5 | 1 | 4 | 8 | 7 | 3 | 9 |
| 4 | 9 | 3 | 2 | 7 | 5 | 1 | 6 | 8 |
| 1 | 7 | 8 | 6 | 9 | 3 | 2 | 5 | 4 |
| 7 | 1 | 6 | 3 | 8 | 4 | 5 | 9 | 2 |
| 9 | 5 | 4 | 7 | 6 | 2 | 3 | 8 | 1 |
| 3 | 8 | 2 | 5 | 1 | 9 | 6 | 4 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப்பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமொன்று இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?





**மேடம்:** செயல்களில் கவனச்சிதறல் ஏற்படலாம். நண்பரின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில், அளவான மூலதனம் போதும். இலாபம் சுமார். வெளியூர்ப் பயணத்தில் மாற்றம் ஏற்படலாம்.

**இடபம்:** இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். குடும்பப் பிரச்சினையில் நல்ல தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி அதிகரிக்கும். இலாபம் உயரும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**மிதுனம்:** நல்லோரின் நட்புக் கிடைக்கும். மனதில் புத்துணர்வு பிறக்கும். தொழிலில், இலாபம் அதிகரிக்கும். குடும்பத்தில், மங்கல நிகழ்வு உண்டாகும். காணாமல் தேடிய பொருள் அதிர்ஷ்டவசமாக கைக்கு வந்து சேரும்.

**கடகம்:** உங்களை சிலர் குறை சொல்ல நேரிடலாம். தொழிலில், நிலுவைப் பணி படிப்படியாக நிறைவேறும். இலாபம் சீராகும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். வாகனப்பயணம் இனிமை தரும்.

**சிங்கம்:** நண்பர்களால் சிரமத்தை சந்திக்கலாம். தொழிலில், இலாபம் சுமாரான அளவில் இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாகலாம். உடல் நலனுக்காக மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம்.

**கன்னி:** எந்தச் செயலிலும் நேர்த்தியுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி நிலை திருப்திகரமாகும். மிதமான வருமானம் கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்கும்.

**துலாம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற, அதிக முயற்சி தேவைப்படும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**விருச்சிகம்:** சுறுசுறுப்பாக பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்கும். வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். இஷ்ட தெய்வ வழிபாடு சிறக்கும்.

**தனுசு:** உங்கள் செயல்களில் குளறுபடி ஏற்படலாம் கவனம். தொழில், வியாபாரத்தில், இருக்கிற அனுகூலத்தைப் பாதுகாக்கவும். சுமாரான இலாபம் கிடைக்கும். பெற்றோரின் தேவையை அறிந்து பூர்த்தி செய்வீர்கள்.

**மகரம்:** பெருந்தன்மையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், புதிய முயற்சியால் இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் பாராட்டைப் பெறுவர். பிள்ளைகள் விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**கும்பம்:** உறவினரின் அன்பைப் பெற்று மகிழ்வீர்கள். மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். தொழில், வியாபாரம் செழித்து, புதிய சாதனை இலக்கை அடைவீர்கள். அரசியல்வாதிகள் புதிய பதவி பெற அனுகூலம் உண்டு.

**மீனம்:** பொது விடயத்தில் கருத்து சொல்ல வேண்டாம். தொழிலில், உற்பத்தி, விற்பனை மிதமான அளவில் இருக்கும். இலாபம் சுமார். உறவினர் வருகையால், வீட்டுச் செலவு அதிகரிக்கும். உடல் நலத்தில் அக்கறை கொள்வீர்கள்.

## சபைக்குத்...

லண்டனில் தென்மேற்கில் உள்ளது கிங்ஸ்ரன். 14.38 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட இந்தப் பகுதியில் ஒரு லட்சத்து 70 ஆயிரம் பேர் வாழ்கின்றனர். அவர்களில் 12ஆயிரம் பேர் தமிழர்கள். தமிழ் இந்தச் சபையின் இரண்டாவது மொழியாக உள்ளது.

ஆட்சி, சுகாதாரம், கல்வி, வர்த்தகம் ஆகிய துறைகளில் புரிந்துணர்வைக் கட்டியெழுப்புவதுடன் அறிவைப் பகிர்ந்து கொள்வதற்குமான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றே கிங்ஸ்ரனுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் கைச்சாத்திடப்பட உள்ளது என்று கிங்ஸ்ரன் சபையின் அதிகாரபூர்வ இணையத் தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்துடன் நெருங்கிய தொடர்புகளை வலுப்படுத்துவதற்கும் இந்த ஒப்பந்தம் உதவும் என்று அந்தத் தகவல் தெரிவிக்கிறது.

சபையின் மாநாட்டு மண்டபத்தில் 18ஆம் திகதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது. இதுபோன்ற ஒப்பந்தங்களை ஜேர்மனியின் கூட்டன்பேர்க் மற்றும் தென்கொரியாவின் தலைநகர் சியோலில் உள்ள குவானக்-கு ஆகிய நகரங்களுடனும் கிங்ஸ்ரன் ஏற்கனவே செய்துகொண்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிறிய குழு ஒன்றும் லண்டன் வருவதாகவும் அதற்கான செலவுகள் அனைத்தும் அங்குள்ள மக்களிடம் இருந்து திரட்டப்பட்ட நிதியில் இருந்து மேற்கொள்ளப்படுவதாகவும் கிங்ஸ்ரன் சபை கூறியுள்ளது.

இந்தப் பயணத்தின்போது முதலமைச்சர் தலைமையிலான குழு கிங்ஸ்ரன் வைத்தியசாலைக்கும் பல்கலைக்கழகத்திற்கும் நேரில் சென்று பார்வையிடும். அங்குள்ள சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் குழுவுடனும் பேச்சு நடத்தும்.

இதற்காக எதிர்வரும் 16ஆம் திகதி முதலமைச்சர் இங்கிருந்து புறப்படுகிறார் என்று உதயன் அறிந்தது. அவருடன் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் இருவரும் பயணிக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்ட போதும் அவர்கள் யார் என்பது தெரியவரவில்லை.

முதலமைச்சரின் பயணமும் இந்த ஒப்பந்தமும் இங்கு இரகசியமாக வைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் கிங்ஸ்ரன் நகர சபையில் இந்த விடயம் விவாதிக்கப்பட்டு ஒப்பந்தத்துக்கான அனுமதியும் பெறப்பட்டுள்ளது. தனது பயணம் குறித்தோ தன்னுடன் பயணிக்கும் மாகாண சபை உறுப்பினர்கள் குறித்தோ முதலமைச்சர் இதுவரையில் மாகாண சபைக்கு எந்தத் தகவலும் தெரிவிக்கவில்லை என்றும் அறியவந்தது.

வெளிநாடுகளுடன் நேரடியாக ஒப்பந்தங்களைச் செய்துகொள்கிற அதிகாரம் மாகாண சபைகளுக்கு இல்லை என்கிறபோதும் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் எந்த அடிப்படையில் கைச்சாத்திடப்படுகிறது என்பது தெளிவுபடுத்தப்படவில்லை.

இது வெறும் புரிந்துணர்வு ஒப்பந்தம்தான், இதில் நிதிக் கையாளல்கள் எவையும் நடக்கவில்லை என்பதால் கொழும்பு இந்த ஒப்பந்தத்தை அனுமதித்திருக்கக்கூடும் என்றும் அந்த அனுமதியை முதலமைச்சர் இரகசியமாகக் கொழும்பிடம் இருந்து பெற்றிருக்கக் கூடும் என்றும் சட்ட வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்தனர். (உ-5, 101, ரி4)

## உட்கட்சிப்...

நாணயக்கார தெரிவித்ததாவது:

கட்சியின் தலைமைத்துவத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் விக்னேஸ்வரன் இவ்வாறு போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். அதன் பின்னணியில் காலனித்துவ சக்திகள் செயற்பட்டன.

தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அதற்காகப் பொருத்தமான அரசியல் தீர்வு ஒன்று வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாக இருக்கின்றோம். ஆனால், நாட்டைப் பிரிக்காமல் ஒற்றையாட்சிக்குள்தான் அது வழங்கப்பட வேண்டும். அந்த ஒற்றையாட்சியைச் சிதைக்கும் வகையில்தான் இப்போதைய ஆட்சி காய் நகர்த்துகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒற்றையாட்சியைச் சிதைக்கும் வகையில்தான் அமைந்துள்ளது.

புதிய ஆட்சியை உருவாக்குவதற்கு சம்பந்தன் உதவ முன்வந்தமை இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான். இந்த ஒப்பந்தம் இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை. இரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளது. இது உடன் வெளியிடப்பட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிகழ்ச்சி நிரலுக்கு உடன்பட மறுக்கும் எவருக்கும் கூட்டமைப்பின் ஆதரவு கிடைக்காது என்பதை நாம் அறிவோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்குகின்றது என்றால் ஒற்றையாட்சிக்கு எதிரான அவர்களின் நிலைப்பாட்டுக்கு அரசு உடன்பட்டுவிட்டது என்றே அர்த்தம். இந்தச் சதியின் பின்னணியில் அமெரிக்காவும் உள்ளது.

உலக வல்லரசு என்ற அந்த மதிப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்கு அமெரிக்காவுக்கு ஆசியா கண்டமும் முக்கியமாகத் தேவைப்படுகின்றது. ஆசியாவின் மிக முக்கிய நாடாக இலங்கை அமைந்துள்ளது. இலங்கையின் திருகோணமலை மாவட்டம் இதற்கெல்லாம் மிக முக்கியமான கேந்திர நிலையமாகத் திகழ்கின்றது.

இந்தக் கேந்திர நிலையத்தைக் கைப்பற்றுவதற்கு அமெரிக்கா முயற்சி செய்கின்றது. வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்டால் அமெரிக்கா மிக இலகுவாக திருகோணமலைக்குள் நுழையும்.

இதற்காக அமெரிக்கா வடக்கு - கிழக்கை இணைப்பதற்கும் கூட்டமைப்பின் ஏனைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கும் முயற்சி செய்கின்றது. இதற்கு ஏற்பவே ஒற்றையாட்சியைச் சிதைக்கும் ஒப்பந்தம் ரணிலுக்கும் சம்பந்தனுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ளது என்றார். (வ-5)

## கொழும்புக்கு...

விஜயமுனி தலைமையில் நேற்று அதிகாலை வழமையான வீதிச் சோதனைகள் இடம்பெற்றன. இதன் போது ஏ-9 வீதி, வவுனியா மன்னார் சந்தியில் ஹைறயேஸ் ரக வான் ஒன்று மறித்து சோதனையிடப் பட்டது.

இந்தச் சோதனை நடவடிக்கையின் போது வாகனத்தின் இருக்கை பகுதிகளில் வழைக்குலைகள் காணப்பட்டன. வாழைக் குலைகளுக்கு நடுவில் பொதிகளும் காணப்பட்டன. சந்தேகத்தில் அந்த பொதிகளை சோதனையிட்ட போது, இந்தக் கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன. அத்தோடு கஞ்சா கொண்டு செல்லப்பட்ட வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டார். கைது செய்யபப்பட்ட சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, மீட்கப்பட்ட கஞ்சா யாழ்ப்பாணம் சாவகச்சேரியிலிருந்து கொழும்பு கொண்டு செல்லப்பட்டது தெரியவந்தது. இதனுடைய பெறுமதி ஒன்றரைக் கோடிக்கு ரூபாய்க்கு மேலானது. இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (வ-5-21)

## சிகரெட்...


நேற்று அறிவித்தார்.

இதன்படி சிகரெட் ஒன்றின் புதிய விலையான 42 ரூபா நேற்று செவ்வாய்க்கிழமை முதல் நடைமுறைக்கு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, சிகரெட் ஒன்றுக்கு 11 ரூபா விலை அதிகரிப்புக்குக் கடந்தவாரம் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. எனினும் 7 ரூபா மாத்திரமே தற்போது அதிகரிக்கப்பட்டது என்று நிதி அமைச்சர் தெரிவித்தார். (வ-4,5)

## மரண அறிவித்தல்

### டாக்டர் ஸ்ரீதரன் (M.(V).Sc)



மண்ணில் மலராய் 19.03.1946 — விண்ணில் சருகாய் 03.10.2016

**(மேலதிக பணிப்பாளர்- கால்நடை திணைக்களம் - பெரதேனியா)**

யாழ்ப்பாணம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வவுனியா மற்றும் மட்டக்களப்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட டாக்டர் ஸ்ரீதரன் (முன்னாள் கால்நடை வைத்திய அதிகாரி) நேற்று முன்தினம் (03.10.2016) திங்கட்கிழமை காலை காலமானார்.

அன்னார் முன்னாள் தலைமை ஆசிரியர்களான பிள்ளையினார் - பரிமளம் தம்பதிகளின் ஏக புதல்வனும், ஸ்ரீரதி, ஸ்ரீமதி (முன்னாள் தாதி உத்தியோகத்தர் - ஓமான்- மட்டக்களப்பு), ஸ்ரீசாந்தினி (முன்னாள் ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி விரிவுரையாளர்), ஸ்ரீவதனி (சட்டத்தரணி), ஸ்ரீமலர் (கால்நடை வைத்தியர் - கனடா), ஸ்ரீலதிக்கா (பிரான்ஸ்) ஆகியோரின் அருமை அண்ணாவும், காலஞ்சென்ற ந.குருசாமி ( T.O வவுனியா), வடிவேல் (தாதி - ஓமான், மட்டக்களப்பு) மற்றும் M.A.செல்வராஜா (பாதுகாப்பு முகாமையாளர் - கோடன் ஈகிள் பாதுகாப்புச் சேவை, யாழ்ப்பாணம்), குமாரவேல் (பொறியியலாளர் - கொழும்பு), சிவபாலன் (கனடா), காலஞ்சென்ற சாந்திரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், அகிலன் (அதிபர் -வ/ பெரியமடு அம்பாள் வித்தியாலயம்), தர்சினி (ஆசிரியர் - வ/ அல்மதீனா வித்தியாலயம்), தர்சன்,சுதர்சன் ( கனடா), சிந்துஜா (லண்டன்), நிரூஜன், நிரூபன், சமிளா, சர்மிகா, ஸ்ரோபன், டிலான் ஆகியோரின் மாமாவும், சாருகன், மிதுஜன், ஜனுசா, கசித்தா, சைலன், தனுஷா, நிமா, சிடான் நிக்ஸ்மன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2016) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் இல.25/15, முதலாம் ஒழுங்கை, பொதி மண்டப வீதி, தோணிக்கல், வவுனியாவில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சகோதரர்கள், மருமக்கள்.

(J/5115) (11,16)

**077 665 2100**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்லப்பாக்கியம் மகாலிங்கம்

தோற்றம் 01 . 05 . 1954



மறைவு 03 . 10 . 2016

நவிண்டில் அக்கத்தனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லப்பாக்கியம் மகாலிங்கம் 03.10.2016 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மகாலிங்கத்தின் அன்பு மனைவியும், பிரதீபன் (தீபன்), அமுதா, பிரசாந்தன் (சாந்தன் - ஆசிரியர் வவுனியா பட்டிக்குடியிருப்பு அ.த.க. பாடசாலை), அஜந்தா (சுவிஸ்), அனுசா, வைஸ்ணவி ஆகியோரின பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (05.10.2016) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அக்கத்தனை நவிண்டில் — மகன் - ம.பிரசாந்தன் (ஆசிரியர்)

(எண்.151) (13.16)

### சின்னத்தம்பி கிருஸ்ணபிள்ளை (கிட்டினர்)



அச்செழுவைப் பிறப்பிடமாகவும், நீர்வேலியை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கிருஸ்ணபிள்ளை (கிட்டினர்) நேற்று (04.10.2016) செவவாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான நித்தியானந்தம் (ஆனந்தப்பா), ஜெயானந்தம் மற்றும் நித்தியலட்சுமி, ஜெயலட்சுமி (லண்டன்), விஜயலட்சுமி ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, மாரிமுத்து, பொன்னம்மா, தம்பிராசா மற்றும் அன்னமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான இளையாம்பி, கந்தையா, கனகம்மா, அம்பிகை, செகராஜா, விக்கினேஸ்வரி, மகேஸ்வரி, இராஜேஸ்வரி மற்றும் கமலேஸ்வரி (கனடா), பஞ்சநாதன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான வைரவநாதன், பரராஜசிங்கம், குணரத்தினம் மற்றும் கந்தசாமி (கனடா), மகேஸ்வரி (கனடா) ஆகியோரின் சகலனும், ராகினி (சுவிஸ்), விஜயரத்தினம், பத்மகுமாரன் (இத்தாலி ), நந்தகுமார் ஆகியோரின் மாமனாரும், கார்த்திகா, கார்த்திகன், கீர்த்திகா, மயூரிகா, தர்சிகன் (சுவிஸ்), நிரோசன், தனுசியா, யசி, சுகனியா (லண்டன்), கபீஷன், சபீஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2016) புதன்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனககிரியைக்காக சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible] நீர்வேலி [illegible]

தகவல்: குடும்பத்தினர்.

(J/5120) (11,17,18)

**077 990 0035**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனை அபிவிருத்திச்சபை
PALMYRAH DEVELOPMENT BOARD

### பனாட்டுக் கொள்வனவு

பனை அபிவிருத்திச் சபையினால் உற்பத்தியாளர்களிடமிருந்து தரமான பனாட்டு கொள்வனவு செய்யப்படுகின்றது.

**நிர்ணயிக்கப்பட்ட விலை**
ஒரு கிலோகிராம் ரூபா 350.00 ஆகும்.

**இடம்**
உற்பத்தி நிலையம், பனை ஆராய்ச்சி நிறுவனம்,
பனை அபிவிருத்திச் சபை,
கண்டி வீதி, கைதடி,
யாழ்ப்பாணம்.

**காலம்**
கிழமைநாள்களில் (திங்கள்-வெள்ளி),
மு.ப 10.00 மணிமுதல் பி.ப 3.00 மணிவரை

தொடர்புகளுக்கு
முகாமையாளர் (உற்பத்தி), பனை அபிவிருத்திச் சபை,
யாழ்ப்பாணம்.
021 2222034


## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



கண்மகிழ
1989 . 02 . 19

கண்நெகிழ
2013.10.05

அமரர்
**சோகேஸ்வரன் கஜேந்தன்**
(யாழ்.பல்கலைக்கழக இறுதி நிலை மாணவன்)

எங்கள் பாசச் செல்வமே
ஆயிரம் ஆயிரம் ஆசைக்கனவுகள்
சுமந்து உன்னை ஆராதித்து வளர்த்து வந்தோம்
அத்தனையும் பொய்யாக்கி விட்டுப் போனாயே
மூன்றாண்டுகள் கடந்ததும் உன் நினைவுகள்
மூன்றாயிரமாய் இருக்குதையா
மறுஜென்மம் ஒன்று உனக்கு இருக்கிறது
என்று நம்புகிறோம் மறுஜென்மத்திலும் எங்கள் குடும்பத்தில்
நீ மகனாய் மரை இறைவனை ஆராதிக்கின்றோம்.

கெருடாவில், சாவகச்சேரி.
077 7148082

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 | 05 |
| 10 | 09 |
| 1951 | 2016 |



திருமதி
**இந்திராதேவி (தேவி) பரமேஸ்வரன்**

கடந்த 05.09.2016 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (05.10.2016) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

[illegible]
[illegible]
[illegible]

பரமேஸ்வரன்
([illegible]),
பிள்ளைகள்.


**தேவை**
யாழ். நகரை அண்மித்த பகுதியில்
கடை வாடகைக்குத் தேவை.
077 9317532, 077 7721322, 071 5338123


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
**சிசிலிஅம்மா சபாநாயகம்**

தோற்றம்
31.12.1938

மறைவு
07.09.2016



அன்னாரின் ஆன்ம இளைப் பாற்றிக்காக நாளை (06.10.2016) வியாழக்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு ஏழாலை இசிதோர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

07.10.2016 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் நடராசா



தலைமன்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வண்ணமாதரை தெல்லிப்பழை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் நடராசா நேற்று (04.10.2016) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-நாகாத்தை தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா-சேதுப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் அழகம்மாவின் அன்புக் கணவரும் இராசநந்தினி(மாலா), இராசமலர்(றேனா), சாந்தினி(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரசேகரன், செல்வகுமார் (சுவிஸ்) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, இலட்சுமிப்பிள்ளை மற்றும் ஆறுமுகம், சபாபதி, காலஞ்சென்ற சிவகுரு ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான முருகையா, இராசம்மா மற்றும் கனகம்மா, மகேஸ்வரி, அன்னலட்சுமி, காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் புஸ்பலீலா, புஸ்பராணி, தம்பிரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் அனுஷா-சசிக்குமார், யனீபா, கார்த்திகன், கரிக்ஷன் (சுவிஸ்), கரிகரன்(சுவிஸ்), சரூபிகா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் நிசானா, ஸகானா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வண்ணமாதரை,
தெல்லிப்பழை கிழக்கு.

தகவல்: **குடும்பத்தினர்.**
077 6575737, 021 3737959

## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் விக்னேஸ்வரன் (விக்கி)



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட அம்பலவாணர் விக்னேஸ்வரன் நேற்று (04.10.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்- சிவக்கொழுந்து தம்பதியரின் புதல்வனும் லவபூசனத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, சரஸ்வதி மற்றும் பாலசிங்கத்தின் அன்புச் சகோதரனும் உமா, பாமா, ரமா ஆகியோரின் பாசமிகு தந்தையும் அரவிந்தன், கனேசன், கனேஸ்ராஜ் ஆகியோரின் மாமனாரும் மாலவன், நித்திலன், லவன், மிதுலன், அரங்கவி, அபிநயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆலடி வீதி,
கோண்டாவில் கிழக்கு.

தகவல் :
அ. பாலசிங்கம்

6ம/4532)(12.18)

## மாகாணத்தின்...

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மாணவியான உமாசங்கர் ஜெஜனி 194 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைப் பிடித்தார். அதே பாடசாலையைச் சேர்ந்த மாணவன் கேதீசன் துசானன், யாழ்.பொஸ்கோ பாடசாலை மாணவன் கிளமென் பற்றிக் டில்சான் பற்றிக் ஆகியோர் தலா 191 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தைப் பெற்றனர்.

வவுனியா மாவட்டத்தில் இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியால மாணவன் குகதாசன் ஏரகன் 189 புள்ளிகள் பெற்று மாவட்டத்தில் இரண்டாமிடத்தைப் பெற்றார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் 3 பேர் தலா 182 புள்ளிகள் பெற்று மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றனர். முரளிதரன் அபிசங்கர், முகுந்தன் தேனகன், சந்திரசேகரம் புகழ்வேந்தன் ஆகியோரே முதலாமிடத்தைப் பெற்றனர்.

இதே பாடசாலையைச் சேர்ந்த மாணவி தமிழ்ச்செல்வன் எழிலரசி, புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தைச் சேர்ந்த சாந்தரூபன் சாதுரியா ஆகியோர் தலா 181 புள்ளிகளுடன் மாவட்டத்தில் 4 ஆவது இடங்களைப் பெற்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சி ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த மாணவன் யுகதீபன் யுகான் 191 புள்ளிகள் பெற்று முதலாமிடத்தைப் பெற்றார். அவரது தாய் குடும்பப்பெண். தந்தையார் விற்பனை முகவர்.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆ.கிருசோந் 190 புள்ளிகள் பெற்று மாவட்டத்தில் இரண்டாமிடத்தைப் பெற்றார்.

மாகாணத்தில் முதலாமிடம்பெற்ற அபிசிகன், 'நான் கல்வி கற்க பெற்றோரும், ஆசிரியர்களும், கடந்த வருடம் புலமைப்பரிசிலில் சித்தி பெற்ற தனது சகோதரனும், சக மாணவர்களும் உதவியிருந்தனர். தனியார் கல்வி நிலையத்திலும் கல்வி கற்றேன். அனைவருக்கும் நன்றி. எதிர் காலத்தில் பொறியியலாளராக வரவேண்டும் என்பது எனது இலட்சியம்.' என்றார். அவரின் தாய், தந்தை ஆகிய இருவரும் ஆசிரியர்கள். அவர்கள் அதே பாடசாலையில் கற்பிக்கின்றனர்.

இதேவேளை, மாவட்ட வெட்டுப் புள்ளிகள் நேற்றிரவு அறிவிக்கப் பட்டது. அதன்படி யாழ். மாவட்டத்துக்கு 152, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகியவற்றுக்கு 151 என்றும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், இந்தப் பெறுபேறுகளின் அடிப்படையில் விடைத்தாள் மீள் திருத்தத்துக்கு விண்ணப்பிப்போர் பாடசாலை அதிபர் ஊடாக நவம்பர் மாதம் 4ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பரீட்சைகள் ஆணையாளர் அறிவித்தார்.

இந்தப் பரீட்சையில் இம்முறை சுமார் 3 லட்சம் மாணவர்கள் தோற்றியிருந்தனர். இதில் 421 பேர் சிறப்புத் தேவையுடைய மாணவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4,101,102)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விக்கியின்...

கூற்றொன்றை மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினரான தினேஸ் குணவர்தன விடுத்தார்.

'யாழ்ப்பாணத்தில் ஊர்வலம் நடத்தப்பட்டது. இதில் உரையாற்றிய வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன், இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டும் என்றும், சிங்கள மக்களைக் குடியேற இடமளிக்க முடியாது என்றும், விகாரைகள் அமைக்க அனுமதிக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

அவரின் இந்த அறிவிப்பு அரசமைப்புக்கும், பௌத்த சாசனத்துக்கும் முரணாக இருக்கின்றது. அதை நாம் கண்டிக்கின்றோம். இது விடயத்தில் அரசு ஏன் மௌனம் காக்கின்றது? விக்னேஸ்வரனின் அறிவிப்பு தொடர்பில் அரசின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு என்ன?' என்று நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த சபை முதல்வரான அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, "மேற்கண்டவாறு தான் எதையும் கூறவில்லை என்று வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். ஆனால், இவர்கள் காலையில் எழுந்தவுடனேயே இனவாதம் பேசுவதற்கு எதையாவது ஒன்றை எடுத்துக் கொள்கின்றனர்" என்று சற்று ஆவேசமாகப் பதிலளித்தார்.

இதன்போது மகிந்த அணியினர் சபையில் கூச்சலிட்டனர். இதனால், கொதித்தெழுந்த அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, "மிரட்டல் விடுத்து பதில் வாங்க முயற்சிக்க வேண்டாம். அரசின் நிலைப்பாட்டை பிரதமர் அறிவிப்பார்" என்று கூறிவிட்டு ஆசனத்தில் அமர்ந்தார்.

இதன்பின்னர், எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் விளக்கமொன்றை முன்வைத்தார். அவரின் பேச்சைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ச,

ஊர்வலத்தின் போது தான் கூறிய கருத்துகளை மறுப்பதாக விக்னேஸ்வரன் கூறியதாக எங்கும் தகவல் வெளியாகவில்லை. அத்துடன், அது விக்னேஸ்வரனின் தனிப்பட்ட கருத்து என்று இவர்கள் கூறுகின்றனர். இதை ஏற்க முடியாது. விக்னேஸ்வரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டார். எனவே, விக்னேஸ்வரன் உடன் பதவி நீக்கப்பட வேண்டும் அல்லது அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார். இதன்போது குறுக்கீடு செய்த சபாநாயகர் கரு ஜயசூரிய, "இதை விவாதப் பொருளாக்க முடியாது. விடயத்துக்குள் செல்வோம்" எனக் கூறி நிலைமையைக் கட்டுப்படுத்தினார். (வ-5)

## தெற்கில்...

வெளியிட்டார் எனச் சுட்டிக்காட்டி, அது தொடர்பில் அரசின் நிலைப்பாட்டை சபையில் நேற்றுக் கோரியிருந்தார் மகிந்த ஆதரவு பொது எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன.

இதன்போது ஆளும் எதிரணி உறுப்பினர்களுக்கிடையில் கருத்துப் பரிமாறல்கள் இடம்பெற்றன. அந்த வேளையிலேயே சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

"இந்த விடயத்தை சர்ச்சைக்குள்ளாக்க விரும்பவில்லை. நிகழ்வில் நாம் கலந்துகொள்ளவுமில்லை. கலந்துகொள்ளாததற்குப் பல காரணங்களும் இருக்கின்றன. பல்வேறு விடயங்கள் தொடர்பில் அரசுடன் நாம் கலந்துரையாடி வருகின்றோம். இந்த அனைத்து விடயங்கள் தொடர்பிலும் தீர்க்கப்படவேண்டிய விவகாரங்கள் தொடர்பிலும் இணக்கப்பாட்டுடனான ஏற்பாடுகள் கலந்துரையாடல்கள் அடிப்படையில் அனைவரினதும் மத்தியிலும் பொது இணக்கப்பாடொன்று எட்டப்படவேண்டும் என்றே நாம் விரும்புகின்றோம்.

வடக்கிலும், அதேபோல் கிழக்கிலும் உள்ள மக்கள் நீண்டகாலமாகத் துன்பங்களை அனுபவித்து வந்துள்ளனர். இவ்வாறான விடயங்களில் அரசின் மந்தகதியான செயற்பாடு குறித்து அதிருப்தி தெரிவித்து இந்தச் சபையில் நான் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் முறையிட்டிருக்கின்றேன். அவை தொடர்பில் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்த நிகழ்வைப் பொறுத்தவரையில் வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனின் பேச்சு அச்சு மற்றும் இலத்திரனியல் என இரண்டு ஊடகங்களிலும் வெளியாகியிருந்தன. இதன்போது அவர் கூறியதாகத் தெரிவிக் கப்படும் அனைத்து விடயங்களையும் அவர் அங்கு பேசியிருந்தார் என்று நான் கருதவில்லை. உண்மையில், தான் கூறியதாகக் காரணம் கூறப்பட்ட விடயங்களுக்கு அவர் பின்னர் மறுப்பும் வெளியிட்டிருந்தார். அவர் இந்தச் சபையில் இல்லாத நிலையில் அவருக்கு இங்கு நியாயம் கிடைக்கவேண்டும். அவர் மிகவும் பொறுப்பான நபர். மக்களால் தெரிவு செய்யப்பட்டு வடக்கு மாகாண முதலமைச்சராக இருக்கும் அவர், உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசர். வடக்கு மக்கள் அவரைக் கணிசமான பெரும்பான்மை வாக்குகளால் தெரிவுசெய்தனர். அவர் கூறியதாகக் காரணம்காட்டப்படும்கருத்துகளைதாம்வெளியிட்டிருக்கவில்லை என்று அவர் கூறும்போது, இந்த விவகாரம் பற்றிக் கருத்து வெளியிடுபவர்கள் அதற்கு முன்னதாக உண்மை என்ன என்பதைக் கண்டறிந்து உறுதிப்படுத்தவேண்டும். விக்னேஸ்வரன் தமிழில் பேசிய பேச்சு எனக்குக் கிடைத்தது. நான் அதை வாசித்திருந்தேன். அந்தவகையில் எனது நிலைப்பாடு என்னவென்றால், அவர் கூறியதாகக் காரணம் காட்டப்படும் பல்வேறு கருத்துக்களும் அவரால் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை." என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மேலும் தெரிவித்தார். (வ-4)

## மரண அறிவித்தல்

### கார்த்தி சுப்பிரமணியம்

(ஓய்வு நிலை எழுதுநர் - சாவகச்சேரி, டிறிபேக் கல்லூரி)



மட்டுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், அரசடி வீதி, கல்வயல் சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட கார்த்தி சுப்பிரமணியம் நேற்று (04.10.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்தி - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ் சென்றவர்களான சின்னப்பு - நாகம்மா தம்பதியரின் அன்புமருமகனும் புவனேஸ்வரியின் அன்புக்கணவரும் சுமத்திரன், கிரிதரன், சந்திரதாஸ், சுதர்மா, துளசிதாஸ், பிரசாத் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுபிதா, பேபிரமணி, றோமி, தர்மேந்திரா, நிறோசனா ஆகியோரின் அன்புமாமனும் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை மற்றும் நல்லம்மா, சரஸ்வதி, தவமணி, அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரனும் தனுசன், ரம்மியா, கிர்சன், கபிசன், நிர்னன், கமிர்னா, தர்சிகா, சஜீந்திரா, சஜித்திரா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.10.2016) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அரசடிச் சந்தி,**
**கல்வயல், சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 6648650**

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா துரைராஜா (பீற்றர்)

(இளைப்பாறிய சாலைப் பரிசோதகர்-
இலங்கை போக்குவரத்து சபை)



அல்வாய் தெற்கு பொன்னகத்தைப் பிறப்பிடமாகவும் பிரிந்தாவனத்தை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா துரைராஜா 02.10.2016 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான மயிலு-சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும் திரவியமலரின் பாசமிகு கணவரும் துஷ்யந்தினி(கணக்காளர், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கம், கரவெட்டி) யின் பாசமிகு தந்தையும் ஆதவனின் (பிரதம முகாமைத்துவ உதவியாளர் பிரதேச செயலகம், மருதங்கேணி) மாமனும் ஆதித்யா, கம்ஸத்வனி, லவீசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான தங்கத்துரை , தங்கம்மா, ஐயாத்துரை மற்றும் சிவபதியம்மா, சிவமலர் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், சீனித்தம்பி, இரத்தினேஸ்வரி, தங்கவடிவேல் மற்றும் தங்கவேல், சோதிடர் சிவகுருநாதன், காலஞ்சென்ற சிவநாதன் மற்றும் நவநீதன், திரவியராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.10.2016 ஞாயிற்றுக்கிழமை பி.ப 5.00 மணியளவில் அல்வாய் பங்கு வேம்படி இந்துமயானத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பிருந்தாவனம்,**
**அல்வாய்.**

**தகவல்:**
**ந.ஆதவன் (மருமகன்)**
**021 2261292,077 9503670**

### செல்வி ஞானரத்தினம் தம்பிஐயா (ஓய்வு பெற்ற ஆசிரியை)



இளவாலை பத்தாவத்தையைச் சேர்ந்த செல்வி ஞானரத்தினம்தம்பிஐயா (ஓய்வு பெற்ற ஆசிரியை) 03.10.2016 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா (இளைப்பாறிய ஓவசியர், சமாதான நீதிவான்) - றோசம்மா தம்பதியரின் புத்திரியும் காலஞ்சென்ற திரேசம்மாவின் பெறாமகளும் காலஞ்சென்ற துரைசிங்கம் (ஓய்வு பெற்ற கட்டடத்திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர், சமாதான நீதிவான்) மற்றும் அன்ரன் பாலசிங்கம் (ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி), பற்றிமா, இராஜகுலசிங்கம் (தம்பி), நீற்றா, மரியா ஆகியோரின் சகோதரியும் திருமதி புஸ்பவதி - துரைசிங்கம் (ஓய்வு பெற்ற முகாமையாளர் மக்கள் வங்கி), திருமதி இராசவதி - அன்ரன் பாலசிங்கம் காலஞ்சென்ற இரத்தினராசா (கடதாசி கூட்டுத்தாபனம்) மற்றும் திருமதி கிருபா - இராஜகுலசிங்கம், பவுலஸ் (ஓய்வு பெற்ற உதவி முகாமையாளர், இலங்கை வங்கி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று(05.10.2016) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் சேந்தாங்குளம் புனித ஆரோக்கியநாதர் சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பத்தாவத்தை,**
**இளவாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 1784042 ,071 1122247**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகம்மா ஆலாலசுந்தரேசன்

(இளைப்பாறிய ஆசிரியை யாழ்/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்)

**பிறப்பு 23.06.1937** — **இறப்பு 03.10.2016**



யாழ்.நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், அல்லைப்பிட்டி, திருநெல்வேலி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா ஆலாலசுந்தரேசன் (03.10.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சுவாமிநாதர் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சேதுபதி (புங்குடுதீவு) தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஆலாலசுந்தரேசனின் அன்பு மனைவியும் சுரேஸ், ரமேஸ் ஆகியோரின் பாசமிகு தாயும் மேருமதி, சித்ரா ஆகியோரின் அன்புமாமியும் பிரியா, திவ்யா, வித்யா, சேதுஸ் ஆகியோரின் ஆருயிர் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான குமாரவேலு, பொன்னம்மா, பார்வதிப்பிள்ளை மற்றும் முருகேசு ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான மீனாட்சிசுந்தரம், சோமசுந்தரேச்ன், சிவஞானசுந்தரம், சிவயோகசுந்தரம் மற்றும் சண்முகசுந்தரம் ஆகியோரின் அன்புமைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2016) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கலாசாலை வீதி, 8 ஆம் குறுக்குஒழுங்கை,**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**
021 2052224
+94 777031148

**தகவல்:**
**குடும்பத்தினர்**

### திருமதி மகேஸ்வரி இராசையா



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் இருபாலை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி இராசையா நேற்று (04.10.2016) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் (உரிமையாளர் இராசையா கிறசர்) இன் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கருணாகரன் - அன்னம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ் சென்றவர்களான வல்லிபுரம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் ,இராசரத்தினம், தம்பையா, தருமலிங்கம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரியும் இராஜேஸ்வரன், இராஜேஸ்வரி, கேதீஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயும் சந்திரவதனா, சந்திரரத்தினம், கங்காதரன் ஆகியோரின் அன்பு மாமியும் சஞ்சீபன், காயத்திரி, இரஜீபன், சுஜீபன், துவாரகன், தாட்சாயினி, கீர்த்தனன், வைசாலினி காலஞ்சென்ற திரிசாலினி, சுதர்சினி, குமரன், அனுத்திகா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் பிரணவி, ஜதுணவி, கஜோரிகா, கிஜானிகா ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2016) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தக்னக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோண்டாவில்,**
**இருபாலை வீதி,**
**கோப்பாய் தெற்கு.**

**தகவல்:**
**இ.இராஜேஸ்வரன்**
**(மகன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# தவான் விலகல்


நியூசிலாந்துக்கு எதிரான மூன்றாவதும் இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டத்திலிருந்து இந்திய அணியின் ஆரம்ப வீரரான தவான் விலகினார்.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாம் நாளில் தவான் துடுப்பெடுத்தாடிக்கொண்டிருந்தபொழுது வேகப்பந்து வீச்சாளர் போல்ட் வீசிய பவுன்சர் பந்தை தவறாகக் கணித்துக் கையில் காயமடைந்தார். அவர் ஆட்டமிழந்த பின்னர் அருகிலிருந்த மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு மருத்துவ பரிசோதனைகள் செய்து பார்க்கப்பட்டது.

நேற்று மருத்துவ அறிக்கை வெளிவந்தது. இதில் தவானுக்கு குறைந்தது ஒரு வார காலத்துக்கு கட்டாய ஓய்வு வழங்கப்படவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. இதையடுத்து இந்தியா, நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ள மூன்றாவதும் இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டத்திலிருந்து தவான் விலகினார். அவருக்குப் பதிலாக கருண் நாயர் அணியில் சேர்க்கப்பட்டார். லோகேஸ் ராகுலும் உபாதையிலிருப்பதால் ஆரம்ப வீரராக முரளி விஜய்யுடன்



கம்பீரரையா அல்லது கருண் நாயரரையா களமிறக்குவது என்ற சிக்கல் கோக்லிக்கு ஏற்பட்டுள்ளது. கம்பீருக்கே அதிக வாய்ப்பு இருப்பதாகக் கருதப்படுகிறது. (ம)




# டோனியைப் பின்தள்ளினார் கோக்லி தொடர்ச்சியாக அதிக வெற்றிகளில்

தோல்வியைக் காணாமல் தொடர்ச்சியாக அதிக டெஸ்ட் வெற்றிகளைப் பெற்ற இந்திய அணித் தலைவர் வரிசையில் டோனியைப் பின்தள்ளினார் கோக்லி.

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிபெற்றது. இந்த வெற்றி அணித்தலைவர் என்ற வகையில் கோக்லி பெற்ற 12 ஆவது தொடர் வெற்றியாகும். இந்த வெற்றியின் மூலம் அதிக டெஸ்ட் ஆட்டங்களைத் தொடர்ச்சியாகக் கைப்பற்றிய தலைவர்கள் வரிசையில் டோனியைப் பின்தள்ளி கோக்லி நான்காவது இடத்தைப் பிடித்தார்.

சுனில் கவாஸ்கர் 18 தொடர் வெற்றியுடன் முதலிடத்திலும், கபில் தேவ் 17 தொடர் வெற்றியுடன் இரண்டாவது இடத்திலும், அசாருதீன் 14 வெற்றியுடன் மூன்றாவது இடத்திலும், விராட் கோக்லி 12 தொடர் வெற்றியுடன் நான்காவது இடத்திலும், டோனி 11 வெற்றியுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர். (ம)

# நெருக்கடி நிலையில் ஆஸ்திரேலிய அணி

ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

தொடரில் ஐந்து ஆட்டங்கள். முடிவடைந்த முதல் இரு ஆட்டங்களில், முதலாவது ஆட்டத்தில் 6 இலக்குகளாலும், இரண்டாவது ஆட்டத்தில் 142 ஓட்டங்களாலும் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி 2:0 என்று முன்னிலையில் உள்ளது. இதனால் இன்றைய ஆட்டத்திலும் அந்த அணி வெற்றிபெற்றால் தென்னாபிரிக்கா கிண்ணத்தை வெல்வது உறுதி. எனவே தொடரில் தனது இருப்பை இன்றுடன் இழக்காமல் நீண்டு நிலைபெறச் செய்ய வேண்டுமாயின் இந்த ஆட்டத்தில் வெற்றிபெறவேண்டும் என்ற கட்டாய நிலை ஆஸ்திரேலியாவுக்கு உள்ளது.

ஆஸ்திரேலியாவை வெற்றிபெற விடாமல் மூன்றாவது ஆட்டத்தையும் கைப்பற்றி கிண்ணத்தை எமதாக்குவதை உறுதிசெய்வோம் என தென்னாபிரிக்க அணியின் சகலதுறை வீரரான டுமினி தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# நீக்கப்பட்டார் டி மாட்டியோ

அஸ்டன் வில்லா கால்பந்தாட்ட அணியின் முகாமையாளராக இருந்த றொபேர்ட்டோ டி மாட்டியோ, குறித்த பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

சம்பியன்ஸ் லீக் தொடரில் விளையாடிவந்த அஸ்டன் வில்லா, போதியளவு திறமைகளை வெளிப்படுத்தாததன் காரணமாக அந்த அணியின் மீது அதிருப்தி ஏற்பட்டது. ரசிகர்களும் தொடர் தோல்விகளின் காரணமாக அணியை விட்டு தொலைதூரம் சென்றனர். தற்போது அஸ்டன் வில்லா 19 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது. முகாமையாளரான றொபேர்ட்டோ டி மாட்டியோவின் செயற்பாடே இந்தத் தோல்விகளுக்குக் காரணம் என்று பலதரப்பிடமிருந்தும் குற்றம் சுமத்தப்பட்ட நிலையில், அஸ்டன் வில்லா கால்பந்தாட்ட அணியின் நிர்வாகம் அவரைப் பதவியிலிருந்து விடுவித்தது. நேற்று நடைபெற்ற உயர்மட்டக் குழுக் கூட்டத்தின் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம)



# இந்தியா விழுமாம் ரெய்லர் நம்பிக்கை

நியூசிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணியை தோற்கடிக்க கூடுதல் முயற்சி எடுக்கப்படும் என்று நியூசிலாந்தின் தலைவரான ரெய்லர் தெரிவித்தார்.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதலிரு ஆட்டங்களிலும் வெற்றிபெற்ற இந்திய அணி தொடரில் 2:0 என்று முன்னிலையில் உள்ளது. இந்த நிலையிலேயே ரெய்லர் இவ்வாறு தெரிவித்தார். இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்தே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஆட்டம் ஆரம்பித்த போது வேகப்பந்து வீச்சுக்கு சாதகமாக ஆடுகளம் அமைந்தது. இது நம்பிக்கையைத் தந்தது. ஆனால் இந்திய அணி சுழல் பந்துவீச்சில் மட்டுமல்ல வேகப்பந்து வீச்சிலும் பலமானது என்பதை நிரூபித்துவிட்டது. அந்த அணியில் சமநிலைத் தன்மை சிறப்பாகப் பேணப்படுகிறது. மொத்தத்தில் ஓர் பலமான அணியால்தான் நாம் தோற்கடிக்கப்பட்டோம். ஆனால் அடுத்த ஆட்டத்தில் நிச்சயம் நாம் மீண்டு எழுவோம். இந்திய அணியை வீழ்த்த கூடுதல் முயற்சி எடுக்கப்படும். 2:1 என்று தொடரை நிறைவு செய்யவே விரும்புகிறோம் என ரெய்லர் மேலும் தெரிவித்தார். (ம)

# யாழ். இந்துக் கல்லூரிக்கு மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், ஒக். 5

மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை நடத்தும் கூடைப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் யாழ். இந்துக் கல்லூரி அணி மூன்றாம் இடத்தைக் கைப்பற்றியது.

அழைக்கப்பட்ட பாடசாலைகளின் 17 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையே முன்னெடுக்கப்பட்ட இந்தத் தொடரின் மூன்றாம் இடத்துக்கான ஆட்டம் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலையின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று மாலை நடைபெற்றது. யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதியது. நான்கு கால் பாதிகளைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது கால் பாதியின் முடிவில் இரு அணிகளும் தலா 15 புள்ளிகளைப் பெற்றிருந்தன. இரண்டாவது கால் பாதியை 14:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது யாழ். மத்தி. இதனால் முதல் பாதியின் முடிவில் யாழ். மத்திய கல்லூரி 29:27 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஆதிக்கம் செலுத்தியது.

மூன்றாவது கால் பாதியையும் 19:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ். மத்தியே கைப்பற்றியது. நான்காம் பாதியில் பெரும் ஆதிக்கம் செலுத்திய இந்துக் கல்லூரி 23:14 என்ற அடிப்படையில் கைப்பற்றியதை அடுத்து ஒட்டுமொத்த ஆட்டத்தின் முடிவும் யாழ். இந்துக் கல்லூரிக்கு சாதகமாக அமைந்தது. முடிவில் 66:62 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ். இந்துக் கல்லூரி வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைக் கைப்பற்றியது.



(ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 5

**மனோகராவின் கால்பந்தாட்டம்**

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில், பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அண்ணா சிலையடி அணியை எதிர்த்து கழுகுகள் அணியும், மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆதி சக்தி அணியை எதிர்த்து நியூவாரியஸ் அணியும் மோதவுள்ளன.

**சோமஸ்கந்தனின் கரப்பந்தாட்டம்**

புத்தூர் சோமஸ்கந்தன் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், குறித்த கழகத்தின் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் தமிழ் மதி அணியை எதிர்த்து நியூவாரியஸ் அணியும், இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வழக்கம்பரை அம்பாள் அணியை எதிர்த்து கெருடாவில் விவேகானந்தா அணியும், இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்சுவேலி கலைமகள் அணியை எதிர்த்து புத்தூர் நண்பர்கள் அணியும் மோதவுள்ளன.

**மயிலங்காடு வி.க. கால்பந்தாட்டம்**

மயிலங்காடு விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரிமைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விளான் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

**கழுகுகள் வி.க. கால்பந்தாட்டம்**

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் மாகாண ரீதியாக முன்னெடுத்துவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் சென். ஜோசவ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.(ம-422-23-108)



# கொக்குவில் இந்து சம்பியன் உடுவில் மகளிரை வீழ்த்தி

யாழ்ப்பாணம், ஒக். 5

மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை நடத்திய கூடைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை வீழ்த்தி சம்பியனாது கொக்குவில் இந்துக் கல்லூரி அணி.

மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலையின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று மாலை இந்த ஆட்டம் நடைபெற்றது. நான்கு கால் பாதிகளைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் கால் பாதியை 13:9 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது கொக்குவில் இந்து. இரண்டாவது கால்பாதியை 13:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது உடுவில் மகளிர் கல்லூரி அணி. முதல் பாதியின் முடிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 23:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது. மூன்றாவது கால் பாதியை 10:9 என்ற புள்ளிகளின் அடிப்படையிலும், நான்காவது கால்பாதியை 15:13 என்ற புள்ளிகளின் அடிப்படையிலும் கைப்பற்றிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி முடிவில் 48:44 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-23)

# திக்கம் இளைஞர் போராடி வென்றது

யாழ்ப்பாணம், ஒக். 5

ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் திக்கம் இளைஞர் அணி போராடி வெற்றிபெற்றது.

உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் திக்கம் இளைஞர் வி.கழகத்தை எதிர்த்து கொலின்ஸ் வி.கழகம் மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா மூன்று கோல்களைப் பதிவு செய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 5:4 என்ற கோல் கணக்கில் போராடி வெற்றிபெற்றது திக்கம் இளைஞர் வி.கழகம். (ம-23)

# மனோகராவின் தொடரில் பொம்மர்ஸ் முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 5

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வதிரி பொம்மர்ஸ் அணி வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது.

மனோகரா வி.கழக மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெற்றது. வதிரி பொம்மர்ஸ் அணியை எதிர்த்து குறிஞ்சிக் குமரன் அணி மோதியது. கோல் கணக்கு இல்லாமல் முடிவடைந்தது முதல் பாதி. பவித்திரன் இரண்டாம் பாதியின் 31 ஆவது நிமிடத்திலும், உதயராஜ் 37 ஆவது நிமிடத்திலும் பொ்ம்மர்ஸின் சார்பாக கோல்களைப் பதிவுசெய்தனர். குறிஞ்சிக் குமரனால் பதில் கோலைப் பதிவுசெய்ய முடியவில்லை. முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது பொம்மர்ஸ். ஆட்டநாயகனாக பொம்மர்ஸ் அணியின் உதயராஜ் தெரிவானார். (ம-422)



# சென். பற்றிக்ஸ் - யாழ். மத்தி. இறுதியில் இன்று பலப்பரீட்சை





யாழ். மாவட்ட பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்ட 17 வயதுக்குட்பட்ட பிரிவினருக்கான 50 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது. யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்று காலை இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 04.10.2016 | வெற்றி வாரம் 2039 | வர்ணம் நீலம்
கும்பம்
வெற்றி இலக்கங்கள்
15 44 54 59
வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 4,616,860 /-

**வீடு வாடகைக்குண்டு**

வைமன் வீதி, நல்லூரில் 10 அறைகள் (7 அறைகளுக்கு இணைந்த குளியலறை உண்டு) மற்றும் 2 பெரிய ஹோல்ஸ் 2 கராஜ் கொண்ட மாடி வீடு வாடகைக்குண்டு.
அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**021 373 7036, 077 694 0340**

இவ் ஒவ்வொரு கதையும் வல்லமையை எடுத்துக் கூறுகின்றது அது தூண்டும், குணமாக்கும், முன்னெடுத்துச் செல்லும். நாம் அனைவரும் ஒரே தேசத்தவராய் முன்னோக்கிச் செல்லவே நாம் இந்தப் பாதையை வகுத்துள்ளோம்

#trailasone



காலி கராபிட்டியவில் நிர்மாணிக்கப்படவுள்ள புற்றுநோய் வைத்தியசாலைக்காக 750 மில்லியன் ரூபா நன்கொடை திரட்டுவதற்கான நடை பயணத்தில் நீங்களும் எம்முடன் இணையுங்கள். 678 கிலோ மீற்றர் தூரம் 28 நாள்களுக்கான நடைபயணத்திற்கு உற்சாகமும் உத்வேகமும் அளிக்க சிறிது தூரமாவது எம்முடன் இணையுங்கள்.

**உங்களுக்கு விரும்பிய இடத்தில் ஆரம்பித்து விரும்பிய இடத்தில் முடிக்கலாம்**

| திகதி | ஆரம்பிக்கும் நேரம் | ஆரம்பிக்கும் இடம் | வழித்தடம் |
|---|---|---|---|
| 06.10.2016 | 8.30 am | பருத்தித்துறை கடற்படை முகாம் அருகில் | பருத்தித்துறை யாழ்ப்பாணம் பாதை |
| 07.10.2016 | 5.30 am | வல்லை சந்தி | பருத்தித்துறை யாழ்ப்பாணம் பாதை |
| 08.10.2016 | 5.30 am | யாழ் துரையப்பா விளையாட்டு அரங்கம் அருகில் | A9பாதை |
| 09.10.2016 | 5.30 am | கொடிகாமம் புகையிரத நிலையம் அருகில் | A9பாதை |
| 10.10.2016 | 5.30 am | இயக்கச்சி சந்தி | A9பாதை |
| 11.10.2016 | 5.30 am | இரணைமடுச் சந்தி | A9பாதை |

மேலும் விவரங்களுக்கு
இன்றே trailsl.com தளத்திற்கு பிரவேசித்து
எம்முடன் இணையுங்கள்

Trail
பாதை
Walk · Unite · Heal

# செரபோவா மீதான தடை 15 மாதங்களாக குறைப்பு



நட்சத்திர ரென்னிஸ் வீராங்கனையான செரபோவா மீதான தடை 15 மாதங்களாக குறைக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்த வருடம் ஜனவரி மாதம் நடைபெறவிருந்த ஆஸ்திரேலியத் தொடருக்கான குருதி மாதிரிப் பரிசோதனையில் செரபோவா மெல்டோனியம் என்ற தடைசெய்யப்பட்ட மருந்தை உட்கொண்டமை கண்டறியப்பட்டது. இதனையடுத்து உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் 24 மாதங்கள் அதாவது 2 வருடங்கள் அவருக்குத் தடை விதிக்கப்பட்டது. இந்தத் தடையை செரபோவா ஏற்கவில்லை.

மெல்டோனியம் கடந்த ஜனவரி மாதத்தின் முதலாம் திகதியே தடை செய்யப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டது. கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிவரை விளையாட்டு உலகில் அது அனுமதிக்கப்பட்டே இருந்தது. நான் மெல்டோனியத்தை டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னரேயே எடுத்துக் கொண்டேன். மருந்து எனது உடலில் தற்போது வரை தாக்கம் செலுத்துவதுக்கு நான் பொறுப்பேற்க இயலாது என செரபோவா வாதிட்டார். இந்த வழக்கு பன்னாட்டு விளையாட்டு தீர்ப்பாயத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது. 2 வருடங்களாக இருந்த தடையை 15 மாதங்களாக குறைத்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

செரபோவாவின் கருத்து ஏற்றுக் கொள்ளக்கூடியதே. ஆனால் ஏனைய வீராங்கனைகளின் பங்குபற்றலை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே இந்தத் தீர்ப்பு வழங்கப்படுகிறது என மன்று குறிப்பிட்டது. கடந்த ஜனவரி மாதம் 26 ஆம் திகதியிலிருந்து செரபோவாவுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் அவர் களத் துக்கு திரும்ப முடியும். (ம)

# ஆடம்பரமான விடுதிகளைக் கட்டுகிறார் ரொனால்டோ



போர்த்துக்கல் அணியின் தலைவரும் ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரருமான ரொனால்டோ செவின் ஸ்ரார் அந்தஸ்து பெற்ற தனது இரண்டாவது விடுதியை நேற்றுமுன்தினம் திறந்து வைத்தார்.

உலகின் பணக்கார வீரர்களில் ரொனால்டோவுக்கும் தனியான இடமுண்டு. போர்த்துக்கல் அணியைவிட அவர் விளையாடும் கழக அணியான ரியல் மட்ரிட் கோடிக் கணக்கில் அவருக்குப் பணத்தைக் கொட்டிக் கொடுக்கிறது. தவிர அவருடன் ஒப்பந்தம் செய்ய பன்னாட்டு நிறுவனங்கள் பலவும் போட்டி போட்டு நிற்கின்றன. இவற்றின் மூலம் பெரும் தொகை சொத்துக்களுடன் உலகின் பணக்கார கால்பந்தாட்ட வீரராக வலம் வந்து கொண்டிருக்கும் ரொனால்டோ செவின் ஸ்ரார் அந்தஸ்துப் பெற்ற தனது இரண்டாவது விடுதியை நேற்றுமுன் தினம் திறந்து வைத்தார். கால்பந்திலிருந்து ஓய்வு பெற்ற தன் பின்னர் உலகெங்கும் விடுதிகள் பலவற்றை நிறுவுவதே தனது திட்டம் என அவர் தனது உரையில் குறிப்பிட்டார். (ம)

சீட்டிழுப்பு வாரம்: 51
சீட்டிழுப்பு திகதி 04.10.2016
ரூ. 96,605,520/=
I 07 48 69 72

சீட்டிழுப்பு வாரம் 502
2016.10.04
30 51 64 65 E
ரூ. 14,735,140/=

**ஆங்கிலம்** 3 மாத பயிற்சி நெறி
3 மாதங்களில் தமிழ்போல ஆங்கிலம் பேச...
இம்முறை A/L எழுதியோர், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர், இளைஞர் யுவதிகள் இணையமுடியும்!
சனி, ஞாயிறு வகுப்புக்கள் ஆரம்பம்: 08.10.2016
பிரிவு1. காலை 08-10 | பிரிவு 3. மாலை 01-03
பிரிவு2. காலை 10-12 | பிரிவு 4. மாலை 03-05
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட 3 மாதங்களிலேயே சரளமாக ஆங்கிலம்பேசமுடியும்!
பாடப்புத்தகங்கள் Video DVD என்பன இலவசம்.
பயிற்சிநெறி முடிவில் "Diploma Certificate"
SAAMSON
Expert in Language Training
யாழ்நகர்.
077 1570 486
021 320 3313

**தொழிற்பயிற்சிகள்**
*Mobile Phone Repairing Hardware, Software என்பன செய்முறைப்பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்
காலம் - 3 மாதம்
*Electronics TV. DVD Player, Receiver மற்றும் இலத்திரனியல் பொருள்கள் திருத்தும்முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம் - 10 மாதம்
*Air Conditioning Refrigirator Air - Condioner கள் சேவிஸ் செய்தல் திருத்தும்முறை பயிற்சியளிக்கப்படும்.
காலம் - 6 மாதம்
பயிற்சியின் முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படுவதுடன் நிறுவனங்களில் வேலை வாய்ப்புப் பெற்றுக் கொடுக்கப்படும்.
பயிற்சிகள் ஆரம்பம் - 09.10.2016
விவரங்கள் நேரில்
Jaffna Technical Institute
T.P : 077 8249949
No.23, பலாலி வீதி
யாழ்ப்பாணம்.
கிளை - New Asian Center
No. 56/15 B ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம்.
T.P : 077 9254078

கல்வியியலாளர் தெரிவுப் பரீட்சை வழிகாட்டியும் வழிகாட்டல் வகுப்பும் (SLTES)
திறந்த பரீட்சை 16ஆம் திகதியும் மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை 30ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.
இப் பரீட்சைக்கான வழிகாட்டி நூலை (750/-) யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவிலும் பிரபல புத்தக நிலையங்களிலும் பெறமுடியும்.
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
T.P 0766883394

முற்றிலும் இலவசமாக UK டிப்ளோமா
முன்பள்ளி/ஆரம்பப்பிரிவு
ஆசிரியர்களுக்கான டிப்ளோமா (ஆங்கிலம்)
அனுமதிகள் தற்போது வழங்கப்படுகின்றன.
சான்றிதழ் கட்டணம் மட்டுமே.
வகுப்புக்களில் நேரடிப் பயிற்சியும் திறமையானோருக்கு வேலைவாய்ப்பும் உண்டு.
077 9866409, 021 2216966

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.